219

தமிழ் வசனத்தை எளிதில் கற்கும் வழி

(தமிழ் வசனத்தை அதன் அமைப்புப்படி
கற்பதற்காக எழுதப்பட்ட புத்தகம்.)

இரண்டாம் பதிப்பு.

கி. பெ. சி. வ. பிரகாசம்,
நிர்வாகி,
பாலகுருகுல வித்யாலயம்,
விருதுநகர்.

1953

விலை 8 அணா

REGISTRAR OF BOOKS
JAN 1953
MADRAS

P31
N53

112197

தமிழ் வசனத்தை எளிதில் கற்கும் வழி

(தமிழ் வசனத்தை அதன் அமைப்புப்படி
கற்பதற்காக எழுதப்பட்ட புத்தகம்.)

இரண்டாம் பதிப்பு.



கி. பெ. சி. வ. பிரகாசம்,
நிர்வாகி,
பாலகுருகுல வித்யாலயம்,
விருதுநகர்.

1953

பதிப்புரிமை.

விலை 8 அணா

பொருளடக்கம்

பாடம்	விவரம்	பக்கம்
	முகவுரை:	1
1	ம-வரி மட்டும் முடிய உள்ள **143** எழுத்துக்கள் 143 எழுத்துக்களில் பயிற்சி	9
2	இரண்டெழுத்து குறில்-நெடில் சொற்கள் (ம – வரிமுடிய)	12
3	மூன்றெழுத்து குறில்-நெடில் சொற்கள் (ம – வரி முடிய)	13
4	மூன்றெழுத்துச் சொற்கள் (ம– வரி முடிய)	14
5	நான்கெழுத்துச் சொற்கள் (ம– வரி முடிய)	15
6	247 எழுத்துக்கள் (நெடுங்கணக்கு)	16
7	உச்சரிப்பு விளக்கப் படங்கள்	18
8	எழுத்துக்களை ஜோடி ஜோடியாக உச்சரித்து பேதங்களைத் தெரிந்து கொள்ளல்	19
9	**ன**– வரி எழுத்துக்களும், **ண**– வரி எழுத்துக்களும் கொண்ட சொற்கள்	20
10	**ர**–வரி எழுத்துக்களும், **ற**–வரி எழுத்துக்களும் கொண்ட சொற்கள்	21
11	**ல**– வரி எழுத்துக்களும் **ள**– வரி எழுத்துக்களும் கொண்ட சொற்களும் **ழ**– வரி எழுத்துக்கள் கொண்ட சொற்களும்	22

247 எழுத்துக்களில் சொற்கள்:

12	மூன்றெழுத்துச் சொற்கள்	23
13	நான்கெழுத்துச் சொற்கள்	24

14 ஐந்தெழுத்துச் சொற்கள் 25
15 ஆறெழுத்துச் சொற்கள் 26
16 ட், ற் என்ற மெய்யெழுத்துக்களுக்குப் பின் எந்த மெய்யெழுத்தும் வரக்கூடாது. வந்தால் பிழையாகும். 27
17 தமிழில் வழங்கும் வடமொழி எழுத்துக்கள் 65 27
18 வடமொழி எழுத்துக்கள் கொண்ட சொற்கள் 28
19 தப்பிதமாய் உச்சரிப்பதால் தப்பிதமாக எழுதப் படும் சொற்களும், அவற்றின் திருத்தமும் 29
20 சொற்களுக்கு முதலில் வரக்கூடிய குறில்-நெடில். எழுத்துக்கள் 30
சொற்களில் பயிற்சி

சொற்றொடர்

21 இயல்புச் சொற்றொடர் 32
22 தோன்றல் சொற்றொடர் 34
23 கெடுதல் சொற்றொடர் 36
24 திரிதல் சொற்றொடர் 37
25 பலவிகாரச் சொற்றொடர் 39
26 மெய்யும் உயிரும் சேர்ந்து உயிர்மெய் யெழுத்துக்கள் 42
27 சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவைகளை முதலெழுத்துக்களால் எழுதுதல் 45
28 பலவகைச் சொற்றொடர்கள் 47

வாக்கியம்

29 பெயர்ச்சொல் ஆண்பால் X பெண்பால் 50
30 பெயர்ச்சொல் ஒருமை—பன்மை 51

31 வேற்றுமை உருபுகள் சேர்ந்த உதாரண வாய்பாட்டுச் சொற்கள் 53
32 27 வினைமுற்றுகள் 58
33 வினைமுற்றுக்களை வாக்கியங்களாக அமைத்தல் 59
34 சிறுசிறு வாக்கியங்கள் 60
35 இதர வேற்றுமை உருபுகளும் வாக்கியங்களும் 62
36 நெருங்கிய ஒலிச் சொற்களை விளக்கும் வாக்கியங்கள் 64

சரள வாக்கியங்கள்

37 பசு 69
38 காகம் 71
39 தென்னை 72
40 விருதுநகர் 74
41 பாலகுருகுல வித்யாலயம் 76

கட்டுரைகள் (Compositions)

42 பசு 79
43 காகம் 81
44 தென்னை 83
45 விருதுநகர் 85
46 பாலகுருகுல வித்யாலயம் 87
எழுத்து, சொல், சொற்றொடர், வாக்கியங்கள் 89
ஆகியவைகளில் பயிற்சி 90
அநுபந்தம் 1 முதல் 24 பக்கங்கள்
எழுத்து, சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவைகளின் அமைப்பும் அவைகளைக் கற்றுக் கொடுக்கும் விதமும்.

முகவுரை.

தமிழ்மொழியை அதன் அமைப்புப்படி கற்ருல், எளிதாக விரைவில் கற்க முடிவதுடன், ஒரு பிழைகூட ஏற்படாமலும் கற்க முடியும். ஏனென்ருல் தமிழ் மொழியை உண்டாக்கிய வர்கள் அவ்வளவு மதி நுட்பத்துடன் அதை உண்டாக்கியிருக் கின்ருர்கள். இவ்வளவிற்கும் உலகத்தில் தோன்றிய மொழி களில் தமிழ் மொழியே முதல் முதலில் தோன்றியதாகும்.

தாளும் அச்சியந்திரசாலைகளும் தோன்றிய பிறகே உலகத் தில் எல்லா மொழிகளுக்கும் வசன நடையில் புத்தகங்கள் ஏற் பட்டு, அவைகளின் வசனத்தைக் கற்றுக்கொடுக்கப் புத்தகங் களும் ஏற்பட்டன. தாளும் அச்சியந்திரசாலைகளும் தோன்று முன், எல்லா மொழிகளுக்கும் நூல்கள் செய்யுளில்தாமிருந்து வந்தன.

தாளும் அச்சியந்திரசாலையும் ஏற்பட்ட பிறகு, புதிதாகப் புத்தக வடிவத்தில் வந்த தமிழ் வசனத்தை அதன் அமைப்புப்படி கற்க, 1872ல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் **பாலபாடம்** என்ற பெயரால் நான்கு தமிழ் வாசகப் புத்தகங்களை வரிசைக் கிரமமாக வெளியிட்டு நமக்கு வழி காட்டினுர்கள்.

நாவலர் அவர்கள் தமிழ் மொழியை நன்கு கற்றுத் தமிழ்ப் பெரும் புலவராக விளங்கினுர்கள். அதனுல் அவர்கள் தமிழ் மொழியின் அமைப்பு, இயல்பு, மரபு ஆகியவைகளை நன்கு தெரிந்திருந்தார்கள்.

தமிழுக்கு அதன் எழுத்துக்களின் உச்சரிப்புச் சத்தமும், சொல்லின் உச்சரிப்புச் சத்தமும் ஒன்றுபோலிருக்கும் (Phonetic Language) காரணத்தால் திண்ணைப் பள்ளிகள், மக்களுக்கு முதலில் தமிழ் 247 எழுத்துக்களை இராகத்துடன் கற்றுக் கொடுத்துக்கொண்டு, அவர்களை ஆத்திசூடி, கொன்றைவேந்தன், உலகநீதி, அம்மானை, நளவெண்பா முதலிய செய்யுட்களையே இராகத்துடன் பிழையின்றி, இனிமையாக எளிதில் வாசிக்கும்படி செய்துவந்திருக்கின்றன. இராகம் செய்யுளுக்கு ஏற்பட்டதே யன்றி வசனத்திற்கு ஏற்பட்டதன்று. செய்யுட்களைப் புலவர்களே நன்கு கற்க முடியும். ஆனுல், வசனத்தை எல்லோரும் எளிதில் கற்கலாம். எனவே வசனம் ஏற்பட்ட பிறகு, எவரும் வசனத்தைக்

கற்காமல் முடியாது என்ற நிலைமை உலகத்தில் ஏற்பட்டுவிட்டது. இவைகளை எல்லாம் நன்கு அறிந்த நாவலர் அவர்கள் புதிதாகத் தோன்றிய தமிழ் வசனத்தை அதன் அமைப்புப்படி எளிசாகக் கற்க அதை **எழுத்து, சொல், சொற்றொடர், வாக்கியம்** எனப்பிரித்து, அவைகளைக் கற்கப் புத்தகங்களை வெளியிட்டு உதவினார்கள்.

தமிழுக்கு அதன் எழுத்துக்களின் உச்சரிப்புச் சத்தமும், சொல்லின் உச்சரிப்புச் சத்தமும் ஒன்றாக இருப்பதால், தமிழ்ச் சொற்களை எழுதவாசிக்கக்கற்பதற்கு, தெரிந்தசொற்களாகஇருக்க வேண்டுமென்பதோ, படங்கள் வேண்டுமென்பதோ, கொஞ்சம் கொஞ்சமாகச் சொற்களைக் கற்க வேண்டுமென்பதோ அவசிய மில்லை என்பதற்கும், சொற்களை இரண்டெழுத்துச் சொற்கள், மூன்றெழுத்துச் சொற்கள், நான்கெழுத்துச் சொற்களென்றுபடிப் படியாகக் கற்க வேண்டுமென்பதற்கும் நாவலர் அவர்கள் தமது பாலபாடப் புத்தகத்தின் மூலமாக நமக்கு வழி காட்டியிருக் கிறார்கள்.

தமிழுக்கு அதன் எழுத்துக்களின் உச்சரிப்புச் சத்தமும், சொல்லின் உச்சரிப்புச் சத்தமும் ஒன்றுபோல் இருப்பதால், தமிழ் எழுத்துக்களை நன்கு கற்றுவிட்டால் "பசு பால் கொடுக் கும்." என்ற வாக்கியத்தையோ வேறு எந்த வாக்கியத்தையோ அதன் எழுத்துக்களால் அப்படியே வாசித்து விடலாம், எழுதி விடலாம். தமிழ் எழுத்துக்களைத் தனியாகக் கற்கும்போது, அவைகளுக்கு என்ன உச்சரிப்புச் சத்தமும் வடிவமும் உண்டோ, அதே தான் அவைகள் சொற்களிலும், சொற்றொடர்களிலும், வாக்கியங்களிலும் வரும்போதும் உண்டு.

உலகத்திலுள்ள இருவகை மொழிகளில், தமிழ் ஒரு வகை யையும், ஆங்கிலம் இன்னொரு வகையையும் சேர்ந்ததாகும். தமிழ் முதலிய இந்திய மொழிகள், எழுத்தொலியும் சொல்லொலி யும் ஒன்றாக இருக்கும் வகையையும்(Phonetic Language)ஆங்கிலம் முதலிய ஐரோப்பிய மொழிகள், எழுத்தொலியும் சொல்லொலியும் வெவ்வேறாக இருக்கும் வகையையும் (Un-phonetic Language) சேர்ந்தவையாகும். இவைகளில் எழுத்தொலியும் சொல்லொலியும் ஒன்றாகஇருக்கும் மொழிகளைக் கற்பது மிகமிக எளிது. இவை

களுக்கு எழுத்தை மட்டும் கற்றுக்கொடுத்தால் போதும், சொல்லை எழுத வாசிக்கக் கற்றுக்கொடுக்க வேண்டியதில்லை எழுத்தொலியும் சொல்லொலியும் வெவ்வேறாக இருக்கும் மொழிகளைக்கற்பது மிகமிகக் கடினம். இவைகளுக்கு எழுத்துக்களைக் கற்றுக்கொடுப்பதுடன் இவைகளின் சொற்கள் ஒவ்வொன்றையும், எழுத்தைப் போலவே கற்றுக்கொடுக்கவேண்டும். கற்ற சொற்களும் மறந்து போகாமலிருக்க அவைகளின் எழுத்து வரிசையையும், உச்சரிப்பையும் (Spelling and pronunciation) எப்பொழுதும் ஞாபகப்படுத்திக்கொண்டேயிருக்கவேண்டும். ஒரு மொழியின் சொல்லைக் கற்பதே இவ்வளவு கடினமென்றால், அம்மொழியின் இலக்கணத்தைக் கற்பது எவ்வளவு கடினமாக இருக்கும் என்பதை எவரும் எளிதில் ஊகித்துக்கொள்ளலாம்.

நம் நாட்டில் ஆங்கிலம் ஆட்சிமொழியாக்கப்பட்டவுடன், அரசாங்கம் அதை மக்களுக்குக் கற்றுக்கொடுக்கத் தொடங்கிற்று.

அரசாங்கம் இங்கு ஆங்கிலத்தைக் கற்றுக்கொடுக்கத் தொடங்கியவுடன் அதைக் கற்கப் பலவிதமான ஆங்கில வாசகப் புத்தகங்கள் வெளிவந்தன.

அவ் வாசகப் புத்தகங்கள், ஆங்கிலச் சொற்களைப் படங்கள் மூலமாகவும், தெரிந்த சொற்கள் மூலமாகவும் கற்பித்தன; வருடத்திற்கு இத்தனை சொற்கள் தான் கற்க வேண்டுமென்றும் திட்டம் செய்தன. ஆங்கிலம், கற்பதற்குக் கடினமான மொழியானபடியால், அதைக் கற்கின்றவர்களின் மனநிலையை (Psychology) அறிந்து கற்றுக்கொடுக்க, ஆங்கிலேய மனோதத்துவ சாத்திரப் புத்தகங்களும் தோன்றின. மாணவர்களுக்கு ஆங்கிலத்தைக் கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்களுக்கு, மனோதத்துவ சாத்திரத்தைப் போதிப்பதற்காகவும், அவர்களுக்கு மாதிரி வகுப்புகள் (Model classes) மூலமாக ஆங்கிலம் கற்பிப்பதைக் காட்டுவதற்காகவும், அரசாங்கத்தாரால் ஆசிரியர் போதனா முறைப் பள்ளிகளும் ஏராளமான பணச்செலவில் நிறுவப்பட்டன.

எழுத்தொலியும் சொல்லொலியும் ஒன்றாக இருக்கும் தமிழ் முதலிய இந்திய மொழிகளுக்கு, மேலே கூறப்பட்டவைகள் வேண்டாதவையாக இருந்தும் அவைகள் தமிழ் வாசகப் புத்தகங்களிலும் தமிழ் கற்றுக்கொடுப்பதிலும் புகுத்தப்பட்டன.

திண்ணைப் பள்ளிகளுக்குத் தமிழ் எழுத்துக்களைக் கற்றுக் கொடுக்க ஆறு மாதங்கள்வரை வேண்டியிருந்தது. அப்படி அவைகளுக்கு ஆறு மாதங்கள்வரை வேண்டியிருந்ததற்குப் பல நியாயங்கள் உண்டு. 1. எழுத்துக்களை இராகத்துடன் கற்றுக்கொடுத்தது. 2. எழுத்துக்களைக் கற்றுக்கொடுக்கக் கரும்பலகை, கற்பலகை, தாள் முதலிய சாதனங்கள் இல்லாத குறை. 3. ஒரே ஆசிரியர் அரிச்சுவடி, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், உலகநீதி, அம்மானை முதலிய இலக்கிய வகுப்புக்களையும், கணக்கு வகுப்புக்களையும் நடத்திக்கொண்டு, பிள்ளைகளுக்கு வேண்டிய ஏடுகளையும் எழுதிக் கொடுத்துவர வேண்டியதிருந்தது. 4. பிள்ளைகளை ஆசிரியர்கள் முரட்டுத்தனமாக நடத்தியது. 5. பிள்ளைகள் எந்த மாதத்திலும், எந்த வயதிலும் சேர்க்கப்பட்டு வந்தனர். 6. எல்லாவற்றையும்விட பழைய திண்ணைப்பள்ளி ஆசிரியர்கள் எவரிடமிருந்தும் சம்பளம் பெறவில்லை. மேற்பார்வையும் மேலதிகாரமும் கிடையா.

ஆனால் பற்பல வசதிகளுடைய இக்காலத்திலோ, தமிழ் எழுத்துக்களை மிக விரைவில் எளிதாகக் கற்கலாம்.

ஆங்கிலம் அரசாங்க மொழியாயிருப்பதால் அரசாங்கத்திற்குத் தமிழை ஆதரிக்கவோ, வளர்க்கவோ வேண்டிய அவசியமில்லை. இதைப் புத்தக வியாபாரிகள் தங்கள் பண லாபத்திற்குப் பயன் படுத்திக்கொண்டு, வியாபார நோக்கத்துடன், தமிழ் வாசகப் புத்தகங்களை வெளியிட்டு, அவைகளுக்குப் புத்தக அங்கீகாரக் கமிட்டியாரிடம் எப்படியாவது அங்கீகாரம் வாங்கி, பள்ளிக்கூடங்களின் நிர்வாகிகளையும், ஆசிரியர்களையுங்கண்டு பேரம் பேசி, அவர்களுக்குப் புத்தகங்களை விற்று வருகிறார்கள்.

புத்தகங்கள் வியாபார நோக்கத்துடன் விற்கப்பட்டாலும், அநேகமாக எல்லா முதல் வகுப்புத் தமிழ் வாசகப் புத்தகங்களின் முகவுரையிலும் பிள்ளைகளுக்கு முதலில் எழுத்துக்களைக் கற்றுக் கொடுக்கக் கூடாதென்றும், கற்றுக்கொடுத்தால் தமிழ் கற்பதில் பிள்ளைகளுக்கு வெறுப்பு ஏற்பட்டு விடுமென்றும், சொற்களைப் பிள்ளைகளுக்குப் படங்கள் மூலமாகவும், தெரிந்த சொற்கள் மூலமாகவும் கற்றுக்கொடுக்க வேண்டுமென்றும் எழுதியிருக்கும். ஆனால் படங்களில் பலவும் சொற்களில் பலவும் பிள்ளைகளுக்குத்

தெரிந்தவையாக இருக்கா. வியாபாரத்திற்காகத் தமிழ் வாசகப் புத்தகங்களை வெளியிடுவதற்குப் புத்தக வியாபாரிகளைக் குறை சொல்லக்கூடாது.

தற்காலப் பள்ளிகளில் பிள்ளைகளுக்கு, எழுத்துக்களைக் கற்றுக் கொடுக்காத காரணத்தால் சாதாரணமான சிறுவாக்கியத்தைக்கூட எழுத வாசிக்க முடியாமல் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள் என்பதை எவரும் மறுக்க முடியாது. ஐந்து ஆண்டுகள் தமிழ் கற்ற ஐந்தாவது வகுப்பு மாணவர்கள் கொம்பில்லாத குறில் நெடில் எழுத்துக்களில்கூட எழுதுவதிலும் வாசிப்பதிலும் பிழை விடுவதைக் காணலாம். உதாரணமாக இவர்களுக்கு "காந்தம்" என்று "டிக்டேஷன்" போட்டால் "கந்தம்" என்று சிலரும், "கந்தாம்" என்று சிலரும், "காந்தாம்" என்று சிலரும்; "காந்தம்" என்று சரியாகச் சிலரும் எழுதுவார்கள். பிழையாக எழுதியவர்களை விட்டு விட்டு "காந்தம்" என்று சரியாக எழுதியவர்களை "ஏன் இப்படிப் பிழையாக எழுதியிருக்கிறீர்கள்?" என்று சோதனைக்காகக் கேட்டால், இவர்களும் சரியாக எழுதியதை அழித்துவிட்டு, மற்றவர்களைப் போலவே, பிழையாக எழுதி விடுவதைக் காணலாம். ஐந்து ஆண்டுகள் தமிழ் கற்றும் இவர்களுக்குக் குறில் நெடில் எழுத்துக்களில்கூடத் தெளிவான அறிவு எற்படவில்லையே! இதற்காக வருந்தி, தமிழ் வசனத்தை அதன் அமைப்புப்படி கற்றுக்கொடுத்து எளிதில் பிழையின்றி எழுத வாசிக்கச் செய்ய பாடுபடும் உண்மையான தமிழ்த் தொண்டர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள்?

எட்டாவது வகுப்பு மாணவர்கள் கொம்பில்லாத குறில் நெடில் எழுத்துக்களில் பிழை விடாவிட்டாலும் கொம்புள்ள குறில் நெடில் எழுத்துக்களில் பிழை விடுவதைக் காணலாம். "கோயம்புத்தூர்" என்பதை "கொயம்புத்தூர்" என்றும், "போடி" என்பதை "பொடி" என்றும், "கொல்லம்" என்பதை "கெல்லம்" என்றும், "பொள்ளாச்சி" என்பதை "போல்லாச்சி" என்றும் எழுதுவதைக் காணலாம். எட்டாவது வகுப்புக்கு மேல் படித்தவர்கள் குறில் நெடில் பிழைகள் விடாவிட்டாலும், ன-வரி ண-வரி எழுத்துக்களிலும், ற-வரி, ர-வரி எழுத்துக்களிலும், ல-வரி, ள-வரி, ழ-வரி எழுத்துக்களிலும், நெருங்கிய ஒலி உச்சரிப்புப் பேதத்தை விளங்கிக்கொள்ளாமல் பிழை விடுவார்கள்.

"ஆவணி" என்பதை "ஆவணி" என்றும், "திருக்குறள்" என்பதை "திருக்குரல்" என்றோ, "திறுக்குரல்" என்றோ, அல்லது "திறுக்குரள்" என்றோ பிழையாக எழுதக்கூடும்.

இப்போது அரசாங்கம், வார்தாக் கல்வித்திட்டமென்றும், ஆதாரக் கல்வித்திட்டமென்றும் சொல்லிக்கொண்டு, ஒரு கல்வித் திட்டத்தை ஆரம்பப்பாடசாலைகளில் புகுத்தி வருகின்றது. இத் திட்டப்படி, பிள்ளைகளுக்குத் தமிழ் கற்றுக்கொடுக்கப் புத்தகங்கள் வேண்டாமென்றும், எழுத்துக்களைக் கற்றுக்கொடுக்க வேண்டாமென்றும், இவைகளுக்குப்பதில் பிள்ளைகள், பள்ளியில் தங்கள் கைத்தொழில் வேலைக்கு உபயோகப்படுத்தும் சாமான்களைப் பார்த்தும், தெரிந்தும், சொற்களை எழுதிவிட வேண்டுமென்றும், பிள்ளைகள் செய்த வேலைகளை எழுதச்சொல்லி, அதன் மூலமாக வாக்கியங்களை எழுதிவிட வேண்டுமென்றும் சொல்லப்படுகின்றது. இம்முறையை, ஆதாரக்கல்விப் போதனை முறைப் பள்ளிகள், தமிழ் கற்றுக்கொடுக்கவேண்டிய ஆசிரியர் ஆசிரியைகளிடம் புகுத்திவருகின்றன. **இதனால் தமிழுக்கு முன்னைவிட அதிகமான தீங்கு ஏற்படத்தொடங்கியிருக்கின்றது.**

வார்தாக் கல்வித்திட்டத்தின் மூலமாகத் தமிழ் மொழிக்கு ஏற்படத் தொடங்கியிருக்கும் தீமையைத்தவிர **இந்தி மூலமாகவும்** தமிழுக்கு ஆபத்து ஏற்படுமென்றும் நினைக்க வேண்டியதிருக்கிறது. ஆங்கிலேயர் ஆட்சி இந்தியாவை விட்டு நீங்கியவுடன் வடஇந்தியாவில் ஆங்கில மொழியின் இடத்திற்கு இந்தி வேகமாக வந்துகொண்டிருக்கிறது. வடஇந்தியாவில் ஆங்கிலத்தின் இடத்தில் இந்தி வருவதற்கு எல்லா நியாயங்களும் உண்டு

ஆனால் தமிழ் நாட்டில் ஆங்கிலத்தின் இடத்தில் இந்தி வருவதற்கு ஒரு நியாயமும் இல்லை. தமிழ் நாட்டில் இந்தி அரசாங்க மொழியாக வருமானால், இப்போது ஆங்கிலம் கற்றவர்களுக்குத் தமிழ்நாடு அடிமையாக இருப்பதற்குப் பதில், இனி இங்குள்ள இந்தி கற்றவர்களுக்கு தமிழ்நாடு நிரந்தரமாக அடிமையாகிவிடும். தமிழ் வளர்ச்சி அடையாது. தமிழ் நாட்டிலுள்ள ஆங்கிலம் கற்றவர்களில் அநேகர் தமிழ் நாட்டில் தமிழை ஆட்சி மொழியாக்காமல், தங்கள் சுயநலத்திற்காக ஆங்கிலத்தை ஆட்சி மொழியாக நீடிக்க விரும்புவது கொடுமையாகும்.

சென்னை மாகாணத்தில், சென்னைநகர்ப் பாத்தியதை காரணமாக உடனே தமிழ் மாகாணம் ஏற்படாவிட்டாலும், சர்க்கார் நிர்வாகம் ஆங்கிலத்தில் நடப்பதற்குப்பதில், முதலில் தமிழ் ஜில்லாக்களிலாவது சர்க்கார் நிர்வாகம் தமிழ் மொழியில் நடக்கவேண்டும்.

தமிழ்த் தொண்டர்கள் தமிழை வளர்க்கவும், தமிழை அதன் அமைப்புப்படி கற்றுக்கொடுக்கவும் பாடுபடவேண்டும். ஆசிரியர்களும் ஆசிரியைகளும் முதலில் தங்களிடம் இராப்பாடம் (Tution) படிக்கும் பிள்ளைகளுக்கும், தங்கள் சொந்தப்பிள்ளைகளுக்கும், 13 வயதிற்கு மேற்பட்ட எழுதப்படிக்கத் தெரியாதவர்களுக்கும், அரசாங்க வேலையிலுள்ளவர்களில் பிழையாக எழுதுகிறவர்களுக்கும் இப்புத்தகத்தை வாங்கிக்கொடுத்துப் படிக்கச்செய்யவேண்டும். இதனால் தமிழ் வசனத்தை அதன் அமைப்புப்படி கற்றுக் கொடுக்கும்முறை பள்ளிக்கூடங்களிலும் ஏற்பட்டுவிடும்.

சென்ற பத்து ஆண்டுகளுக்குமேலாக எவ்வளவோ பணத்தையும், சக்தியையும், நேரத்தையும் செலவுசெய்து எங்களுடைய கீழ்தர, உயர்தர ஆரம்பப் பாடசாலைகளிலும், மொழிப்பயிற்சி வகுப்புக்களிலும், எழுதப்படிக்கத் தெரியாத வயது வந்தோர்களுக்கு சில ஆண்டுகளாக கற்றுக்கொடுத்துப்பார்த்தும் வெற்றி கண்ட அநுபவத்தைக்கொண்டு, தமிழ் நாடெங்கும் தமிழைத் தழைக்கச் செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் இப்புத்தகத்தை வெளியிடுகிறோம் 1950ம் வருடத்திலேயே "தமிழ் வசனத்தை எளிதில் கற்கும்வழி" என்ற புத்தகத்தை வெளியிட்டிருக்கிறோம். அப்புத்தகங்கள் முழுவதும் விற்பனையாகி விட்டன. அதில் வாக்கியப்பகுதி அதிகமாக இருந்தபடியால் அது 180 பக்கங்கள் கொண்ட பெரிய புத்தகமாயிருந்தது. அதே புத்தகத்தை அதிலுள்ள வாக்கியப்பகுதிகளை மட்டும் குறைத்து, இதை முதற் பாகமாக வெளியிடுகிறோம். வாக்கியப்பகுதியில் இன்னும் அதிகமான பகுதிகள் சேர்க்கப்பட்டு இரண்டாம் பாகமாக பின்னால் வெளியிடப்பெறும்.

இப்புத்தகம் குறைந்த விலைக்கு விற்கப்படுவதால் எல்லோராலும் எளிதில் வாங்கமுடியும். இதில் எழுத்து, சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகிய பகுதிகள் முந்தின பதிப்பைவிடத் தெளிவாக இருப்பதைக் காணலாம்.

இப்புத்தகத்தின் கடைசியில் அநுபந்தமாக எழுத்து, சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவைகளின் அமைப்பும் அவைகளைக் கற்றுக்கொடுக்கும் விதமும் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளை ஆசிரியர்களும் மற்றவர்களும் நன்கு படித்துக்கொண்டு தமிழ் வசனத்தை எவருக்கும் எளிதில் கற்றுக்கொடுக்கலாம். தமிழ் வசனத்தைக் கற்றுக்கொடுக்கும் விதத்தைப்போதிக்க ஆசிரியர் போதனா முறைப்பள்ளிகள் தேவையில்லை. இப்புத்தகம் ஒன்றே போதுமானதாகும்.

"சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச்செய்வீர்!"

விருதுநகர்,
1—12—'52.

கி. பெ. சி. வ. பிரகாசம்,
நிர்வாகி,
பாலகுருகுல வித்யாலயம்.

பாடம் 1 (ம - வரி மட்டும் முடியவுள்ள 143 எழுத்துக்கள்.)

அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ	ஃ
க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ	க்
ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ	ங்
ச	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சௌ	ச்
ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ	ஞ்
ட	டா	டி	டீ	டு	டூ	டெ	டே	டை	டொ	டோ	டௌ	ட்
ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ	ண்
த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ	த்
ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ	ந்
ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ	ப்
ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ	ம்

எழுத்துக்களில் பயிற்சி.

1. முதல்வரி அ முதல் ஃ முடிய மனப்பாடமாக, சுத்தமாகச் சொல்லும்படி செய்க.

2. முதல் வரியை மனப்பாடமாகச் சொல்லத்தெரிந்த பிறகு முதல் பாடத்திலுள்ள மற்ற வரிகளின் எழுத்துக்களையும் மனப்பாடமாகச் சொல்லும்படி செய்க.

3. க முதல் ம முடியவுள்ள பத்து எழுத்துக்களை க, ங; என்று ஜோடி ஜோடியாக மனப்பாடமாகச் சொல்லும்படி செய்க.

4. எழுத்துக்களைச் சொல்லிக்கொண்டே முதற் பாடத்திலுள்ளபடி, சிலேட்டில் ஒரு கோட்டில் எழுத்துக்களைப் பார்த்து அழகாக எழுதும்படி செய்க. எழுத்துக்களைப் பார்த்து எழுதுவதற்கு 247 எழுத்துக்கள் கொண்ட பாலகுருகுல அட்டையை வைத்துக் கொள்ளலாம். திரும்பத் திரும்ப பல தடவைகள் எழுதும்படி செய்க. தினமும் வீட்டிலிருந்தும் அழகாக எழுதி வரும்படியும் செய்க. சிலேட்டில் அழகாக எழுதத் தெரியாமல் தாளில் அழகாக எழுத முடியாது.

5. ஆசிரியர் முதற் பாடத்திலுள்ளபடி, எழுத்துக்களை ஒரு கெட்டியான அட்டையின் ஒரு பக்கத்தில் 11 வரிகளில் எழுதிக் கொண்டு அதிலுள்ள எழுத்துக்களை இடையிடையே சுட்டிக் காட்டி **இன்ன எழுத்து** என்று சொல்லும்படி செய்க. ஆசிரியர் எழுத்துக்களைச் சொல்லச் சொல்ல மாணவர், அந்த எழுத்தைச் சுட்டிக் காட்டும்படி செய்க.

6. **எழுத்துக்களைக்கரும்பலகையில்எழுதிஇன்னஎழுத்து என்று சொல்லும்படி செய்க.** ஆசிரியர், எழுத்தைச் சொன்னவுடன் அந்த எழுத்தை, கரும் பலகையில் மாணவர்களை எழுதும்படி செய்க. மாணவர்கள் பிழையில்லாமல் எழுதுவதற்கு குறில்

நெடில் எழுத்துக்களில் நெடிலை நீட்டிச் சொல்லுக. நீட்டிச்சொல்லும் எழுத்துக்களுக்கு "துணை எழுத்துப் போடவேண்டும்" அல்லது "இரட்டைக்கொம்புபோடவேண்டும்" அல்லது "சுழிக்க வேண்டும்" என்றும், நீட்டாமல் சொல்லும் எழுத்துக்களுக்கு இவைகள் வேண்டாம் என்றும் சொல்லிக்கொடுத்து எழுதச் செய்க. எ, ஏ சத்தமுள்ள உயிர் மெய் எழுத்துக்களில் துணை எழுத்து இருக்காதென்பதையும், ஒ, ஓ சத்தமுள்ள உயிர் மெய்யெழுத்துக்களில் கொம்புகளுடன் துணை எழுத்தும் இருக்கும் என்றும் சொல்லிக்கொடுத்துப் பிழையில்லாமல் எழுதச் செய்க.

7. மேலே கூறியிருப்பதும் தவிர ஆசிரியர்களின் அநுபவத்தையும் திறமையையும் சேர்த்து எழுத்துக்களை நன்கு கற்றுக் கொடுத்த பிறகு எழுத்துக்களில் "டிக்டேசன்" போடவேண்டும். "டிக்டேசன்" போட்டால் ஒரு பிழைகூட இருக்கக்கூடாது. அது மிகமிக முக்கியமாகும். எழுத்து "டிக்டேசனில்" பிழை விட்டால் சொற்களைப் பிழையில்லாமல் எழுதவும் வாசிக்கவும் முடியாமற்போகும்.

8. பத்து வயதிற்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகள் எதையும் விரைவில் கற்று விரைவில் மறந்து விடுவார்கள். ஆகவே அவர்களுக்கு எழுத்துக்களில் அடிக்கடி பயிற்சி கொடுக்கவேண்டும். மற்ற விவரங்களை இப்புத்தகத்தின் அநுபந்தத்தில் "எழுத்துக்களைக் கற்றுக்கொடுக்கும் விதம்" என்ற தலைப்பில் பார்க்க.

பாடம் 2.

இரண்டெழுத்து குறில்-நெடில் சொற்கள்
(ம-வரி முடிய)

அடி—ஆடி, என்று ஜோடி ஜோடியாகச் சொற்களைக் கற்றுக் கொடுக்கவேண்டும். மற்ற விபரங்களுக்கு இப் புத்தகத்தின் அநுபந்தத்தில் "சொற்களைக் கற்றுக்கொடுக்கும் விதம்" என்ற தலைப்பில் காண்க.

குறில்		நெடில்	குறில்		நெடில்
அடி	—	ஆடி	பசி	—	பாசி
அசை	—	ஆசை	படி	—	பாடி
இடு	—	ஈடு	பிடி	—	பீடி
உண்	—	ஊண்	புசி	—	பூசி
உமை	—	ஊமை	புண்	—	பூண்
எடு	—	ஏடு	மசி	—	மாசி
எது	—	ஏது	மடி	—	மாடி
ஒடி	—	ஓடி	மீது	—	மாது
கடை	—	காடை	மிதி	—	மீதி
கண்	—	காண்	முடி	—	மூடி
குடை	—	கூடை	முடை	—	மூடை
குடி	—	கூடி	கெடு	—	கேடு
சடை	—	சாடை	கொடி	—	கோடி
சிதை	—	சீதை	கொடு	—	கோடு
சுடு	—	சூடு	கொடை	—	கோடை
தடி	—	தாடி	செடி	—	சேடி
தடை	—	தாடை	தொகை	—	தோகை
துணி	—	தூணி	தொடி	—	தோடி
நகை	—	நாகை	தொடு	—	தோடு
நடி	—	நாடி	நெடு	—	நேடு
நடு	—	நாடு	பெண்	—	பேண்
நம்	—	நாம்	பெடை	—	பேடை
நிதி	—	நீதி	பொடி	—	போடி

பாடம் 3.

மூன்றெழுத்து குறில்-நெடில் சொற்கள்

(ம-வரி முடிய)

குறில்		நெடில்	குறில்		நெடில்
அங்கு	—	ஆங்கு	தட்டு	—	தாட்டு
அண்டு	—	ஆண்டு	தண்டு	—	தாண்டு
அப்பு	—	ஆப்பு	திட்டி	—	தீட்டி
இங்கு	—	ஈங்கு	திட்டு	—	தீட்டு
எங்கு	—	ஏங்கு	திண்டு	—	தீண்டு
ஒட்டு	—	ஓட்டு	தும்பு	—	தூம்பு
ஒட்டை	—	ஓட்டை	தொண்டு	—	தோண்டு
கஞ்சி	—	காஞ்சி	தொட்டி	—	தோட்டி
கட்டை	—	காட்டை	நகம்	—	நாகம்
கதம்	—	காதம்	நட்டு	—	நாட்டு
கப்பி	—	காப்பி	நிதம்	—	நீதம்
கம்பு	—	காம்பு	நுங்கு	—	நூங்கு
கிச்சு	—	கீச்சு	நொண்டு	—	நோண்டு
கிண்டு	—	கீண்டு	படம்	—	பாடம்
குடம்	—	கூடம்	பட்டி	—	பாட்டி
குட்டி	—	கூட்டி	பட்டு	—	பாட்டு
குட்டு	—	கூட்டு	பதம்	—	பாதம்
குப்பி	—	கூப்பி	பெட்டி	—	பேட்டி
கொட்டை	—	கோட்டை	பெட்டை	—	பேட்டை
சட்டி	—	சாட்டி	பொட்டு	—	போட்டு
சட்டை	—	சாட்டை	மதம்	—	மாதம்
சந்தி	—	சாந்தி	மந்தி	—	மாந்தி
சந்து	—	சாந்து	மப்பு	—	மாப்பு
சிக்கு	—	சீக்கு	மிதம்	—	மீதம்
சிட்டு	—	சீட்டு	முக்கு	—	மூக்கு
சுட்டு	—	சூட்டு	முட்டை	—	மூட்டை
செம்பு	—	சேம்பு	முப்பு	—	மூப்பு
தங்கு	—	தாங்கு	மொட்டை	—	மோட்டை

பாடம் 4.

மூன்றெழுத்துச் சொற்கள்

(ம-வரி முடிய)

அக்கா	—	ஆணம்	சொகுசு	—	சோம்பு
அம்மா	—	ஆச்சி	—	—	சௌண்டி
அம்மி	—	ஆண்டி	தகடு	—	தாகம்
இஞ்சி	—	ஈச்சை	தங்கை	—	தாடகை
இடம்	—	ஈட்டி	தந்தி	—	தாண்டு
உப்பு	—	ஊக்கம்	திட்டு	—	தீட்டு
எட்டு	—	ஏகம்	துட்டு	—	தூபம்
—	—	ஐந்து	தெம்பு	—	தேசம்
ஒட்டு	—	ஓடம்	தொட்டி	—	தோட்டி
கங்கை	—	காகம்	நகம்	—	நாகம்
கடுகு	—	காந்தி	நத்தை	—	நாதம்
கமுகு	—	காம்பு	நெட்டி	—	நேசம்
கிடுகு	—	கீச்சு	நொச்சி	—	நோக்கு
கிண்ணி	—	கீதம்	பஞ்சு	—	பாக்கு
குடம்	—	கூடம்	பந்து	—	பாங்கு
குண்டு	—	கூண்டு	படகு	—	பாடம்
குத்து	—	கூத்து	பிசாசு	—	பீடம்
கெட்டி	—	கேப்பை	புதுமை	—	பூச்சி
—	—	கைகேசி	புத்தி	—	பூட்டு
கொச்சி	—	கோபம்	பெட்டி	—	பேட்டி
கொப்பு	—	கோமதி	பொந்து	—	போட்டி
சங்கு	—	சாணம்	மட்டை	—	மாடம்
சட்டி	—	சாதம்	மதகு	—	மாதம்
சிட்டு	—	சீட்டு	மிகுதி	—	மீதம்
சித்தி	—	சீப்பு	முகம்	—	மூக்கு
சுக்கு	—	சூடம்	முத்து	—	மூட்டை
சுட்டு	—	சூட்டு	மெத்தை	—	மேகம்
செக்கு	—	சேணம்	மொச்சை	—	மோகம்

பாடம் 5.

நான்கெழுத்துச் சொற்கள்

(ம-வரி முடிய)

அகப்பை	—	ஆகாசம்	செங்கண்	—	சேகண்டி
அடுப்பு	—	ஆட்டம்	செந்தொடை	—	சேதுபதி
அப்பம்	—	ஆப்பம்	தங்கம்	—	தாமதம்
இடுப்பு	—	ஈட்டம்	துக்கம்	—	தூக்கம்
உடம்பு	—	ஊக்கம்	தெப்பம்	—	தேக்கம்
உத்தமி	—	ஊமைச்சி	தொக்கம்	—	தோட்டம்
எண்ணம்	—	ஏகாதசி	நத்தம்	—	நாடகம்
—	—	ஐப்பசி	நிகண்டு	—	நீட்டம்
ஒட்டம்	—	ஓட்டம்	நெஞ்சம்	—	நேசிப்பு
—	—	ஔடதம்	—	—	நைடதம்
கடிதம்	—	காகிதம்	நொடிப்பு	—	நோக்கம்
கணக்கு	—	காந்தம்	பண்டம்	—	பாண்டம்
கண்ணாடி	—	காமாட்சி	படுக்கை	—	பாசாங்கு
கிண்ணம்	—	கீசகம்	பட்டம்	—	பாதகம்
கும்பம்	—	கூட்டம்	பிண்டம்	—	பீடிப்பு
—	—	கைகாட்டி	புட்பம்	—	பூநாகம்
கொஞ்சம்	—	கோடாங்கி	பெண்சாதி	—	பேதகம்
சட்டம்	—	சாந்தம்	—	—	பைசாசம்
சத்தம்	—	சாப்பாடு	பொருட்டு	—	போதகம்
சிகிச்சை	—	சீதாபதி	—	—	பௌதிகம்
சிங்கம்	—	சீமாட்டி	மச்சம்	—	மாங்குடி
சுத்தம்	—	சூடாமணி	மணங்கு	—	மாமிசம்
செம்மண்	—	சேட்டம்	மெதுக்கு	—	மேம்பாடு
செங்கொடி	—	சேமிப்பு	—	—	மைநாகம்

அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ	ஃ
க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ	க்
ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ	ங்
ச	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சௌ	ச்
ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ	ஞ்
ட	டா	டி	டீ	டு	டூ	டெ	டே	டை	டொ	டோ	டௌ	ட்
ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ	ண்
த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ	த்
ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ	ந்
ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ	ப்
ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ	ம்

ய	யா	யி	யீ	யு	யூ	யெ	யே	யை	யொ	யோ	யௌ	ய்
ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ	ர்
ல	லா	லி	லீ	லு	லூ	லெ	லே	லை	லொ	லோ	லௌ	ல்
வ	வா	வி	வீ	வு	வூ	வெ	வே	வை	வொ	வோ	வௌ	வ்
ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ	ழ்
ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ	ள்
ற	றா	றி	றீ	று	றூ	றெ	றே	றை	றொ	றோ	றௌ	ற்
ன	னா	னி	னீ	னு	னூ	னெ	னே	னை	னொ	னோ	னௌ	ன்

பாடம் 6.

247 எழுத்துக்கள் (நெடுங் கணக்கு)

பாடம் 7.

உச்சரிப்பு விளக்கப் படங்கள்.

ர ரா ரி ரீ ரு ரூ ரெ ரே ரை
ரொ ரோ ரௌ ர்

ன னா னி னீ னு னூ னெ னே
னை னொ னோ னௌ ன்

ல லா லி லீ லு லூ லெ லே
லை லொ லோ லௌ ல்

படம் 1. இதன் முன்னுள்ள எழுத்துக்களை உச்சரிக்கும்போது நாக்கு மேல்வாயின் முன்பாகத்தைத் தொடும்படி அழுத்தாமல் உச்சரிக்க வேண்டும்.

ற றா றி றீ று றூ றெ றே றை
றொ றோ றௌ ற்

ண ணா ணி ணீ ணு ணூ ணெ
ணே ணை ணொ ணோ ணௌ ண்

ள ளா ளி ளீ ளு ளூ ளெ ளே
ளை ளொ ளோ ளௌ ள்

படம் 2. இதன் முன்னுள்ள எழுத்துக்களை உச்சரிக்கும்போது நாக்கு மேல்வாயின் நடுப்பாகத்தைத் தொடும்படியாக அழுத்தி உச்சரிக்கவேண்டும்.

ழ ழா ழி ழீ ழு ழூ ழெ ழே
ழை ழொ ழோ ழௌ ழ்

படம் 3. இதன் முன்னுள்ள எழுத்தை உச்சரிக்கும்போது நாக்கு மேல்வாயின் கடைசிப் பாகத்தைத் தொடும்படியாக அதிகமாக அழுத்தி உச்சரிக்க வேண்டும.

பாடம் 8.

எழுத்துக்களை ஜோடி ஜோடியாக உச்சரித்து பேதங்களைத் தெரிந்து கொள்ளல்.

ர-வரி ற-வரி எழுத்துக்களை ர-ற என்று ஜோடியாகவும், ன-வரி ண-வரி எழுத்துக்களை ன-ண என்று ஜோடியாகவும், ல-வரி ள-வரி எழுத்துக்களை ல-ள என்று ஜோடியாகவும், ழ-வரி எழுத்துக்களைத் தனியாகவும் சொல்லி, பேதங்களைத் தெரிந்து கொள்ளும்படி செய்க.

ர — ற	ன — ண	ல — ள	ழ
ரா — றா	னா — ணா	லா — ளா	ழா
ரி — றி	னி — ணி	லி — ளி	ழி
ரீ — றீ	னீ — ணீ	லீ — ளீ	ழீ
ரு — று	னு — ணு	லு — ளு	ழு
ரூ — றூ	னூ — ணூ	லூ — ளூ	ழூ
ரெ — றெ	னெ — ணெ	லெ — ளெ	ழெ
ரே — றே	னே — ணே	லே — ளே	ழே
ரை — றை	னை — ணை	லை — ளை	ழை
ரொ — றொ	னொ — ணொ	லொ — ளொ	ழொ
ரோ — றோ	னோ — ணோ	லோ — ளோ	ழோ
ரௌ — றௌ	னௌ — ணௌ	லௌ — ளௌ	ழௌ
ர் — ற்	ன் — ண்	ல் — ள்	ழ்

எழுத்துக்களில் பயிற்சி.

1. முதற்பாடத்தில் ம - வரி முடிய 143 எழுத்துக்களில் பயிற்சி கொடுத்ததுபோல், ய-வரி முதல் ன-வரி முடியவுள்ள 8வரி 104 எழுத்துக்களிலும் பயிற்சி கொடுக்க வேண்டும்.

2. கீழேகண்ட எழுத்துக்களில் அழுத்தாமல் சொல்ல வேண்டிய எழுத்துக்களையும், அழுத்திச் சொல்லவேண்டிய எழுத்துக்களையும், அதிகமாக அழுத்திச் சொல்ல வேண்டிய எழுத்துக்களையும் எடுத்து எழுதுக:—

ரா, ரூ, னை, ணை, ளு, லு, ழை, ரோ, றோ, னோ, ணோ, ள, ல, ழி, ணு, னு, றே, ரே, ள், ல்.

3. கீழேகண்ட எழுத்துக்களில் ‹டிக்டேஷன்› போடுக.

கெ, கோ, சோ, தெ, மொ, பே, லை, ளை, ழை, கை, ஞு, ரூ, ரெ, றொ, ர, ற, சௌ.

4. 247 எழுத்துக்களிலும் தினமும் டிக்டேஷன் போடுக.

பாடம் 9.

ன-வரி எழுத்துக்களும், ண-வரி எழுத்துக்களும் கொண்ட சொற்கள்.

இந்தப் பாடத்தில் கண்ட சொற்களை, **அரன்-அரண்** என்று அழுத்தாமலும் அழுத்தியும் ஜோடி ஜோடியாகச் சொல்லும்படியும், எழுத்துக் கூட்டும் படியும், பார்த்து எழுதும் படியும் செய்க

அரன்	—	அரண்	கன்னன்	—	கண்ணன்
அவன்	—	அவண்	கானம்	—	காணம்
அனு	—	அணு	கானல்	—	காணல்
அனை	—	அணை	கான்	—	காண்
அன்மை	—	அண்மை	தனி	—	தணி
அன்னம்	—	அண்ணம்	தன்	—	தண்
ஆனி	—	ஆணி	தன்மை	—	தண்மை
ஆன்	—	ஆண்	நான்	—	நாண்
இவன்	—	இவண்	பனி	—	பணி
இனை	—	இணை	பனை	—	பணை
உன்	—	உண்	பானம்	—	பாணம்
ஊன்	—	ஊண்	பேன்	—	பேண்
எவன்	—	எவண்	மனம்	—	மணம்
என்	—	எண்	மன்	—	மண்
கனி	—	கணி	மனை	—	மணை
கனம்	—	கணம்	மானம்	—	மாணம்
கன்னி	—	கண்ணி	மான்	—	மாண்
			வானம்	—	வாணம்

பாடம் 10.

ர-வரி எழுத்துக்களும் *ற*-வரி எழுத்துக்களும் கொண்ட சொற்கள்.

இந்தப் பாடத்தில் கண்ட சொற்களை **அரம்-அறம்** *என்று அழுத்தாமலும் அழுத்தியும் ஜோடி ஜோடியாகச் சொல்லும்படியும், எழுத்துக் கூட்டும்படியும், பார்த்து எழுதும்படியும் செய்க.*

அரம்	—	அறம்	குரும்பி	—	குறும்பி
அரி	—	அறி	குரை	—	குறை
அருகு	—	அறுகு	கூரிய	—	கூறிய
அருந்து	—	அறுந்து	கூரை	—	கூறை
அரை	—	அறை	சீரிய	—	சீறிய
இர	—	இற	சொரி	—	சொறி
இரங்கு	—	இறங்கு	தரி	—	தறி
இரத்தல்	—	இறத்தல்	துரை	—	துறை
உரல்	—	உறல்	துரவு	—	துறவு
உரி	—	உறி	நிரை	—	நிறை
உரை	—	உறை	நெரி	—	நெறி
எரி	—	எறி	பரந்த	—	பறந்த
எரிய	—	எறிய	பரை	—	பறை
ஏரி	—	ஏறி	பரவை	—	பறவை
ஒரு	—	ஒறு	புரம்	—	புறம்
கர	—	கற	பொரி	—	பொறி
கரி	—	கறி	மரம்	—	மறம்
கருத்து	—	கறுத்து	மரை	—	மறை
கரை	—	கறை	மரி	—	மறி
குரங்கு	—	குறங்கு	மாரி	—	மாறி
குரவர்	—	குறவர்	விரை	—	விறை
குருகு	—	குறுகு			

பாடம் 11.

ல-வரி எழுத்துக்களும் ள-வரி எழுத்துக்களும் கொண்ட சொற்களும் ழ-வரி எழுத்துக்கள் கொண்ட சொற்களும்.

இந்தப் பாடத்தில் கண்ட சொற்களை **அலகு-அளகு** என்று அழுத்தாமலும் அழுத்தியும் ஜோடி ஜோடியாகச் சொல்லும்படியும், **அழகு** முதலிய சொற்களை அதிகமாக அழுத்தித் தனியாகச் சொல்லும்படியும், எழுத்துக் கூட்டும்படியும், பார்த்து எழுதும் படியும் செய்க.

அலகு	—	அளகு	அழகு
அலி	—	அளி	அழி
அலை	—	அளை	அழை
ஆல்	—	ஆள்	ஆழ்
இலை	—	இளை	இழை
உலை	—	உளை	உழை
ஒலி	—	ஒளி	ஒழி
கலி	—	களி	கழி
கலை	—	களை	கழை
காலி	—	காளி	காழி
கிலி	—	கிளி	கிழி
கோலி	—	கோளி	கோழி
தலை	—	தளை	தழை
தால்	—	தாள்	தாழ்
தாலி	—	தாளி	தாழி
மூலை	—	மூளை	மூழை
வலி	—	வளி	வழி
வாலி	—	வாளி	வாழி
வாலை	—	வாளை	வாழை
வால்	—	வாள்	வாழ்
விலை	—	விளை	விழை

பாடம் 12.

மூன்றெழுத்துச் சொற்கள்.

சொற்களை, **அம்மி-ஆசான்** *என்று ஜோடி ஜோடியாகச் சொல்லும்படியும், எழுத்துக்கூட்டும் படியும், பார்த்து எழுதும் படியும் செய்க.*

அம்மி	—	ஆசான்
அணில்	—	ஆவணி
இரவு	—	ஈசல்
இராணி	—	ஈசன்
உணவு	—	ஊரணி
உரல்	—	ஊற்று
எக்கு	—	ஏவல்
எமன்	—	ஏலம்
ஐவர்	—	—
ஒன்று	—	ஓஞன்
கதவு	—	காவேரி
கிழவி	—	கீற்று
குளம்	—	கூளம்
கெட்டி	—	கேப்பை
கைகேயி	—	—
கொக்கு	—	கோவில்
கௌசலை	—	—
சங்கு	—	சாவடி
சிவன்	—	சீதேவி
சுக்கு	—	சூரன்
செம்பு	—	சேவல்
சைவம்	—	—
சொட்டு	—	சோளம்
தகடு	—	தாமரை
திண்டு	—	தீபம்
துட்டு	—	தூபம்
தென்னை	—	தேவன்
தைலம்	—	—
தொப்பி	—	தோப்பு
நகம்	—	நாக்கு
நிழல்	—	நீலம்
நிறம்	—	நீராவி
நுதல்	—	நூற்பு
நெற்றி	—	நேரம்
நொய்வு	—	நோன்பு
பழம்	—	பாவாடை
பிள்ளை	—	பீமன்
புதர்	—	பூட்டு
பெயர்	—	பேரன்
பையன்	—	—
பொம்மை	—	போர்வை
பௌவம்	—	—
மனம்	—	மானம்
மிளகு	—	மீகான்
முயல்	—	மூடன்
மெழுகு	—	மேளம்
மையல்	—	—
மொச்சை	—	மோசம்
மௌனம்	—	—
யசோதை	—	யாகம்
யுவன்	—	யூதர்
வண்டி	—	வாசல்
விறகு	—	வீரம்
வெற்றி	—	வேலன்
வைரம்	—	—
வௌவால்	—	—

பாடம் 13

நான்கெழுத்துச் சொற்கள்

சொற்களை, **அரசன்-ஆலயம் என்ற** ஜோடி ஜோடியாகச் சொல்லும்படியும், எழுத்துக்கூட்டும்படியும், பார்த்து எழுதும் படியும் செய்க.

அரசன்	—	ஆலயம்	தெய்வம்	—	தேங்காய்
இடுப்பு	—	ஈருள்ளி	தைரியம்	—	—
உழவன்	—	ஊறுகாய்	தொட்டில்	—	தோட்டம்
எறும்பு	—	ஏற்றம்	நகரம்	—	நாற்காலி
ஐராவதி	—	—	நித்திரை	—	நீலமணி
ஒன்பது	—	ஓட்டம்	நுகர்வு	—	நூதனம்
ஒளடதம்	—	—	நெருப்பு	—	நேபாளம்
கட்டில்	—	காற்றாடி	பந்தல்	—	பாரதம்
கிழவன்	—	கீசகன்	பிரம்பு	—	பீங்கான்
குமரன்	—	கூடாரம்	புத்தர்	—	பூஞ்சோலை
குரங்கு	—	கூட்டம்	புலவர்	—	பூட்டன்
கெருடன்	—	கேடயம்	பெருமாள்	—	பேச்சாளி
கைலாசம்	—	—	பொங்கல்	—	போதகர்
கொத்தன்	—	கோதாவரி	பௌர்ணமி	—	—
கௌதமன்	—	—	மனிதன்	—	மாணவன்
சங்கிலி	—	சாம்பார்	மிளகாய்	—	மீனாட்சி
சல்லடை	—	சாப்பாடு	முனிவர்	—	மூர்த்தி
சிங்கம்	—	சீரகம்	மெல்லிலை	—	மேம்பாடு
சிறுவன்	—	சீமாட்டி	மைத்துனி	—	—
சுண்டெலி	—	சூரியன்	யதுகிரி	—	யாத்திரை
செங்கல்	—	சேவகன்	யௌவனம்	—	—
சைனியம்	—	—	வணிகன்	—	வாலிபன்
சொக்கன்	—	சோதிடம்	வியாழன்	—	வீசனம்
சௌந்தரி	—	—	வெகுமதி	—	வேளாண்மை
தகரம்	—	தாவரம்			
திங்கள்	—	தீபாவளி	வைக்கோல்	—	—
துரும்பு	—	தூக்கம்			

பாடம் 14.

ஐந்தெழுத்துச் சொற்கள்.

சொற்களை, **அப்பளம்-ஆசிரமம்** *என்று ஜோடி ஜோடியாகச் சொல்லும்படியும், எழுத்துக்கூட்டும் படியும், பார்த்து எழுதும் படியும் செய்க.*

அப்பளம்	— ஆசிரமம்	தைரியவான்	— —
அரண்மனை	— ஆலமரம்	தொட்டியர்	— தோத்திரம்
இமயமலை	— ஈசுவரன்	நங்கூரம்	— நாகமல்லி
உலக்கை	— ஊன்றுகோல்	நின்மலன்	— நீதிபரன்
எண்சுவடி	— ஏமாற்றம்	நுகத்தடி	— நூற்பவன்
ஐம்புலன்	— —	நெடியவன்	— நேத்திரம்
ஒட்டகம்	— ஓரக்கண்	நைவேத்யம்	— —
ஔதாரியம்	— —	பகீரதன்	— பாகவதம்
கடிகாரம்	— காண்டீபம்	புத்தகம்	— பூகம்பம்
கடம்பூர்	— காளமேகம்	பெரியவர்	— பேயாழ்வார்
கிறுக்கன்	— கீர்த்தனை	பைத்தியம்	— —
குடும்பம்	— கூட்டுறவு	பொதியமலை	— போராட்டம்
கெந்தகம்	— கேழ்வரகு	பௌத்திரன்	— —
கைவளையல்	— —	மங்களம்	— மாணுக்கன்
கொடுங்கோல்	— கோலாட்டம்	மித்திரன்	— மீன்கொத்தி
கௌண்டிகர்	— —	முகுந்தன்	— மூர்க்கன்
சகோதரன்	— சாதிக்காய்	மெழுகுதிரி	— மேகநாதன்
சிங்களம்	— சீரங்கம்	மைத்துனன்	— —
சுண்ணும்பு	— சூரியகலை	மொட்டையன்	— மோசக்காரி
செந்தமிழ்	— சேரலாதன்	மௌட்டியம்	— —
சைவமதம்	— —	யந்திரம்	— யானைமுகன்
சொப்பனம்	— சோமவாரம்	யுவராசன்	— யூகநாதன்
சௌந்தரம்	— —	வங்காளம்	— வாத்தியம்
தகப்பன்	— தாம்பூலம்	வியாபாரம்	— வீமசேனன்
திராவிடம்	— தீர்த்தம்	வெங்காயம்	— வேங்கடம்
தும்பிக்கை	— தூபதீபம்	வைகுண்டம்	— —
தெய்வீகம்	— தேவலோகம்		

பாடம் 15.

ஆறெழுத்துச்சொற்கள்.

சொற்களை, அடைக்கலம்-ஆச்சரியம் என்று கீழ் நோக்கி ஜோடி ஜோடியாகச் சொல்லும் படியும், எழுத்துக்கூட்டும்படியும், பார்த்து எழுதும் படியும் செய்க.

அடைக்கலம்	செம்பருத்தி	பிள்ளைப்பேறு
ஆச்சரியம்	சேகரித்தல்	பீதாம்பரம்
இராட்டினம்	தண்டவாளம்	புன்னைவனம்
ஈச்சமரம்	தாயுமானவர்	பூங்காவனம்
எச்சரிக்கை	திமிர்வாதம்	பெரியதனம்
ஏகாம்பரன்	தீவாந்தரம்	பேய்ப்பசலை
ஒப்பந்தம்	துச்சாதனன்	பொம்மலாட்டு
ஓலைச்சுருள்	தூத்துக்குடி	போர்க்களம்
கங்காதரன்	தென்னைமரம்	முத்துராமன்
காந்தருவம்	தேக்குமரம்	மூலப்பொருள்
கிரகசாரம்	தொங்குபாலம்	மெய்ஞ்ஞானம்
கீரிப்பிள்ளை	தோத்திரப்பா	மேகவண்ணன்
குங்கிலியம்	நகச்சுற்று	மொட்டைமண்டை
கூந்தற்பனை	நாகப்பாம்பு	மோழைக்கிடாரி
கொடிக்கள்ளி	நித்தியபூஜை	யமகண்டம்
கோடைக்காலம்	நீலமேனியன்	யானையேற்றம்
சக்கரபாணி	நெருஞ்சிமுள்	வங்கதேசம்
சாக்கியனார்	நேபாளதேசம்	வாணவேடிக்கை
சிங்காதனம்	படர்தாமரை	வெண்டைக்காய்
சீதாதேவியார்	பாம்புக்கடி	வேதநாயகம்

பாடம் 16.

ட், ற் என்ற மெய்யெழுத்துக்களுக்குப் பின் எந்த மெய்யெழுத்தும் வரக்கூடாது. வந்தால் பிழை யாகும்.

அட்சரம்	நட்பு	நீட்சி	ஆற்காடு	சற்குணன்	நூற்பு
ஆட்சி	நட்சத்திரம்	மோட்சம்	இயற்கை	சற்புத்திரன்	நெற்களம்
கட்செவி	நுட்பம்	வரட்சி	உற்சவம்	சிற்பம்	பயிற்சி
கட்சி	நீட்சி	வெட்கம்	ஏற்பாடு	செயற்கை	பாற்கடல்
காட்சி	பட்சி	வேட்கை	கற்கை	சொற்பம்	முயற்சி
சிட்சை	பட்சணம்	அற்பன்	கற்பகம்	தற்கொலை	மேற்கு
சூட்சுமம்	பிட்சை	அற்புதம்	கற்பு	தெற்கு	விற்பனை
தட்பம்	மாட்சி	ஆட்சேபணை	கொற்கை	நாற்காலி	வெற்பு

பாடம் 17.

தமிழில் வழங்கும் வடமொழி எழுத்துக்கள் 65.

ஜ	ஜா	ஜி	ஜீ	ஜு	ஜூ	ஜெ	ஜே	ஜை	ஜொ	ஜோ	ஜௌ	ஜ்
ஸ	ஸா	ஸி	ஸீ	ஸு	ஸூ	ஸெ	ஸே	ஸை	ஸொ	ஸோ	ஸௌ	ஸ்
ஷ	ஷா	ஷி	ஷீ	ஷு	ஷூ	ஷெ	ஷே	ஷை	ஷொ	ஷோ	ஷௌ	ஷ்
ஹ	ஹா	ஹி	ஹீ	ஹு	ஹூ	ஹெ	ஹே	ஹை	ஹொ	ஹோ	ஹௌ	ஹ்
க்ஷ	க்ஷா	க்ஷி	க்ஷீ	க்ஷு	க்ஷூ	க்ஷெ	க்ஷே	க்ஷை	க்ஷொ	க்ஷோ	க்ஷௌ	க்ஷ்

பாடம் 18.

வடமொழி எழுத்துக்கள் கொண்ட சொற்கள்

ஜாதி	ஜரிகை	ஸ்திரீ
ஹரிஜனம்	ஜூன்	ஸ்தூபி
ஜமாபந்தி	ஜெர்மனி	கோஷா
ஜட்கா	சிவாஜி	பேஷ்! பேஷ்!!
ஜலம்	ரோஜா	உஷார்
ஜம்பம்	ஜிலேபி	பாஷை
ஜாக்கிரதை	நமஸ்காரம்	ரிஷபம்
ஜில்லா	ஸ்பெஷல்	ஷரா
ஜீவன்	காங்கிரஸ்	காஷாயம்
இன்ஜின்	ஸைக்கிள்	டிக்டேஷன்
ஜூலை	போலீஸ்	ஷாப்
ஜவஹர்லால்	லைட்ஹவுஸ்	இஷ்டம்
நூர்ஜஹான்	ஸுபேதார்	விஷம்
ஜெபம்	ஆகஸ்டு	ரிக்ஷா
ஜைனர்	ஸ்டேஷன்	சேஷ்டை
ராஜ்யம்	பாலஸ்தீனம்	ஹரித்துவார்
ராஜினமா	கஸ்தூரிபாய்	ஹவுல்தார்
கஜானு	ஸ்தாபனம்	ஹிம்சை
காலேஜ்	எக்ஸ்பிரஸ்	விவாஹம்
ஆஜர்	கிறிஸ்துமஸ்	ஹைகோர்ட்
ஜமீந்தார்	ஆஸ்பத்திரி	க்ஷணம்
ஜனவரி	பிரிட்டீஷ்	க்ஷேத்திரம்
ஜங்ஷன்	ரஸ்தா	க்ஷத்திரியர்
ஜவுளி	கிஸ்தி	க்ஷயரோகம்
ஜமேதார்	ஸ்டோர்ஸ்	
ஜப்தி	பஸ்	

பாடம் 19.

தப்பிதமாய் உச்சரிப்பதால் தப்பிதமாக எழுதப்படும் சொற்களும், அவற்றின் திருத்தமும்.

பிழை	திருத்தம்	பிழை	திருத்தம்
அடமழை	அடைமழை	தீவாளி	தீபாவளி
அருவாமணை	அரிவாள்மணை	துகை	தொகை
ஆலயம்	ஆலயம்	நஞ்சை	நன்செய்
ஆக்ஷி	ஆட்சி	ரொம்ப	நிரம்ப
எடையன்	இடையன்	நிகளம்	நீளம்
இடைபோடு	எடைபோடு	நெழல்	நிழல்
எண்ணை	எண்ணெய்	நேத்து	நேற்று
ஒத்தையாள்	ஒற்றையாள்	பாவக்காய்	பாகற்காய்
ஓச்சல்	ஓய்ச்சல்	பாச்சல்	பாய்ச்சல்
கண்முழி	கண்விழி	புட்டு	பிட்டு
கடேசி	கடைசி	புண்ணுக்கு	பிண்ணுக்கு
கார்த்து	காத்து	புஞ்சை	புன்செய்
காச்சல்	காய்ச்சல்	பேய்கிறது	பெய்கிறது
காக்ஷி	காட்சி	மனவி	மனைவி
கோர்த்து	கோத்து	மம்பட்டி	மண்வெட்டி
கோர்வை	கோவை	மாக்ஷி	மாட்சி
செத்தபொறு	சற்றேபொறு	மேச்சல்	மேய்ச்சல்
சமயல்	சமையல்	விபரம்	விவரம்
சிலதை	சிலவற்றை	முழுங்கு	விழுங்கு
சுவற்றை	சுவரை	வெத்தலை	வெற்றிலை
சிலவு	செலவு	வெங்கலம்	வெண்கலம்

பாடம் 20.

சொற்களுக்கு முதலில் வரக்கூடிய குறில்–நெடில் எழுத்துக்கள்.

அ	க	ச	த	ந	ப	ம	வ
ஆ	கா	சா	தா	நா	பா	மா	வா
இ	கி	சி	தி	நி	பி	மி	வி
ஈ	கீ	சீ	தீ	நீ	பீ	மீ	வீ
உ	கு	சு	து	நு	பு	மு	—
ஊ	கூ	சூ	தூ	நூ	பூ	மூ	—
எ	கெ	செ	தெ	நெ	பெ	மெ	வெ
ஏ	கே	சே	தே	நே	பே	மே	வே
ஒ	கொ	சொ	தொ	நொ	பொ	மொ	—
ஓ	கோ	சோ	தோ	நோ	போ	மோ	—

சொற்களில் பயிற்சி.

20ம் பாடத்திலுள்ள குறில்-நெடில் எழுத்துக்களை அ, ஆ என்று ஜோடி ஜோடியாகச் சொல்லும்படி செய்க. பார்த்தும் பாராமலும் எழுதும்படி செய்க. பின்பு மேலேகண்ட எழுத்துக்கள் சொற்களுக்கு முதலில் வரும்படி, மாணவர்களைச் சொந்தத்தில் சொற்களைச் சொல்லும்படி செய்க. ஆசிரியர் இடையிடையே சொல்லிக்காட்டி மாணவர்களை உற்சாகப்படுத்தி ஏராளமான சொற்களைச் சொல்லும்படி செய்ய வேண்டும். திறமையான மாணவர்கள் சொல்லும் சொற்களை மற்றமாணவர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

அ-வில் ஒரு சொல் சொன்னவுடன் ஆ-வில் ஒரு சொல் சொல்ல வேண்டும். உதாரணமாக அணில் என்று சொன்னவுடன், ஆலயம் என்று சொல்ல வேண்டும். சொற்களைச் சுத்தமாகச் சொல்லும்படி செய்ய வேண்டும். பின்பு சுத்தமாக

எழுத்துக் கூட்டிச் சொல்லும்படி செய்ய வேண்டும். மாணவர்கள் சொந்தத்தில் சொற்களைச் சொல்லும்போது எத்தனை எழுத்துச் சொற்களையும் சொல்லலாம். மாணவர்கள் சொற்களை எழுத்துக் கூட்டிச் சொல்லும்போது, அவைகளில்வரும் குறில்-நெடில் எழுத்துக்களை நீட்டாமல் சொல்லுகிறாயா? நீட்டிச் சொல்லுகிறாயா? என்றும், 7ம் பாடத்தில் முதல் படத்திற்கும் இரண்டாம் படத்திற்கும் முன்னுள்ள எழுத்துக்களை அழுத்தாமல் சொல்லுகிறாயா? அழுத்திச் சொல்லுகிறாயா? என்றும், 3ம் படத்திற்கு முன்னுள்ள ழ வ ரி எழுத்துக்களை அதிகமாக அழுத்திச் சொல்லுகிறாயா? என்றும் கேட்க வேண்டும். இவைகளுக்குப் பதில் சொல்லத் தெரிந்து விட்டால், சொற்களில் டிக்டேஷன் போடும்போது பிழையே ஏற்படாது. ஆகையால் டிக்டேஷன் போடுமுன் இது மிகமிக முக்கியமான பயிற்சியாகும்.

20ம் பாடத்திலுள்ள எழுத்துக்களில் சில எழுத்துக்களை டிக்டேஷன் போட்டு, அந்த எழுத்துக்கள் சொற்களுக்கு முதலில் வரும்படி மாணவர்களைச் சொந்தத்தில் ஏராளமான சொற்களை எழுதும்படி செய்ய வேண்டும். இதனுல் ஆசிரியர்களுக்கு வேலையேயின்றி, மாணவர்கள் சொந்தத்தில் ஏராளமான சொற்களை எழுதி விடுவார்கள். ஏராளமான சொற்களைச் சொந்தத்தில் எழுதிய பிறகு சொந்தத்தில் ஏராளமான வாக்கியங்களைச் சொல்லுவதும் எழுதுவதும் மிகமிக எளிது.

பாடம் 21.

இயல்புச் சொற்ருெடர்

இரு சொற்கள் சேரும்போது எவ்விதமாறுதலுமின்றி இயல்பாகச் சேரும் சொற்கள் இயல்புச் சொற்ருெடர் எனப்படும்.

மலை + நாடு	=	மலைநாடு
வெறி + நாய்	=	வெறிநாய்
முத்தி + நிலை	=	முத்திநிலை
எலி + வலை	=	எலிவலை
கை + நகம்	=	கைநகம்
கணக்கு + வேலை	=	கணக்குவேலை
நல்ல + பையன்	=	நல்லபையன்
மெல்ல + மெல்ல	=	மெல்லமெல்ல
நல்ல + பாம்பு	=	நல்லபாம்பு
தவளை + முட்டை	=	தவளைமுட்டை
அழகிய + சட்டை	=	அழகியசட்டை
சிரித்த + முகம்	=	சிரித்தமுகம்
கருப்பு + மை	=	கருப்புமை
தமிழ் + மொழி	=	தமிழ்மொழி
மண் + வேலை	=	மண்வேலை
உடைந்த + சட்டி	=	உடைந்தசட்டி
படித்த + பையன்	=	படித்தபையன்
வந்த + கண்ணன்	=	வந்தகண்ணன்
நல்ல + பசு	=	நல்லபசு
ஓடிய + தண்ணீர்	=	ஓடியதண்ணீர்
உண்ட + சோறு	=	உண்டசோறு
நமது + பொருள்	=	நமதுபொருள்
தனது + காரியம்	=	தனதுகாரியம்
உமது + சட்டை	=	உமதுசட்டை
மா + நகர்	=	மாநகர்
மா + பொருள்	=	மாபொருள்
மா + தேவர்	=	மாதேவர்

பயிற்சி

கீழ்க் கண்ட இரு சொற்களைச் சேர்த்து சொற்றொடராக எழுதுக:—

ஆடு + மாடு	ஆடி + மாதம்
ஆறு + முகம்	இலை + தழை
உச்சி + மேடு	கச்சி + நகர்
குலைத்த + நாய்	கொடிய + பேய்
வளர்ந்த + மரம்	சிறந்த + சாயம்
முடிந்த + வேலை	இரவு + பகல்
குப்பை + வண்டி	அழகிய + சீதை
அணி + கலம்	உண் + பொருள்
நனைந்த + புல்	தின் + பண்டம்
ஓடு + தண்ணீர்	தெளி + பொருள்
எலி + வளை	அடி + பிடி
இடிந்த + சுவர்	திரு + விழா
வற்றிய + குளம்	பறந்த + கிளி
பெரிய + காரியம்	வாழ்த்திய + பெரியார்

கீழ்க் கண்ட சொற்றொடரைப் பிரித்து இரு சொற்களாக எழுதுக:-

தென்னைமரம்	சன்னல்கதவு
செடிகொடி	குளிர்ந்தமனம்
வரண்டநாக்கு	கார்மேகம்
வெந்தசோறு	உண்டகனிகள்
தந்தமோதிரம்	கிழிந்தகுடை
நல்லபாடம்	கெட்டியானகோட்டை
நடித்தகதை	பாடியபாட்டு
உனதுபுத்தகம்	எனதுபள்ளி
தனதுகண்	களித்தமனம்
மாநகரம்	மாமலை
மாமரம்	மாதேவன்
இனியதமிழ்	மாகாளி
பயிற்சிவகுப்பு	அழுகியபழம்
மாபுரி	ஐந்துதலை

பாடம் 22.

தோன்றல் சொற்றொடர்

இரு சொற்கள் சேரும்போது இடையில் மெய்யெழுத்து தோன்றும் சொற்களுக்கு தோன்றல் சொற்றொடர் என்று பெயர். க், ச், த், ப், ங், ஞ், ந், ம் ஆகிய மெய்யெழுத்துக்களில் ஏதாவது ஒன்று தோன்றும். இந்த எட்டு எழுத்துக்களையும் மனப்பாடம் செய்க.

பச்சை + கிளி	=	பச்சைக்கிளி
நாய் + கால்	=	நாய்க்கால்
பூ + செடி	=	பூச்செடி
மூக்கு + சளி	=	மூக்குச்சளி
பாட + சென்று	=	பாடச்சென்று
சால + சிறந்த	=	சாலச்சிறந்த
வாழை + தண்டு	=	வாழைத்தண்டு
தமிழ் + தென்றல்	=	தமிழ்த்தென்றல்
தீ + தாங்கி	=	தீத்தாங்கி
கத்தரி + பூ	=	கத்தரிப்பூ
பார்த்து + பார்த்து	=	பார்த்துப்பார்த்து
போக + போக	=	போகப்போக
மா + காய்	=	மாங்காய்
இ + ஙனம்	=	இங்ஙனம்
மெய் + ஞானம்	=	மெய்ஞ்ஞானம்
அ + ஞானம்	=	அஞ்ஞானம்
பொய் + ஞானம்	=	பொய்ஞ்ஞானம்
மா + தோப்பு	=	மாந்தோப்பு
எ + நாடு	=	எந்நாடு
மா + தளிர்	=	மாந்தளிர்
இ + நாடு	=	இந்நாடு
அ + மலை	=	அம்மலை
பூ + பொழில்	=	பூம்பொழில்
எ + மாடு	=	எம்மாடு

பயிற்சி

கீழேகண்ட இரு சொற்களைச் சேர்த்து சொற்றொடராக எழுதுக:-

வாழை + காய்	வாழை + பூ
கடலை + பொறி	கத்தரி + செடி
மா + தூள்	மா + கல்
பேய் + சுரை	பேய் + புடலை
இப்படி + செய்த	அப்படி + போன
வெள்ளை + கரும்பு	தும்பி + கை
போய் + கொண்டு	பொட்டு + போட்டு
சால + சொல்லி	சால + தின்றான்
தேர் + தட்டு	நார் + கட்டில்
தமிழ் + பாட்டு	தமிழ் + தென்றல்
பூ + குடலை	பூ + செடி
தை + பொங்கல்	கை + சரக்கு
தீ + பொறி	பூ + செண்டு
மா + தளிர்	மா + குலை

கீழ்க்கண்ட சொற்றொடர்களைப் பிரித்து இரு சொற்களாக எழுதுக:—

மலர்ச்செண்டு	ஏர்க்கால்
மிளகாய்ப்பழம்	தேங்காய்த்தண்ணீர்
நெய்ப்போளி	பெட்டிச்சாவி
மாக்கோலம்	மாங்காய்
எக்காலம்	அச்சமயம்
வடக்குத்தெரு	அரைக்காசு
தமிழ்ப்பாடம்	தமிழ்ச்செல்வம்
வாழைப்பூ	வாழைச்சருகு
பாழ்ங்கிணறு	அங்ஙனம்
எம்மாடு	இஞ்ஞாலம்
கைந்நிலை	மெய்ப்பொருள்
மெய்ஞ்ஞானம்	மாலைப்பொழுது
மாஞ்சோலை	மாப்பொன்
இந்தச்சொல்	அந்தப்படி

பாடம் 23.

கெடுதல் சொற்ெறாடர்

இரு சொற்கள் சேரும்போது இடையில் ஒரு மெய்யெழுத்து கெட்டுப்போகும் சொற்களுக்கு கெடுதல் சொற்ெறாடர் என்று பெயர். **ம், ன், ர்** ஆகிய மெய்யெழுத்துக்களில் எதாவது ஒன்று கெடும். இந்த மூன்று எழுத்துக்களை மனப்பாடம் செய்க.

மரம் + வேர்	மரவேர்
குணம் + நலம்	குணநலம்
மதம் + மாற்றம்	மதமாற்றம்
ஞானம் + சூரியன்	ஞானசூரியன்
நீலம் + வானம்	நீலவானம்
நளன் + வெண்பா	நளவெண்பா
கந்தன் + புராணம்	கந்தபுராணம்
சிவன் + சரிதை	சிவசரிதை
வீமன் + பாகம்	வீமபாகம்
வள்ளுவர் + மாலை	வள்ளுவமாலை
முருகர் + வேள்	முருகவேள்

பயிற்சி

கீழ்க்கண்ட இரு சொற்களைச் சேர்த்து ஒருசொற்ெறாடராக எழுதுக:—

மனம் + வேதனை	மனம் + வலி
மணம் + மகன்	மணம் + வினை
நளன் + பாகம்	வீமன் + நூல்
மனம் + நிலை	அறம் + நெறி
கணம் + நாதன்	வனம் + சுந்தரி
வனம் + விறகு	பணம் + நிலை
வேதம் + கீதம்	ஞானம் + போதம்
வேதம் + நாதன்	நவம் + நீதன்
குறம் + வஞ்சி	உளம் + நூல்
தினம் + வேலை	பணம் + நாட்டம்
ஞானம் + நூல்	ஞானம் + சாரம்
வானம் + நூல்	நீலம் + மேகம்
சிவன் + கதை	பிரமன் + நூல்
வேதம் + ஞானம்	வாரம் + வெளியீடு

பயிற்சி

கீழ்க்கண்ட சொற்றொடரை இரண்டு சொற்களாகப் பிரித்தெழுதுக:—

தனநாசம்	குணதோசம்
மதமாற்றம்	இனவிலை
மரவேர்	ஏலவிற்பனை
குமாரசாமி	நீலமேகம்
வேதநாதன்	ஞானபோதம்
குறவஞ்சி	நவநீதன்
வாரவரவு	நிலவளம்
ஜனநெருக்கம்	அறநூல்
பிரமசாத்திரம்	ஞானசாரம்
தானதருமம்	சிவகதை
கந்தவேள்	முருகவேள்
முகவாட்டம்	சைவநெறி
மதநூல்	வானநிலை
கருமகாண்டம்	பாவபுண்ணியம்

பாடம் 24.

திரிதல் சொற்றொடர்

இரு சொற்கள் சேரும்போது ஒரு மெய்யெழுத்து வேறொரு மெய்யெழுத்தாக மாறி வரும் சொற்களுக்கு திரிதல் சொற்றொடர் என்று பெயர். **ல், ற்** *ஆகவும்,* **ள், ட்** *ஆகவும் மாறும்.* **ம்—ங், ஞ், ந்** *ஆகிய மெய்யெழுத்துக்களில் ஏதாவது ஒன்றாக மாறும். இவைகளை மனப்பாடம் செய்க.*

கல் + கண்டு	=	கற்கண்டு
பல் + பொடி	=	பற்பொடி
நெல் + பயிர்	=	நெற்பயிர்
முள் + செடி	=	முட்செடி
மனம் + குளிர	=	மனங்குளிர
பெரும் + கருணை	=	பெருங்கருணை
மரம் + செடி	=	மரஞ்செடி
தனம் + செயன்	=	தனஞ்செயன்
மனம் + தெளிய	=	மனந்தெளிய
பணம் + தர	=	பணந்தர

பயிற்சி

கீழ்க்கண்ட சொற்களைச் சேர்த்து சொற்றொடராக எழுதுக:—

மனம் + தளர்ந்து	தினம் + தினம்
சொல் + பெருக்கு	மல் + போர்
வாள் + போர்	கள் + குடம்
நல் + குணம்	நெல் + களம்
பணம் + கொண்டு	மனம் + சோர்ந்து
உளம் + கொண்டு	நிலம் + தெளிய
இடம் + தெரிந்து	தனம் + தர
வனம் + தாண்டி	தவம் + செய்
திரவியம் + தேடு	ஏவும் + காரியம்
இதில் + காணும்	தொழில் + சாலை
முத்தம் + கொடு	உறக்கம் + கொள்
வாயில் + கொண்டு	ஈரம் + துவட்டு
மறுநாள் + காலை	தோள் + பட்டை
வில் + போர்	முள் + புதர்

கீழ்க்கண்ட சொற்றொடரைப் பிரித்து இரு சொற்களாக எழுதுக:—

மானங்காத்து	தானங்கொடுத்து
மனங்கரைந்து	குணஞ்சிதைந்து
ஊக்கங்கொண்டு	குளங்குட்டை
முகங்கருகி	பணங்காசு
அகந்தெளிய	கற்பாறை
புற்செடி	பாற்குடம்
நாற்காலி	சொற்சாதுரியம்
நெற்பொலிவு	விற்குதை
நற்பொருள்	முட்செடி
கற்சட்டி	வாட்போர்
பகற்பொழுது	தோற்கருவி
வாட்படை	பரங்குன்றம்
வருங்காலம்	உள்ளந்தெளிய
முட்புதர்	கட்குடம்

பாடம் 25.

பலவிகாரச் சொற்றொடர்

இரண்டு சொற்கள் சேரும்போது ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துக்களில் மாறுதல் ஏற்படும் சொற்களுக்கு பலவிகாரச் சொற்றொடர் என்று பெயர்.

சொல் + தொடர்	=	சொற்றொடர்
கல் + தூண்	=	கற்றூண்
எள் + துணையும்	=	எட்டுணையும்
தென்னை + குலை	=	தென்னங்குலை
பனை + காய்	=	பனங்காய்
வெண்மை / வெண் } + தாமரை	=	வெண்டாமரை
செம்மை + கல்	=	செங்கல்
தாழை + பூ	=	தாழம்பூ
பூண் + நூல்	=	பூணூல்
மாடு + கொம்பு	=	மாட்டுக்கொம்பு
சிறுமை + உயிர்	=	சிற்றுயிர்
அருமை + உயிர்	=	ஆருயிர்
கருமை + மேகம்	=	கார்மேகம்
வெண்மை / வெண் } + நெய்	=	வெண்ணெய்
வேறு + வேறு	=	வெவ்வேறு
அல் + திணை	=	அஃறிணை
பசுமை + தமிழ்	=	பைந்தமிழ்
நாள் + தோறும்	=	நாடோறும்
ஐந்து + ஐந்து	=	ஐயைந்து
செம்மை + தமிழ்	=	செந்தமிழ்
ஐந்து + தொகை	=	ஐந்தொகை
நல் + தாய்	=	நற்றாய்
பசுமை + பொன்	=	பைம்பொன்
நல் / நன்மை } + நூல்	=	நன்னூல்
பொன் + தாமரை	=	பொற்றாமரை
பொன் + தேர்	=	பொற்றேர்

எண்ணுப் பெயர்

ஒன்று + ஒன்று	=	ஒவ்வொன்று
மூன்று + பத்து	=	முப்பது
ஆறு + பத்து	=	அறுபது
ஏழு + பத்து	=	எழுபது
எட்டு + பத்து	=	எண்பது
மூன்று + நூறு	=	முந்நூறு
நான்கு + நூறு	=	நானூறு
ஐந்து + நூறு	=	ஐந்நூறு
எட்டு + நூறு	=	எண்ணூறு
மூன்று + மூன்று	=	மும்மூன்று
நான்கு + நான்கு	=	நன்னான்கு

திசைப் பெயர்

தெற்கு + மேற்கு	=	தென்மேற்கு
வடக்கு + கிழக்கு	=	வடகிழக்கு
கிழக்கு + மேற்கு	=	கிழமேல்
தெற்கு + வடக்கு	=	தென்வடல்
தெற்கு + திசை	=	தென்றிசை
வடக்கு + திசை	=	வடதிசை
மேற்கு + திசை	=	மேற்றிசை
கிழக்கு + திசை	=	கீழ்த்திசை

காலப் பெயர்

இன்று + நாள்	=	இற்றைநாள்
அன்று + பொழுது	=	அற்றைப்பொழுது
நேற்று + பொழுது	=	நேற்றைப்பொழுது
பண்டு + காலம்	=	பண்டைக்காலம்

சிறப்புப் பெயர்

இராமன் + லட்சுமணன்	=	இராமலட்சுமணர்
சூரியன் + சந்திரன்	=	சூரியசந்திரர்
ஸ்திரீ + புருஷன்	=	ஸ்திரீபுருஷர்
தாய் + தந்தை	=	தாய்தந்தையர்
அண்ணன் + தம்பி	=	அண்ணன்தம்பிமார்

பயிற்சி

கீழேகண்ட இரு சொற்களைச் சேர்த்து சொற்றொடராக எழுதுக:-

பெருமை + ஊர்	தெற்கு + கிழக்கு
நல் + தாமரை	நாள் + தோறும்
மரம் + கிளை	எள் + துணையும்
நன்மை + நெறி	தண் + தாமரை
எட்டு + ஆயிரம்	வெம்மை + நீர்
தொன்மை + நூல்	வடக்கு + மேற்கு
ஏழு + ஏழு	பசுமை + தொடி
நேற்று + பொழுது	கல் + தூண்
வெண்மை + தாமரை	அருமை + பொருள்
வெண்மை + நெய்	தண் + நீர்
மேற்கு + திசை	எட்டு + எட்டு
நான்கு + நான்கு	பசுமை + தமிழ்
புல் + நுனி	மூன்று + நீர்
வெண்மை + நீறு	கொடுமை + கோல்

கீழ்க்கண்ட சொற்றொடர்களைப் பிரித்து இரு சொற்களாக எழுதுக:-

பொற்றகடு	நற்றுணை
முட்டாள்	பைந்தாள்
தொன்னகர்	நன்னகர்
சிற்றுள்	குற்றுயிர்
வெற்றுடம்பு	வெற்றிலை
நன்னடு	பொன்னடு
பன்னுள்	சின்னுள்
முத்தமிழ்	மூவேந்தர்
நாற்றிசை	எண்டிசை
திண்டோள்	சிற்றணை
பேரணை	பனங்காய்
பனங்கிழங்கு	தென்னங்குலை
அஃறிணை	நற்றிணை
நற்றமிழ்	தொண்ணூறு

பாடம் 26.

மெய்யும் உயிரும் சேர்ந்து உயிர்மெய்யெழுத்துக்கள்.

க் + அ = க	ங் + அ = ங	ச் + அ = ச
க் + ஆ = கா	ங் + ஆ = ஙா	ச் + ஆ = சா
க் + இ = கி	ங் + இ = ஙி	ச் + இ = சி
க் + ஈ = கீ	ங் + ஈ = ஙீ	ச் + ஈ = சீ
க் + உ = கு	ங் + உ = ஙு	ச் + உ = சு
க் + ஊ = கூ	ங் + ஊ = ஙூ	ச் + ஊ = சூ
க் + எ = கெ	ங் + எ = ஙெ	ச் + எ = செ
க் + ஏ = கே	ங் + ஏ = ஙே	ச் + ஏ = சே
க் + ஐ = கை	ங் + ஐ = ஙை	ச் + ஐ = சை
க் + ஒ = கொ	ங் + ஒ = ஙொ	ச் + ஒ = சொ
க் + ஓ = கோ	ங் + ஓ = ஙோ	ச் + ஓ = சோ
க் + ஔ = கௌ	ங் + ஔ = ஙௌ	ச் + ஔ = சௌ

ஞ் + அ = ஞ	ட் + அ = ட	ண் + அ = ண
ஞ் + ஆ = ஞா	ட் + ஆ = டா	ண் + ஆ = ணா
ஞ் + இ = ஞி	ட் + இ = டி	ண் + இ = ணி
ஞ் + ஈ = ஞீ	ட் + ஈ = டீ	ண் + ஈ = ணீ
ஞ் + உ = ஞு	ட் + உ = டு	ண் + உ = ணு
ஞ் + ஊ = ஞூ	ட் + ஊ = டூ	ண் + ஊ = ணூ
ஞ் + எ = ஞெ	ட் + எ = டெ	ண் + எ = ணெ
ஞ் + ஏ = ஞே	ட் + ஏ = டே	ண் + ஏ = ணே
ஞ் + ஐ = ஞை	ட் + ஐ = டை	ண் + ஐ = ணை
ஞ் + ஒ = ஞொ	ட் + ஒ = டொ	ண் + ஒ = ணொ
ஞ் + ஓ = ஞோ	ட் + ஓ = டோ	ண் + ஓ = ணோ
ஞ் + ஔ = ஞௌ	ட் + ஔ = டௌ	ண் + ஔ = ணௌ

த்+அ = த	ந்+அ = ந	ப்+அ = ப
த்+ஆ = தா	ந்+ஆ = நா	ப்+ஆ = பா
த்+இ = தி	ந்+இ = நி	ப்+இ = பி
த்+ஈ = தீ	ந்+ஈ = நீ	ப்+ஈ = பீ
த்+உ = து	ந்+உ = நு	ப்+உ = பு
த்+ஊ = தூ	ந்+ஊ = நூ	ப்+ஊ = பூ
த்+எ = தெ	ந்+எ = நெ	ப்+எ = பெ
த்+ஏ = தே	ந்+ஏ = நே	ப்+ஏ = பே
த்+ஐ = தை	ந்+ஐ = நை	ப்+ஐ = பை
த்+ஒ = தொ	ந்+ஒ = நொ	ப்+ஒ = பொ
த்+ஓ = தோ	ந்+ஓ = நோ	ப்+ஓ = போ
த்+ஔ = தௌ	ந்+ஔ = நௌ	ப்+ஔ = பௌ

ம்+அ = ம	ய்+அ = ய	ர்+அ = ர
ம்+ஆ = மா	ய்+ஆ = யா	ர்+ஆ = ரா
ம்+இ = மி	ய்+இ = யி	ர்+இ = ரி
ம்+ஈ = மீ	ய்+ஈ = யீ	ர்+ஈ = ரீ
ம்+உ = மு	ய்+உ = யு	ர்+உ = ரு
ம்+ஊ = மூ	ய்+ஊ = யூ	ர்+ = ரூ
ம்+எ = மெ	ய்+எ = யெ	ர்+எ = ரெ
ம்+ஏ = மே	ய்+ஏ = யே	ர்+ஏ = ரே
ம்+ஐ = மை	ய்+ஐ = யை	ர்+ஐ = ரை
ம்+ஒ = மொ	ய்+ஒ = யொ	ர்+ஒ = ரொ
ம்+ஓ = மோ	ய்+ஓ = யோ	ர்+ஓ = ரோ
ம்+ஔ = மௌ	ய்+ஔ = யௌ	ர்+ஔ = ரௌ

ல் + அ = ல	வ் + அ = வ	ழ் + அ = ழ
ல் + ஆ = லா	வ் + ஆ = வா	ழ் + ஆ = ழா
ல் + இ = லி	வ் + இ = வி	ழ் + இ = ழி
ல் + ஈ = லீ	வ் + ஈ = வீ	ழ் + ஈ = ழீ
ல் + உ = லு	வ் + உ = வு	ழ் + உ = ழு
ல் + ஊ = லூ	வ் + ஊ = வூ	ழ் + ஊ = ழூ
ல் + எ = லெ	வ் + எ = வெ	ழ் + எ = ழெ
ல் + ஏ = லே	வ் + ஏ = வே	ழ் + ஏ = ழே
ல் + ஐ = லை	வ் + ஐ = வை	ழ் + ஐ = ழை
ல் + ஒ = லொ	வ் + ஒ = வொ	ழ் + ஒ = ழொ
ல் + ஓ = லோ	வ் + ஓ = வோ	ழ் + ஓ = ழோ
ல் + ஔ = லௌ	வ் + ஔ = வௌ	ழ் + ஔ = ழௌ

ள் + அ = ள	ற் + அ = ற	ன் + அ = ன
ள் + ஆ = ளா	ற் + ஆ = றா	ன் + ஆ = னா
ள் + இ = ளி	ற் + இ = றி	ன் + இ = னி
ள் + ஈ = ளீ	ற் + ஈ = றீ	ன் + ஈ = னீ
ள் + உ = ளு	ற் + உ = று	ன் + உ = னு
ள் + ஊ = ளூ	ற் + ஊ = றூ	ன் + ஊ = னூ
ள் + எ = ளெ	ற் + எ = றெ	ன் + எ = னெ
ள் + ஏ = ளே	ற் + ஏ = றே	ன் + ஏ = னே
ள் + ஐ = ளை	ற் + ஐ = றை	ன் + ஐ = னை
ள் + ஒ = ளொ	ற் + ஒ = றொ	ன் + ஒ = னொ
ள் + ஓ = ளோ	ற் + ஓ = றோ	ன் + ஓ = னோ
ள் + ஔ = ளௌ	ற் + ஔ = றௌ	ன் + ஔ = னௌ

பாடம் 27.

சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவைகளை முதலெழுத்துக்களால் எழுதுதல்.

கடவுள் = க்அ ட்அ வ்உ ள்

மாணிக்கம் = ம்ஆ ண்இக் க்அ ம்

வணக்கம் = வ்அ ண்அ க் க்அ ம்

சொப்பனம் = ச்ஒ ப் ப்அ ண்அ ம்

அன்னம் = அ ன் ன்அ ம்

சத்தியம் = ச்அ த் த்இ ய்அ ம்

பெருங்காற்று = ப்எ ர்உங் க்ஆ ற் ற்உ

சிறுகுழந்தை = ச்இ ற்உ க்உ ழ்அ ந் த்ஐ

யானைத்தந்தம் = ய்ஆ ன்ஐ த் த்அ ந்த்அம்

வெள்ளிக்கிண்ணம் = வ்எ ள் ள்இ க் க்இ ண் ண்அ ம்

சுண்ணும்புச்சுவர் = ச்உ ண் ண்ஆ ம் ப்உ ச் ச்உ வ்அ ர்

கடவுள் படைக்கிறார் = க்அ ட்அ வ்உ ள் ப்அ ட்ஐ க் க்இ ற்ஆ ர்

திருவிழாநடக்கிறது = த்இ ர்உ வ்இ ழ்ஆ ந்அ ட்அ க் க்இ ற்அ த்உ

கோபம் பொல்லாதது = க்ஓ ப்அ ம் ப்ஒல் ல்ஆ த்அ த்உ

பூனை எலிபிடிக்கும் = ப்ஊ ன்ஐ எ ல்இ ப்இ ட்இ க் க் உ ம்

இந்த வருடம் நல்ல வேளாண்மை = இந் த்அ வ்அ ர்உ ட்அம் ந்அல் ல்அ வ்ஏ ள்ஆண் ம்ஐ

பணத்தினும் பார்க்கப் பெரியது நல்ல பெயர் = ப்அ ண்அத் த்இ ன்உ ம் ப்ஆர்க் க்அப் ப்எ ர்இ ய்அ த்உ ந்அல் ல்அ ப்எ ய்அர்

பயிற்சி

கீழே கண்ட சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவைகளை முதலெழுத்துக்களைக் கொண்டு எழுதுக:—

பாடசாலை, தெய்வம், ஒற்றுமை, முயற்சி, சந்தனம், சர்க்கரை சுத்தம், அமிர்தம், மங்கலம், அடக்கம், மாமிசம், ஆபரணம், கரும்பு.

குளிர்காலம், மேட்டுநிலம், பாழ்ங்கிணறு, அச்சுக்கூடம், புளியந்தோப்பு, இரத்தினமோதிரம், செங்கற்சூளை, முத்துச்சிப்பி, பசுச்சாணம், எட்டுத்திக்கு, வடதேசம், காட்டுவழி, முள்வேலி.

சூரியன் உதித்தது, குழந்தை தவழ்கிறது, கடவுள் நம்மைக் காக்கிறார், குருவாக்கைத் தட்டாதே, எவர்களோடும் இனிய வார்த்தை பேசு, எல்லோர் மேலும் அன்புள்ளவனாயிரு, பிறருடைய பொருளை இச்சியாதே.

பாடம் 28.

பலவகைச் சொற்றொடர்கள்.

பூ + அழகு	=	பூவழகு
கோ + இல்	=	கோவில்
மணி + அழகு	=	மணியழகு
தீ + எரிகிறது	=	தீயெரிகிறது
அப்படி + இப்படி	=	அப்படியிப்படி
அ + இடம்	=	அவ்விடம்
அ + ஆறு	=	அவ்வாறு
கண் + அழகு	=	கண்ணழகு
பொய் + உடம்பு	=	பொய்யுடம்பு
வேய் + குழல்	=	வேய்ங்குழல்
பாழ் + கிணறு	=	பாழ்ங்கிணறு
மாடு + எங்கே	=	மாடெங்கே
போக்கு + இல்லை	=	போக்கில்லை
கதவு + அடைத்தான்	=	கதவடைத்தான்
பல் + துளி	=	பஃறுளி
வேய் + யாது	=	வேயாது
சேய் + யாவன்	=	சேயாவன்
மான் + தோல்	=	மான்றோல்
மண் + தலம்	=	மண்டலம்
எ + நலம்	=	எந்நலம்
தன் + நலம்	=	தன்னலம்
தன் + புகழ்	=	தற்புகழ்
மேல் + நின்று	=	மேனின்று
சாண் + நிலம்	=	சாணிலம்
கோள் + நிலை	=	கோணிலை
கோன் + நிலம்	=	கோனிலம்
கல் + நெஞ்சு	=	கன்னெஞ்சு
எள் + நெய்	=	எண்ணெய்
முள் + தண்டு	=	முட்டண்டு
புல் + நுனி	=	புன்னுனி
தொள் + நூறு	=	தொண்ணூறு

பயிற்சி

கீழ்க்கண்ட இரு சொற்களைச் சேர்த்து சொற்றொடராக எழுதுக:—

செந்தீ + அருகில்
வேலை + ஆட்கள்
பொன் + ஆடை
பல் + அழகு
உள் + ஒளி
பொய் + ஆட்டம்
நெய் + அரி
ஓர் + ஆசாரியன்
ஓர் + இறகு
நிசம் + ஆக்கு
பால் + உணவு
ஒருமித்து + இரு
நிலமும் + ஆய்
எங்கும் + இரு
போகும் + இடம்
நூலின் + உடைய
பேர் + ஏடு
தேசத்தோடு + ஒத்து
உத்தமன் + ஆக
இறைவன் + அடி
எண்ணும் + எழுத்தும்
மேலோர் + ஆயினும்
கொற்றவன் + ஆய
வார்த்தை + ஆயினும்
வேந்தன் + உரை
நின்றான் + இருந்தான்
மூன்று + மாகாணி
பொன் + ஓடு
அழகு + அழிந்தது
அன்னம் + புள்

பனை + ஓலை
பொன் + அணி
கண் + எரிச்சல்
உள் + அழகு
உள் + ஆடை
மெய் + உணர்வு
கரை + ஏறு
ஐந்து + ஐந்து
புரை + ஏறி
இருள் + ஆகு
நீர் + உடன்
அளவு + இறந்த
தாவரம் + உணவு
வந்த + இடம்
தென்னை + ஓலை
விலை + ஏறு
மொழிவது + அறமொழி
நாடு + ஒப்பன
செல்வன் + அடி
அறம் + அன்று
சொல் + திறம்
கூர் + அம்பு
தேடாது + அழியேல்
ஒத்த + இடம்
மகிழ்ச்சி + அடை
நாலு + ஐந்து
பின்னம் + எண்
பால் + ஊட்டி
ஐந்து + தொகை
நாள் + தோறும்

கீழ்க்கண்ட சொற்றொடர்களைப் பிரித்து இரு சொற்களாக எழுதுக:-

தலையணை
நீரோடை
வகுப்பறை
முப்பத்தேழு
எவ்வெப்பொருள்
வாக்குரிமை
ஓராசிரியன்
ஓரிறகு
கதவிலக்கம்
அரசுரிமை
எங்குமிருப்பான்
போகுமிடம்
தென்னோலை
வைரமுள்ள
வெள்ளீயம்
தேசத்தோடொத்து
பின்னவெண்
பொன்னெழுத்து
இறைவனடி
எண்ணுமெழுத்தும்
பொற்றொடி
தாயிற்சிறந்த
கடலோடு
வார்த்தையமிர்தம்
ஒத்தவிடம்
அஃறிணை
கற்றோர்
இவ்வழி
பாலாறு
சேரிடம்
அசைவற
காசில்லை

ஓய்ந்திரு
ஓரணா
விளக்குமாறு
மாணாக்கன்றன்மை
முன்னறிவு
கரையேறு
ஐயைந்து
நிசமாக்கு
நீருடன்
தாவரவுணவு
வந்தவிடம்
அருந்தமிழ்
பனையோலை
மரமேறு
பேரேடு
நாடொப்பன
மனந்தடுமாறேல்
செல்வனடி
அறமன்று
சொற்றிறம்
கூரம்பு
திரவியந்தேடு
தேடாதழியேல்
சொல்லின்பம்
வேந்தனுரை
பைந்தாள்
பொற்றோர்
அவ்யானை
நெய்யாறு
வேறொரு
திருவருள்
சொல்லழகு

வாக்கியம்

வாக்கியம் பற்றிய விவரத்தை அனுபந்தத்தில் பார்க்க.

பாடம் 29.

பெயர்ச்சொல்

ஆண்பால் × பெண்பால்

சொற்களை எழுத்துக்கூட்டி வாசிக்கும்படியும் பார்த்து எழுதும்படியும் செய்க.

ஆண்பால் — பெண்பால்		ஆண்பால் — பெண்பால்	
அண்ணன்	— அக்காள்	தேவன்	— தேவி
அப்பன்	— அம்மை	தோழன்	— தோழி
அரசன்	— அரசி	நம்பி	— நங்கை
அழகன்	— அழகி	நாயகன்	— நாயகி
ஆசிரியன்	— ஆசிரியை	பகவான்	— பகவதி
இந்திரன்	— இந்திராணி	பண்டிதன்	— பண்டிதை
ஈஸ்வரன்	— ஈஸ்வரி	பதி	— பத்தினி
உத்தமன்	— உத்தமி	பாட்டன்	— பாட்டி
ஊமையன்	— ஊமைச்சி	பாலகன்	— பாலகி
எஜமான்	— எஜமாட்டி	பிதா	— மாதா
கணவன்	— மனைவி	புதல்வன்	— புதல்வி
கள்ளன்	— கள்ளி	புத்திரன்	— புத்திரி
கிழவன்	— கிழவி	பூட்டன்	— பூட்டி
குருடன்	— குருடி	பெரியப்பன்	— பெரியம்மை
சகோதரன்	— சகோதரி	பேரன்	— பேத்தி
சிறுவன்	— சிறுமி	பேயன்	— பேய்ச்சி
சீமான்	— சீமாட்டி	பொன்னன்	— பொன்னி
சுந்தரன்	— சுந்தரி	பௌத்திரன்	— பௌத்திரி
செல்வன்	— செல்வி	மகன்	— மகள்
சோதரன்	— சோதரி	மணவாளன்	— மணவாட்டி
தகப்பன்	— தாய்	மச்சான்	— மச்சினி
தமயன்	— தமக்கை	மனுஷன்	— மனுஷி
தம்பி	— தங்கை	மாமன்	— மாமி
துணைவன்	— துணைவி	மாணவன்	— மாணவி
துரை	— துரைச்சானி	முப்பாட்டன்	— முப்பாட்டி

TAMIL NADU ARCHIVES LIBRARY
112197

ஆண்பால்—பெண்பால்		ஆண்பால்—பெண்பால்	
மூர்க்கன்	— மூர்க்கி	வம்பன்	— வம்பி
மைத்துனன்	— மைத்துனி	வீரன்	— வீரி
மொட்டையன்	— மொட்டைச்சி	வீட்டுக்காரன்	— வீட்டுக்காரி
வஞ்சகன்	— வஞ்சகி	தனயன்	— தனயை

பயிற்சி

ஆசிரியர் சொந்தத்தில் இன்னும் அதிகமான ஆண்பால் பெண்பாற் சொற்களைக் கற்றுக் கொடுத்து, மாணவர்களை ஆண் பாலுக்குப் பெண்பாலும், பெண்பாலுக்கு ஆண்பாலும் சொல்லும் படியும் எழுதும்படியும் செய்க.

பாடம் 30.

பெயர்ச்சொல்: ஒருமை — பன்மை

சொற்களை எழுத்துக்கூட்டி வாசிக்கும்படியும் பார்த்து எழுதும்படியும் செய்க.

ஒருமை — பன்மை		ஒருமை — பன்மை	
மணி	— மணிகள்	ஆறு	— ஆறுகள்
ஆண்	— ஆண்கள்	ஈ	— ஈக்கள்
மான்	— மான்கள்	பசு	— பசுக்கள்
கதவு	— கதவுகள்	தெரு	— தெருக்கள்
கன்று	— கன்றுகள்	பூ	— பூக்கள்
குடை	— குடைகள்	மனு	— மனுக்கள்
சேய்	— சேய்கள்	வினு	— வினுக்கள்
மலர்	— மலர்கள்	தேனீ	— தேனீக்கள்
கடல்	— கடல்கள்	வாயு	— வாயுக்கள்

ஒருமை		பன்மை
மரம்	—	மரங்கள்
பட்டம்	—	பட்டங்கள்
குளம்	—	குளங்கள்
பழம்	—	பழங்கள்
மாடம்	—	மாடங்கள்
பள்ளம்	—	பள்ளங்கள்
நாள்	—	நாட்கள்
முள்	—	முட்கள்
ஆள்	—	ஆட்கள்
கல்	—	கற்கள்
சொல்	—	சொற்கள்
பல்	—	பற்கள்
புல்	—	புற்கள்
தேவன்	—	தேவர்
மகள்	—	மகளிர்
திருடன்	—	திருடர்
குமரன்	—	குமரர்
தோகை	—	தோகையர்
மாமன்	—	மாமன்மார்
		மாமனார்
மாமி	—	மாமியார்
		மாமிமார்
மங்கை	—	மங்கையர்
பெண்டு	—	பெண்டிர்
எதனை	—	எவற்றை

ஒருமை		பன்மை
குரு	—	குருமார்
		குருக்கள்
அண்ணன்	—	அண்ணன்மார்
தாய்	—	தாய்மார்
அத்தை	—	அத்தைமார்
நாயன்	—	நாயன்மார்
தம்பி	—	தம்பிமார்
தங்கை	—	தங்கைமார்
		தங்கையர்
என்னை	—	எங்களை
நான்	—	நாம், நாங்கள்
நீ	—	நீர், நீங்கள்
உன்னை	—	உங்களை
அவன்	—	அவர்(கள்)
எவன்	—	எவர்(கள்)
எவள்	—	எவர்(கள்)
இவன்	—	இவர்(கள்)
யாவன்	—	யாவர்(கள்)
அது	—	அவை(கள்)
இது	—	இவை(கள்)
தீது	—	தீயவை(கள்)
பெரிது	—	பெரியவை(கள்)
யாது	—	யாவை

பயிற்சி

ஆசிரியர் சொந்தத்தில் இன்னும் அதிகமாகக் கற்றுக் கொடுத்து, ஒருமைக்குப் பன்மையும், பன்மைக்கு ஒருமையும் சொல்லும்படியும் எழுதும்படியும் செய்க.

பாடம் 31.

வேற்றுமை உருபுகள் சேர்ந்த உதாரண வாய்ப்பாட்டுச் சொற்கள்.

இந்தப் பாடத்தில் கண்ட 31 பெயர்ச் சொற்களுடன், இரண்டாம் வேற்றுமையில் **ஐ** உருபையும், மூன்றாம் வேற்றுமையில் **ஆல்** உருபையும், நான்காம் வேற்றுமையில் **கு** உருபையும், ஐந்தாம் வேற்றுமையில் **இலிருந்து (இல் + இருந்து)** உருபையும், ஆறாம் வேற்றுமையில் **உடைய** உருபையும், ஏழாம் வேற்றுமையில் **இல்** உருபையும், எட்டாம் வேற்றுமையில் **ஏ** சேர்த்தும், வாய்ப்பாடமாகச் சொல்லத் தெரிந்துவிட்டால், எந்தப் பெயர்ச் சொல்லையும் வேற்றுமை உருபு சேர்த்துச் சொல்லத் தெரிந்து விடும். கீழே கண்டவற்றை ஜோடி ஜோடியாகச் சொல்லி மனப் பாடம் செய்க. ஜோடி ஜோடியாகச் சொல்வதால் விரைவில் மனப்பாடமாகும், மறக்கவும் செய்யாது. மக, மகவை—எனவும், மகவால், மகவுக்கு—எனவும், இப்படியே ஜோடி ஜோடியாகச் சொல்லுக.

கீழ்க்கண்டவற்றை மனப்பாடம் செய்க:—

1 மக	கடா	செடி
2 மகவை	கடாவை	செடியை
3 மகவால்	கடாவால்	செடியால்
4 மகவுக்கு	கடாவுக்கு	செடிக்கு
5 மகவிலிருந்து	கடாவிலிருந்து	செடியிலிருந்து
6 மகவினுடைய	கடாவினுடைய	செடியினுடைய
7 மகவில்	கடாவில்	செடியில்
8 மகவே!	கடாவே!	செடியே!

1	தேனீ	சிசு	மாது
2	தேனீயை	சிசுவை	மாதை
3	தேனீயால்	சிசுவால்	மாதால்
4	தேனீக்கு	சிசுவுக்கு	மாதுக்கு
5	தேனீயிலிருந்து	கிசுவிலிருந்து	மாதிலிருந்து
6	தேனீயினுடைய	சிசுவினுடைய	மாதினுடைய
7	தேனீயில்	சிசுவில்	மாதில்
8	தேனீயே!	சிசுவே!	மாதே!

1	மாடு	சோறு	பூ
2	மாட்டை	சோற்றை	பூவை
3	மாட்டால்	சோற்றால்	பூவால்
4	மாட்டுக்கு	சோற்றுக்கு	பூவுக்கு
5	மாட்டிலிருந்து	சோற்றிலிருந்து	பூவிலிருந்து
6	மாட்டினுடைய	சோற்றினுடைய	பூவினுடைய
7	மாட்டில்	சோற்றில்	பூவில்
8	மாடே!	சோறே!	பூவே!

1	தே	யானை	கோ
2	தேவை	யானையை	கோவை
3	தேவால்	யானையால்	கோவால்
4	தேவுக்கு	யானைக்கு	கோவுக்கு
5	தேவிலிருந்து	யானையிலிருந்து	கோவிலிருந்து
6	தேவுடைய	யானையினுடைய	கோவினுடைய
7	தேவில்	யானையில்	கோவில்
8	தேவே!	யானையே!	கோவே!

1 பெண்	ஆண்	* அம்
2 பெண்ணை	ஆணை	அம்மை
3 பெண்ணால்	ஆணால்	அம்மால்
4 பெண்ணுக்கு	ஆணுக்கு	அம்முக்கு
5 பெண்ணிலிருந்து	ஆணிலிருந்து	அம்மிலிருந்து
6 பெண்ணினுடைய	ஆணினுடைய	அம்மினுடைய
7 பெண்ணில்	ஆணில்	அம்மில்
8 பெண்ணே!	ஆணே!	அம்மே!
1 † தோம்	செய்	சேய்
2 தோமை	செய்யை	சேயை
3 தோமால்	செய்யால்	சேயால்
4 தோமுக்கு	செய்க்கு	சேய்க்கு
5 தோமிலிருந்து	செய்யிலிருந்து	சேயிலிருந்து
6 தோமினுடைய	செய்யினுடைய	சேயினுடைய
7 தோமில்	செய்யில்	சேயில்
8 தோமே!	செய்யே!	சேயே!
1 மலர்	பல்	பால்
2 மலரை	பல்லை	பாலை
3 மலரால்	பல்லால்	பாலால்
4 மலருக்கு	பல்லுக்கு	பாலுக்கு
5 மலரிலிருந்து	பல்லிலிருந்து	பாலிலிருந்து
6 மலரினுடைய	பல்லினுடைய	பாலினுடைய
7 மலரில்	பல்லில்	பாலில்
8 மலரே!	பல்லே!	பாலே!

* *அம் = அழகு, நீர், மேகம்.*

† *தோம் = குற்றம், தீமை.*

1	கூழ்	முள்	தேள்
2	கூழை	முள்ளை	தேளை
3	கூழால்	முள்ளால்	தேளால்
4	கூழுக்கு	முள்ளுக்கு	தேளுக்கு
5	கூழிலிருந்து	முள்ளிலிருந்து	தேளிலிருந்து
6	கூழினுடைய	முள்ளினுடைய	தேளினுடைய
7	கூழில்	முள்ளில்	தேளில்
8	கூழே!	முள்ளே!	தேளே!

1	பொன்	மான்	மரம்
2	பொன்னை	மானை	மரத்தை
3	பொன்னால்	மானால்	மரத்தால்
4	பொன்னுக்கு	மானுக்கு	மரத்துக்கு
5	பொன்னிலிருந்து	மானிலிருந்து	மரத்திலிருந்து
6	பொன்னினுடைய	மானினுடைய	மரத்தினுடைய
7	பொன்னில்	மானில்	மரத்தில்
8	பொன்னே!	மானே!	மரமே!

1	பல	அவை	எல்லாம்
2	பலவற்றை	அவைற்றை	எல்லாவற்றையும்
3	பலவற்றால்	அவற்றால்	எல்லாவற்றாலும்
4	பலவற்றிற்கு	அவற்றிற்கு	எல்லாவற்றிற்கும்
5	பலவற்றிலிருந்து	அவற்றிலிருந்து	எல்லாவற்றிலிருந்தும்
6	பலவற்றினுடைய	அவற்றினுடைய	எல்லாவற்றினுடையவும்
7	பலவற்றில்	அவற்றில்	எல்லாவற்றிலும்
8	× × ×	× × ×	× × ×

1 எல்லாரும்	4 எல்லாருக்கும்	7 எல்லாரிலும்
2 எல்லாரையும்	5 எல்லாரிலிருந்தும்	8 × × ×
3 எல்லாராலும்	6 எல்லாருடையவும்	

வேற்றுமையுருபு ஏற்கையில் சற்று மாறுதலடைந்து வேற்றுமையுருபு ஏற்கக்கூடிய சொற்கள்:

நான், யான் *என்பது* **என்** *என மாறி, இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரை உருபு சேரும்போது முறையே* **என்னை, என்னால், எனக்கு, என்னிலிருந்து, என்னுடைய, என்னில்** *என்று வரும். எட்டாம் வேற்றுமை உருபு கிடையாது. இதே மாதிரி* **தான்** *என்பது* **தன்** *எனவும்,* **நீ** *என்பது* **உன்** *எனவும்,* **நீர்** *என்பது* **உம்** *எனவும்,* **தாம்** *என்பது* **தம்** *எனவும்,* **நாம்** *என்பது* **நம்** *எனவும்,* **யாம்** *என்பது* **எம்** *எனவும்;* **நாங்கள், யாங்கள்** *என்பது* **எங்கள்** *எனவும்,* **நீங்கள்** *என்பது* **உங்கள்** *எனவும்,* **தாங்கள்** *என்பது* **தங்கள்** *எனவும் மாறுதலடைந்து,* 2, 3, 4, 5, 6, 7 *ஆகிய வேற்றுமையுருபுகளை ஏற்கும்.*

எட்டாம் வேற்றுமை ஏற்காத சொற்கள்:

நான், யான்; நாங்கள், யாங்கள்; நீ, நீர், நீங்கள்; தான், தாம் தாங்கள்; எவன், எவள், எவர்; எது, எவை; யாவன், யாவள், யாவர்; யாது, யாவை; அவன், அவள், அவர்கள்; அது, அவை; இவன், இவள், இவர்கள்; இது, இவை; எல்லாம், எல்லாரும்; மற்றவன், பிறன்; பல, சில; பலர், சிலர் முதலிய சொற்களுக்கு எட்டாம் வேற்றுமை இல்லை. (எட்டாம் வேற்றுமை விளி வேற்றுமை என்றும் சொல்லப்படும்)

பாடம் 32.

27 வினை முற்றுக்கள்

இந்தப் பாடத்தில் **கட** என்ற வினைப்பகுதி மூன்று காலங்களிலும் 27 வினை முற்றுக்களாக்கி காட்டப் பட்டிருக்கின்றது. பார்த்தும் பார்க்காமலும் எழுதும்படி செய்க.

இறந்தகாலம்	நிகழ்காலம்	எதிர்காலம்
கடந்தேன்	கடக்கிறேன்	கடப்பேன்
கடந்தோம்	கடக்கிறோம்	கடப்போம்
கடந்தாய்	கடக்கிறாய்	கடப்பாய்
கடந்தீர்கள்	கடக்கிறீர்கள்	கடப்பீர்கள்
கடந்தான்	கடக்கிறான்	கடப்பான்
கடந்தாள்	கடக்கிறாள்	கடப்பாள்
கடந்தார்கள்	கடக்கிறார்கள்	கடப்பார்கள்
கடந்தது	கடக்கிறது	கடக்கும்
கடந்தன	கடக்கின்றன	கடக்கும்

பயிற்சி

கீழேகண்ட 34 வினைப்பகுதிகளில் ஒவ்வொன்றையும் 27 வினைமுற்றுக்களாக்கிச் சொல்லுக, எழுதுக:—

கட, தா, படி = (வாசி), படி = (கீழ்ப்படி), ஈ = (கொடு), கெடு = (நாசமாக்கு), கெடு = (நாசமாகு), ஆடு, எழு, தொழு, பூ, வே = (தீயில்வேகு), வை = (போடு), வை = (நிந்தி), வரை, மோ = (தண்ணீர் மொள்ளுதல்), கொள = (கெளவு), உண், எண், செய், சாய் (பிறவினை), சாய் (தன்வினை), சேர் (பிறவினை), சேர் (தன்வினை), கொல், கல் = (படி), சொல், புல் = (தழுவு), ஆழ், ஆள், கேள், தள் = (தள்ளு), தின், பின் = (பின்னு)

பாடம் 33.

வினைமுற்றுக்களை வாக்கியங்களாக அமைத்தல்

இந்தப் பாடத்தில் 32ம் பாடத்திலுள்ள 27 வினை முற்றுக்கள் வாக்கியங்களாக அமைத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. பார்த்தும் பார்க்காமலும் எழுதுக:—

இறந்தகாலம்	நிகழ்காலம்	எதிர்காலம்
நான்கடந்தேன்	நான் கடக்கிறேன்	நான் கடப்பேன்
நாங்கள்கடந்தோம்	நாங்கள் கடக்கிறோம்	நாங்கள் கடப்போம்
நீகடந்தாய்	நீ கடக்கிறாய்	நீ கடப்பாய்
நீங்கள்கடந்தீர்கள்	நீங்கள்கடக்கிறீர்கள்	நீங்கள் கடப்பீர்கள்
அவன் கடந்தான்	அவன் கடக்கிறான்	அவன் கடப்பான்
அவள் கடந்தாள்	அவள் கடக்கிறாள்	அவள் கடப்பாள்
அவர்கள் கடந்தார்கள்	அவர்கள் கடக்கிறார்கள்	அவர்கள் கடப்பார்கள்
அது கடந்தது	அது கடக்கிறது.	அது கடக்கும்
அவைகள் கடந்தன	அவைகள் கடக்கின்றன	அவைகள் கடக்கும்

பயிற்சி

32 ம் பாடத்தில் பயிற்சியில் கொடுக்கப்பட்டிருக்கின்ற 34 வினைப்பகுதிகளில் ஒவ்வொன்றையும் 27 வினை முற்றுக்களாக்கி அவைகளை வாக்கியங்களாக எழுதுக.

பாடம் 34.

சிறு சிறு வாக்கியங்கள்

1. நட்சத்திரம் விட்டு விட்டு பிரகாசிக்கிறது.
2. கிரகம் சுற்றி வருகிறது.
3. கொட்டு முழங்குகிறது.
4. கடல் இரைகிறது.
5. அலே மோதுகிறது.
6. செல் அரிக்கிறது.
7. வேப்பங்காய் கசக்கிறது.
8. இலுமிச்சம்பழம் புளிக்கிறது.
9. மிளகாய் வத்தல் உறைக்கிறது.
10. பாக்கு துவர்க்கிறது.
11. உப்புக்கல் கரிக்கிறது.
12. சிங்கம் கர்ச்சிக்கிறது.
13. யானே பிளிறுகிறது.
14. பன்றி உறுமுகிறது.
15. கழுதை கத்துகிறது.
16. கன்று கதறுகிறது.
17. குதிரை கனேக்கிறது.
18. நாய் குரைக்கிறது.
19. நரி ஊளேயிடுகிறது.
20. மயில் ஆடுகிறது.
21. குயில் பாடுகிறது.
22. சேவல் கூவுகிறது.
23. கோழி கொக்கரிக்கிறது.
24. கிளி பேசுகிறது.
25. கிளி தத்தித் தத்தி நடக்கிறது.
26. நாகம் சீறுகிறது.
73. பாம்பு படம் எடுக்கிறது.
28. நல்ல பாம்பு படமெடுத்தாடுகிறது.

29. மலர் மேல் வண்டு மொய்க்கிறது.
30. பலாப் பழத்தின்மேல் ஈ மொய்க்கிறது.
31. குழந்தை அழுகிறது.
32. குழந்தை தவழ்கிறது.
33. தவளை கத்துகிறது.
34. பாற்காரன் பால் கறக்கிறான்.
35. பசுவின் காம்புகளில் பால் சுரக்கிறது.
36. பசு புல் மேய்கிறது.
37. சித்திரக்காரன் சித்திரம் வரைகிறான்.
38. சிற்பி சிற்பம் செதுக்குகிறான்.
39. பனை பாளை போடுகிறது.
40. கருவண்டு மரத்தைத் துளைக்கிறது.
41. மரம் பூத்துக் காய்த்து பழம் பழுக்கிறது.
42. கொடி படர்கிறது.
43. நெற்பயிர் பண்ணை கட்டுகிறது.
44. புழு அரிக்கிறது.
45. சேணியன் துணி நெய்கிறான்.
46. பட்சி பறக்கிறது.
47. மின்னல் மின்னுகிறது.
48. இடையன் மாடு மேய்க்கிறான்.
49. எறும்பு ஊர்கிறது.
50. புலி பாய்கிறது.
51. குரங்கு மரத்துக்கு மரம் தாவுகிறது.
52. பண்ணைக்காரன் கூரை வேய்கிறான்.

பயிற்சி

மேலே கண்ட வாக்கியங்கள் ஒருமையில் இருக்கின்றன. அவைகளுக்கு பன்மை சொல்லும்படியும் எழுதும்படியும் செய்க.

(உ-ம்)புலி பாய்கிறது. — புலிகள் பாய்கின்றன.

பாடத்தில் கண்ட நிகழ்கால வாக்கியங்களை, இறந்தகாலத்திலும், எதிர்காலத்திலும் சொல்லும்படியும் எழுதும்படியும் செய்க.

(உ-ம்) புலி பாய்கிறது.(நிகழ்காலம்) புலி பாய்ந்தது.(இறந்த காலம்) புலி பாயும்.(எதிர்காலம்)

பாடம் 35.

இதர வேற்றுமை உருபுகளும் வாக்கியங்களும்.

(31ம் பாடத்தில்கண்ட உருபுகளைத் தவிர இதர வேற்றுமை உருபுகள்.)

மூன்ரும் வேற்றுமை உருபுகள்:- ஒடு (= ஓடு) உடன், கொண்டு.

நான்காம் வேற்றுமை உருபுகள்–ஆக, பொருட்டு, நிமித்தம்.

ஐந்தாம் வேற்றுமை உருபுகள்:–இல், இன், இனின்று, (*இன் + நின்று*)இருந்து.

ஆரும் வேற்றுமை உருபுகள்:–அது (*அது என்பது பன்மைப் பெயர்ச் சொல்லுடன் தான்வரும்*)

ஏழாம் வேற்றுமை உருபுகள்:–இல், இடம், இடத்தில், கண் (*எங்கே, எப்பொழுதில் என்ற கேள்விகளுக்குப் பதில் தரும் மற்ற சொற்களும் ஏழாம் வேற்றுமையில் அடங்கும்*)

எட்டாம் வேற்றுமை உருபுகள் அல்லது தன்மைகள்:– படர்க்கைப் பெயர்ச் சொல்லின் கடைசி எழுத்தோடு ஓ சேர்த்துக் கூறுதல், கடைசி எழுத்துக் கெடுதல், அல்லது வேருெரு எழுத்தாகத் திரிதல், கடைசிக்கு முந்தின எழுத்து மாறுதல். அல்லது பெயர்ச் சொல் விகாரமின்றி அப்படியே இருத்தல்.

(இரண்டு விகாரங்கூட அடைலாம்) எட்டாம் வேற்றுமைச் சொல்லுக்கும் அடுத்த வார்த்தைக்கும் இடையே, கமா அல்லது வியப்புக்குறி இருக்க வேண்டும்.

மேற்கண்ட உருபுகளை வாக்கியங்களில் அமைத்தல்

3 ஆம் வேற்றுமை:– கண் கொண்டு பார்க்கலாம். காது கொண்டுகேட்கலாம். தகப்பனேடு மகன் வந்தான். மழையோடு.காற்று வந்தது. இராமனேடு சீதை வனம் சென்ருள்.

4 ஆம் வேற்றுமை:– கூலிக்காக அநேகர் வேலை செய்கிருர்கள். பணத்தின் பொருட்டு அநேகர் பாடு படுகிருர்கள். பொருள் நிமித்தம் அலைந்து திரிவார்கள் பலர்.

5 ஆம் வேற்றுமை:— குற்றால மலையுச்சியில் விழும் அருவி அழகாயிருக்கிறது. (= உச்சியிலிருந்து விழும் அருவி.) பரதனில் பக்தன் உண்டோ? (பரதனைப்போல பக்தன் உண்டோ?) பாலின் வெளிது கொக்கு. (பாலைப்போல் வெள்ளை நிறமானது கொக்கு.) அவனில் இவன் பெரியவன். (அவனைப் பார்க்கிலும் இவன் பெரியவன்.) விருதுநகரின் வடக்கே கொக்கலான்சேரி (= விருதுநகரிலிருந்து) ஊரினின்று நீங்கினேன். விருதுநகரினின்றும் வெளியே போனால் நல்லது. கிராமங்களிலிருந்தும் பிள்ளைகள் பாலகுருகுலத்திற்கு வருகிறார்கள்.

6 ஆம் வேற்றுமை:— முருகனது வேல் சிறந்தது. எனது தாய் மொழி இனிமையானது. நமது பள்ளிக்கூடம் அழகானது. எமது வீடு பெரிது. என (என் + அ) வீடுகள் பெரியவை. (= என்னுடைய வீடுகள் பெரியவை.) அகத்தினது அழகு முகத்தில் தெரியும்.

7 ஆம் வேற்றுமை:— வீட்டின்கண் யார் இருக்கிறார்? மலையில் மரம் செடி ஏராளம். மலையிடத்தில் மேகம் கூடும். மலைமேல் வீடு கட்டினால் நல்லது. பூவில் மணம் உண்டு. மணியில் ஒளி உண்டு. கடலின்கண் உப்புத் தண்ணீர் ஏராளம். மரத்தின் கீழ் வேர்கள் உண்டு. காலையில் குளிப்பது நல்லது. மாலையில் உலாவ வேண்டும். கோடையில் மழை பெய்யுமா? இருப்புப் பெட்டியினுள் பணம் இருக்கிறது.

8 ஆம் வேற்றுமை:— ஐயாவோ, வாருங்கள். முருக, இங்கே வா. குழந்தாய்! நில் வருகிறேன். பிள்ளாய், நன்றாய்ப்படி. பிள்ளைகாள், ஒழுங்காயிருங்கள். இந்திய மக்காள்! நாட்டிற்காக உழையுங்கள். காளீ! லோகமாதா, எங்களைக் காப்பாற்று. சர்வலோக பிதா! ஞானக்கண் தாரும். முருகாவோ! வரம் தாரும்.

பாடம் 36

நெருங்கிய ஒலிச் சொற்களை விளக்கும் வாக்கியங்கள்

1	செலவு	சிலருக்கு பணம் அதிகம் செலவாகிறது. வரவுக்கு மேல் செலவு செய்தல் கூடாது.
	சிலவு	சில வீடுகளில் எலிச் சிலவுகள் அதிகம். எலிச் சிலவுவீட்டில் இருந்தால் அடைத்து விட வேண்டும்.
2	எண்ணை	ஒரு பெரியஎண்ணை ஒரு சிறியஎண்ணால் வகுக்கலாம். சிறு எண்ணை பெரியஎண்ணால் வகுக்க முடியாது.
	எண்ணெய்	உஷ்ண நாட்டில் வாரம் ஒரு முறையாவது நன்கு எண்ணெய் தேய்த்துக் குளித்து ஓய்வாக இருக்க வேண்டும். தினமும் தலைக்கு எண்ணெய் தேய்ப்பது நல்லது.
3	மைல்	எட்டு பர்லாங்குகள் கொண்டது ஒரு மைல்
	மயில்	பார்ப்பதற்கு மயில் (பறவை) வெகு அழகாயிருக்கும்.
4	சயனம்	பகலில் சயனம் செய்வது நல்லதன்று.
	சைனம்	சைனம் என்ற மதம் நம்நாட்டில் முன்னொரு காலத்தில் பரவியிருந்தது. சைன மதத்தின் முக்கிய கொள்கை எவ்வுயிருக்கும் சிறு தீங்கும் செய்யக் கூடாது என்பதாம்.

5	உலகம்	நாம் வசிக்கும் உலகம் உருண்டை வடிவமானது. உலகம் கடவுளால் உண்டாக்கப்பட்டது.
	உலோகம்	தங்கம் விலையுயர்ந்த உலோகம். "சங்கம் செய்யாததைத் தங்கம் செய்யும்" என்பது பழமொழி.
6	குலை	தென்னங்குலை வெட்டித் தின்றால் கொலைக் குற்றமா?
	கொலை	ஒரு உயிரைக் கொல்வது கொலை. கொலைக் குற்றம் பெரும் பாவம்.
7	குடை	வெயிலுக்கும், மழைக்கும் குடை உபயோகப்படுகிறது. மழை பெய்யும்போது குடையில்லாமல் வெளியே போகக்கூடாது.
	கொடை	நற்காரியங்களுக்கு இனாம் கொடுப்பது கொடையாகும். கொடையிற் சிறந்தவன் கர்ணன் என்பார்கள்.
8	மானம்	மனிதன் முதலாவது காக்க வேண்டியது மானம். நாணயம் கெட்டால் மானமும் கெடும்.
	வானம்	மேகம் அதிகமாயிருந்தால் வானம் கருப்பாய் இருக்கும். வானத்தில் இரவில் நட்சத்திரங்கள் பிரகாசிக்கும்.
9	முகந்து	சிறுபிள்ளைகள் தண்ணீரை முகந்து முகந்து சிந்துவார்கள்.
	மோந்து	பூக்களை மூக்கினால் மோந்து பார்க்கிறோம்.

10	முழி	முழங்கால் முழி இல்லாவிட்டால் காலை மடக்க முடியாது.
	விழி	அவன் ''ஆடு திருடின கள்ளன்போல் விழிக்கிறான்''என்பார்கள்.
	மொழி	தாய் மொழியை முதலில் நன்கு கற்காமல் வேறு மொழியைக் கற்க முடியாது.
11	மீசை	என் பாட்டனாருக்கு மீசை நரைத்து விட்டது.
	வீசை	ஒரு வீசை சீனி 5 அணாவாக விற்றகாலமும் இருந்தது.
12	இடை	இருவர் பேசிக் கொண்டிருக்கும்போது இடையில் குறுக்கிடக் கூடாது.
	எடை	தராசில் நிறுக்கும்போது எடையில் வித்தியாசம் இருக்கக் கூடாது.
13	வேய்	கம்பந்தட்டையால் கூரை வேயலாம். கூரை வேய்ந்த வீடு வெயிற்காலத்தில் குளிர்ச்சியாய் இருக்கும்.
	மேய்	புலி பசித்தாலும் புல்லை மேயாது. ஆடு மாடுகள் புல்லை மேயும்.
14	இடையா	ஆடு மேய்க்கும் இடையனை எடையன் என்றால் தப்பிதம்.
	எடையா	இடையா! தோள்மேல் குட்டியை எடையா. (எடு + ஐயா)
15	குலை	நல்ல காரியத்தை குலைத்து விடாதே.
	குரை	'குரைக்கிற நாய் கடிக்காது.' என்பார்கள்

16	நுரை	உப்புத்தண்ணீரில் சோப்பைத் தேய்த்தால் நுரை வராது.
	முறை	வாங்கின கடனை முறை தவறாமல் கொடுக்க வேண்டும்.
17	துடை	துடைப்புண் சீக்கிரம் ஆறும். ஆனால் முழிப் புண் ஆற நாட்செல்லும். அழுக்கை அடிக்கடி துடைக்க வேண்டும்.
	தொடை	தமிழ் மொழியில் வல்லவர்கள் எதுகைத் தொடை மோனைத் தொடை போட்டுப் பேசுவார்கள். தொடுக்கப்படுவது தொடை எனப் பூமாலைக்குக் காரணப் பெயர்.
18	பற்று	நாணயமில்லாதவர்களிடம் பற்று வரவு வைத்துக் கொள்ளக் கூடாது.
	பத்து	பத்து ரூபாய் வரவு வந்தால், இருபது ரூபாய் செலவழிப்பது எப்படி?
19	உணர	நல்ல நூல்களைப் படித்துப் படித்து உணர உணர அறிவும் விருத்தியாகும்.
	உலர	வெயிலில் சாமான்கள் உலர உலர வற்றி வரண்டு போகும்.
20	கருப்பட்டி	கருப்பட்டி என்பது ஒரு ஊரின் பெயர்.
	கருப்புக் கட்டி	கருப்புக்கட்டி இனிக்கும். பனங்கள்ளிலிருந்து கருப்புக்கட்டி செய்யப்படுகிறது.

21	நஞ்சை	நஞ்சையுடையது நாகப் பாம்பு. நஞ்சை யுண்டான் என்பது சிவனுக்கு ஒரு பெயர்.
	நன்செய்	நன்செய்யில் நெல், வாழை, கரும்பு விளையும்.
22	குன்று	சிறிய மலைக்கு குன்று என்பது பெயர். குன்று தோறும் கோவில் கொண்டிருப்பவர் முருகக் கடவுள்.
	குண்டு	குண்டு கோலி விளையாடுவதில் சிறுபிள்ளை களுக்குப் பிரியம் அதிகம்.
23	குடுகுடு	"சடு குடு" என்ற விளையாட்டில் 'குடுகுடு' என்று சொல்லுவார்கள்.
	கொடு-கொடு	கடனைக் 'கொடு கொடு' என்று சிலர் நைப்பார் கள்.
24	குட்டு	தலையில் பிள்ளையார் குட்டு, குட்டு என்பார்கள்
	கொட்டு	கலியாணத்தில் 'மேளம் கொட்டு' என்பார்கள்
25	துகில்	துரோபதையின் துகிலை உரிந்தவன் துச்சா தனன்.
	துயில்	பகலில் துயில் கொள்வது கெட்ட பழக்கம்.

சரள வாக்கியங்கள்.

குறிப்பிட்ட பெயர்ச் சொல்லுடன் வேற்றுமை உருபுகள் சேர்த்து சரளமாக வாக்கியங்கள் அமைத்தல்.

பாடம் 37.

பசு.

(1) பசு ஒரு சாதுவான மிருகம். பசு வீட்டு மிருகம். பசு பால் கொடுக்கும். பசு புல், பருத்தி முதலியவைகளைத் தின்னும். பசு பார்க்க அழகாக இருக்கும். பசு தனது கன்றிடம் பிரியமாக இருக்கும். பசு 'மா' 'மா' என்று கத்தும். பசு வீட்டின் செல்வம்.

(2) பசுவை நாம் வளர்க்கிறோம். பசுவை சிலர் வணங்குகிறார்கள். பசுவை வளர்க்கப் பிரியப்படுகிறோம். பசுவையும் கன்றையும் பிரிக்காதே. பசுவைப் பட்டினி போடாதே. பசுவை குளிப்பாட்டு. பசுவை சுத்தமான இடத்தில் கட்டு. பசுவை இலட்சுமி என்பார்கள்.

(3) பசுவால் நமக்கு பல நன்மைகள் உண்டு. பசுவால் கன்று கிடைக்கும். பசுவால் பால், தயிர், வெண்ணெய் முதலியன கிடைக்கும். பசுவால் நாட்டின் செல்வம் பெருகும். பசுவால் உரத்திற்கு வேண்டிய சாணம் கிடைக்கும்.

(4) பசுவுக்கு இரண்டு கொம்புகள் உண்டு. பசுவுக்கு குஞ்சமுள்ள வால் உண்டு. பசுவுக்கு இரட்டைக் குளம்புகள் உண்டு. பசுவுக்கு பருத்திவிதையும் தவிடும் பிரியம். பசுவுக்கு பகை புலி, பசுவுக்கு புல் போடு, பசுவுக்கு தண்ணீர் வை. பசுவுக்கு தீனி வை. பசுவுக்கு கன்றின்மேல் பிரியம் அதிகம்.

(5) பசுவிலிருந்து பால் கிடைக்கும். பசுவிலிருந்து கிடைக்கும் சாணமும் கோமயமும் நல்ல உரம். பசுவிலிருந்து கொஞ்ச தூரத்தில் கன்று கட்டப்படும். பசுவிலிருந்து கோரோசனை கிடைக்கும்.

(6) பசுவினுடைய கொம்புகள் கூர்மையானவை. பசுவினுடைய காம்பில் பால் சுரக்கும். பசுவினுடைய கொம்புகள் பலமுள்ளவை. பசுவினுடைய பால் உருசியானது. பசுவினுடைய கொம்பால் சீப்புச் செய்யலாம். பசுவினுடைய வால் நுனியில் மயிர்க் குஞ்சம் உண்டு. பசுவினுடைய சாணம் நல்லது. பசுவினுடைய வெண்ணெய் மருந்துக்கு ஆகும். பசுவினுடைய பால் குழந்தைகளுக்கு நல்ல ஆகாரம். பசுவினுடைய கோமயத்தை வீடுகளில் தெளிப்பார்கள். பசுவினுடைய கொட்டம் சுத்தமாக இருக்க வேண்டும்.

(7) பசுவில் பலவகை உண்டு. பசுவில் பலநிறம் உண்டு. பசுவில் கருப்பு நிறமும் உண்டு. பசுவில் சிறந்தது காராம் பசு.

(8) பசுவே! இங்கே வா! பசுவே! பால் கொடு. பசுவே! என்னை முட்டாதே. பசுவே! மந்தைக்குப் போ. பசுவே! கொட்டத்துக்குள் நுழை.

பாடம் 38.

காகம்.

(1) காகம் பறக்கிறது. காகம் கரையும். காகம் 'கா கா' என்று கத்தும். காகம் மரத்தில் கூடுகட்டும். காகம் முட்டை இடும். காகம் சோறு தின்னும். காகம் கூட்டம் கூட்டமாய் வசிக்கும். காகம் கருமை நிறமுடையது. காகம் தெருவைச் சுத்தம் செய்யும். காகம் அதிகாலையில் எழுந்து குளிக்கும்.

(2) காகத்தைப் பார். காகத்தைக் கூப்பிடு. காகத்தைக் கூப்பிட்டுச் சோறு வைப்பார்கள். காகத்தை கூகை விரட்டும். காகத்தை தமிழ் நாட்டில் எங்கும் காணலாம்.

(3) காகத்தால் நன்மையுண்டு. காகத்தால் தெரு சுத்தமாகும். காகத்தால் காலைப்பொழுதைத் தெரிகிறோம். காகத்தால் ஒற்றுமைக் குணம் விளங்கும். காகத்தால் சகுனம் பார்ப்பார்கள்.

(4) காகத்துக்கு நிறம் கறுப்பு. காகத்துக்கு கண் கூர்மையாய் இருக்கும். காகத்துக்கு கண் கோணல் என்பார்கள். காகத்துக்கு சிலர் சோறுவைப்பார்கள். காகத்துக்கு பகை கூகை. காகத்துக்கு மாமிசம் பிரியம். காகத்துக்கு தெரியுமா எருதின் புண் வேதனை? காகத்துக்கு பகிர்ந்துண்ணும் குணம் உண்டு.

(5) காகத்திலிருந்து கற்பது என்ன? காகத்திலிருந்து நல்ல பழக்கம் தெரிந்து கொள்ளலாம். காகத்திலிருந்து மருந்து எடுக்கிறார்கள். காகத்திலிருந்து இறக்கை உதிரும்.

(6) காகத்தினுடைய நிறம் கறுப்பு. காகத்தினுடைய கழுத்து கபில நிறமாய் இருக்கும். காகத்தினுடைய சத்தம் 'கா -கா' என்பதே.

காகத்தினுடைய பார்வை கோணல் என்பார்கள். காகத்தினுடைய கால் விரல்கள் வளைந்திருக்கும். காகத்தினுடைய ஒற்றுமைக் குணம் சிறந்தது.

(7) காகத்தில் பலவகை உண்டு. காகத்தில் கறுப்பு அதிகமானதற்கு அண்டங்காக்கை என்று பெயர். காகத்தில் நல்ல பழக்கங்களை காணலாம்.

(8) காகமே! இங்கே வா. காகமே! பறந்து வா. காகமே! அதிகாலையில் எங்களைக் 'கா-கா' என்று கத்தி எழுப்பு. காகமே! ஏன் கோணலாய் பார்க்கிறாய்? காகமே! எங்கள் தின் பண்டங்களைக் களவாடாதே.

பாடம் 39.

தென்னை.

(1) தென்னை உயரமான மரம். தென்னை கிளைகள் இல்லாத மரம். தென்னை மட்டைத் தோகையுள்ளது. தென்னை கடற்கரையில் நன்றாய் வளரும். தென்னை ஆற்றோரம் செழிப்பாய் வளரும். தென்னை இளநீர், தேங்காய் தரும். தென்னை குலை குலையாய்க் காய்க்கும்.

(2) தென்னையை மணற்பாங்கான இடத்தில் பயிரிடுவார்கள். தென்னையைப் பார்த்தால் பனை, ஈந்து முதலிய மரங்களின் ஞாபகம் வரும். தென்னையை வரிசை வரிசையாக நடுவார்கள்.

(3) தென்னையால் பல நன்மைகள் உண்டு. தென்னையாலேயே வாழ்பவர்களும் உண்டு. தென்னையால் மலையாளத்தில் அநேகர் பிழைக்கிறார்கள். தென்னையால் அடுப்பெரிக்க மட்டைகள் பெறலாம். தென்னையால் இளநீர் பெறலாம்.

(4) தென்னைக்கு மற்ற மரங்களைப்போல் கிளைகள் இல்லை. தென்னைக்கு சல்லிவேர்கள் அதிகம். தென்னைக்கு மண் அணைக்க வேண்டும். தென்னைக்கு மணல் தரை வேண்டும். தென்னைக்கு ஆரம்பத்தில் அடிக்கடி தண்ணீர் விடவேண்டும்.

(5) தென்னையிலிருந்து மட்டை, தோகை, இளநீர், தேங்காய் முதலியவை கிடைக்கும். தென்னையிலிருந்து மட்டை வெட்டி கூடைபின்னுவார்கள். தென்னையிலிருந்து பூம்பாளை எடுத்து கல்யாணவீடுகளை அலங்கரிக்கலாம். ஒரு தென்னையிலிருந்து இன்னொரு தென்னைக்கு 16அடி தூரம் இருக்க வேண்டும்.

(6) தென்னையினுடைய ஒவ்வொரு பாகமும் பிரயோஜனமானது. தென்னையினுடைய இளநீர் தேகத்திற்கு நன்மை தரும். தென்னையினுடைய ஓலைகள், கிடுகு, விசிறி முதலியன பின்ன உதவும். தென்னையினுடைய மட்டைகளை அடுப்பெரிக்கலாம். தென்னையினுடைய காய்கள் குலை குலையாக இருக்கும்.

(7) தென்னையில் பல்வகை உண்டு. தென்னையில் பாளைகள் உண்டு. தென்னையில் வண்டு விழாமல் அடிக்கடி பார்த்து வரவேண்டும். தென்னையில் பறவைகள் கூடுகட்டுகின்றன.

(8) தென்னையே! தென்னையே! ஏன் வளர்ந்தாய் இவ்வளவு உயரம்? தென்னையே! நல்ல நிழல் கொடுக்க மாட்டாயா? தென்னையே! இளநீர் கொடு. தென்னையே! காற்றினால் விழுந்திடாதே.

பாடம் 40.

விருதுநகர்

1 விருதுநகர் பெரிய பட்டணம். விருதுநகர் ஒரு ரயில்வே ஜங்ஷன். விருதுநகர் வியாபாரத்திற்குப் பேர்போனது. விருது நகர் நாடார்கள் பெருத்த இடம். விருதுநகர் தமிழுக்குத் தொண்டு செய்து வருகிறது. விருதுநகர் பருப்பு வியாபாரத் திற்குப் பேர்போனது. விருதுநகர் தமிழ்க் கலையை வளர்த்து வருகிறது. விருதுநகர் பலதுறைகளில் விருத்தியாகிக் கொண்டு வருகிறது. விருதுநகர் ஒருகாலத்தில் சிறு பட்டி யாக இருந்தது. விருதுநகர் பிற்காலத்தில் முனிசிபாலிட்டியாக வளர்ந்து விட்டது.

2 விருதுநகரைப் பற்றிப் பலர் கேள்விப்பட்டிருக்கலாம். விருதுநகரைப்பார்த்தால் பெரிதாகத் தோன்றும். விருதுநகரைச் சுற்றிலும் நந்தவனங்கள் அநேகம் இருக்கின்றன. விருது நகரைப் பார்வையிட அநேகர் வருகிறார்கள். விருதுநகரைப் பார்க்க வருபவர்கள் எங்கள் குருகுலத்தையும் பார்க்க வரு வார்கள். விருதுநகரை ஒரு பெரிய வியாபார ஸ்தலம் என் பார்கள். விருதுநகரை இராமநாதபுரம் ஜில்லாவுக்குத் தலை நகராக்கலாம்.

3 விருதுநகரால் தமிழ் நாட்டிற்கே நல்ல புகழ் உண்டு. விருதுநகரால் தமிழ்க்கலை வளர்கிறது. விருதுநகரால் வியா பாரம் விருத்தியாகிறது. விருதுநகரால் அரசாங்கத்திற்கு அதிக வருமானம் கிடைக்கிறது.

4 விருதுநகருக்கு வடக்கே சத்திரரெட்டியபட்டி. விருதுநகருக்குக் கிழக்கே ரோசல்பட்டி. விருதுநகருக்குத் தெற்கே சூலக்கரை. விருதுநகருக்கு மேற்கே குமாரலிங்கபுரம். விருதுநகருக்கு தண்ணீர்க் குழாய் வசதி ஏற்பட்டிருக்கிறது. விருதுநகருக்கு மேற்கே ஒரு சிற்ருறு ஓடுகிறது.

5 விருதுநகரிலிருந்து பல வியாபாரச் சாமான்கள் ஏற்றுமதியாகின்றன. விருதுநகரிலிருந்து அருப்புக்கோட்டைக்கு மோட்டார் அடிக்கடி போகிறது. விருதுநகரிலிருந்து சிவனூரணிக்கும், சூலக்கரைக்கும் டவுன்பஸ் போகிறது. விருதுநகரிலிருந்து வடக்கே, தெற்கே, மேற்கே ரயில்பாதை செல்கிறது.

6 விருதுநகரினுடைய வியாபாரம் மிகவும் பெரிது. விருதுநகரினுடைய ஜனத்தொகை பெருகிக் கொண்டே வருகிறது. விருதுநகருடைய மக்கள் சுறுசுறுப்பானவர்கள். விருதுநகரினுடைய புகழ் ஓங்குக.

7 விருதுநகரில் பல ஜாதியார் வசிக்கிருர்கள். விருதுநகரில் நாடார்கள்தான் அதிகம். விருதுநகரில் பாலகுரு குலத்தில் கலைமகளுக்கு ஆலயம் கட்டப்பட்டிருக்கிறது. விருதுநகரில் சுமார் 25 பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. விருதுநகரில் கல்லூரி ஒன்று இருக்கிறது. விருதுநகரில் சர்க்கார் ஆஸ்பத்திரியும், பிரசவ ஆஸ்பத்திரியும் இருக்கின்றன.

8 விருதுநகரே! உன் புகழ் ஓங்குக! விருதுநகரே! இன்னும் விருத்தியாகு. விருதுநகரே, நீ பலவித கலைகளிலும் சிறந்து விளங்குவாயாக!

பாடம் 41.

பாலகுருகுல வித்யாலயம்

1 பாலகுருகுலம் ஒரு நல்ல வித்யாலயம். பாலகுரு குலம் விருதுநகரில் கிழக்கே இருக்கிறது. பாலகுருகுலம் ரயில்வேஸ்டேஷனிலிருந்து 6 பர்லாங் தூரத்திலிருக்கிறது. பாலகுருகுலம் உயர்தர ஆரம்பப் பாடசாலையாகும். பால குருகுலம் தமிழ், கணக்கு முதலிய பாடங்களை நன்றாய்ப் போதிக்கும். பாலகுருகுலம் தமிழுக்காக பாடுபட்டு வரு கின்றது. பாலகுருகுலம் அழகான கட்டிடங்களை உடையது. பாலகுருகுலம் சிறந்த வேலைத்திட்டங்களைக் கொண்டுள்ளது.

2 பாலகுருகுல வித்யாலயத்தை பாலகுருகுலம் என்றும் சொல்லலாம். பாலகுருகுலத்தை நடத்துபவர் நல்ல அனுபவசாலி. பாலகுருகுலத்தைப்பற்றி அநேக பத் திரிக்கைகளில் படித்திருக்கலாம். பாலகுருகுலத்தை ராஜாஜி முதலியவர்கள் பார்வையிட்டிருக்கிறார்கள். பாலகுருகுலத் தைப் பல அறிஞர்கள் புகழ்ந்திருக்கிறார்கள். பாலகுருகுலத் தைப்போல காற்றோட்டமான பள்ளிக்கூடம் வேறு எதுவும் இல்லை.

3 பாலகுருகுலத்தால் அநேகர் நன்மை அடைந்திருக் கிறார்கள். பாலகுருகுலத்தால் தமிழ் வளர்ச்சி பெறுகிறது. பாலகுருகுலத்தால் வியாபாரக் கணிதம் கற்பிக்கப்படுகிறது. பாலகுருகுலத்தால் நமது மொழிக்கும், தேசத்துக்கும் தொண்டு செய்யப்படுகிறது. பாலகுருகுலத்தால் இராட்டு விருத்தியாகிறது. பாலகுருகுலத்தால் பல பிரசுரங்கள், புத்தகங்கள் வெளியிடப்படுகின்றன.

4 பாலகுருகுலத்துக்கு நாலாபுறமும் நல்ல வெளியுண்டு. பாலகுருகுலத்துக்கு கிராமப்பிள்ளைகள் அநேகர் படிக்கவருகிறார்கள். பாலகுருகுலத்துக்கு மேற்கே இராமமூர்த்தி ரோடு, தெற்கு வடக்காய்ச் செல்கிறது. பாலகுருகுலத்துக்கு அருகே அநேக பங்களாக்கள் இருக்கின்றன. பாலகுருகுலத்துக்கு என்று ஒரு நல்ல வாசகசாலை இருக்கிறது.

5 பாலகுருகுலத்திலிருந்து 6 பர்லாங் தூரத்தில் ரயில்வே ஸ்டேஷன் இருக்கிறது. பாலகுருகுலத்திலிருந்து படித்து வெளியேறும் மாணவர்கள் சிறப்பாய் வாழ்கிறார்கள். பாலகுருகுலத்திலிருந்து வெளியாகும் தமிழ்ப் பிரசுரங்கள் நல்லவை. பாலகுருகுலத்திலிருந்து நல்ல பஞ்சும், இராட்டும், வில்லும், வீசனமும் வாங்கலாம்.

6 பாலகுருகுலத்தினுடைய புகழ் பரவி விட்டது. பாலகுருகுலத்தினுடைய சேவை, பலராலும் பாராட்டப்பட்டிருக்கின்றது. பாலகுருகுலத்தினுடைய நிர்வாகி அவர்கள் மாணவர்களுக்காக அல்லும் பகலும் சிந்தித்து உழைத்து வருகிறார்கள்.

7 பாலகுருகுலத்தில் நல்ல படிப்பிற்குச் சிறந்த வசதிகள் உண்டு. பாலகுருகுலத்தில் இராட்டுப் பயிற்சி நன்கு நடைபெறுகிறது. பாலகுருகுலத்தில் கலைமகள் ஆலயம் இருக்கிறது. பாலகுருகுலத்தில் சேவை மனப்பான்மை வளரும். பாலகுருகுலத்தில் மாணவர்கள் நீந்தி விளையாடுவதற்காக குளம் ஒன்று உள்ளது.

பாலகுருகுலத்தில் குளிப்பதற்கு நல்லவசதிகளுடன் தொட்டிகளும் குழாய்களும் உண்டு. பாலகுருகுலத்தில் இந்தியாத் தரைப்படம் இருக்கிறது. பாலகுருகுலத்தில் உலகப்படமும், மொழிவாரி மாகாணப்படமும் சுவரில் பெரிதாய் அழகாக வரையப்பட்டிருக்கின்றன.

8 பாலகுருகுலமே! உன் புகழ் ஓங்குக! பாலகுருகுலமே! நம் நாட்டிற்கும், தமிழ்மொழிக்கும் மென்மேலும் உழைப்பாயாக. பாலகுருகுலமே! மற்ற கல்விஸ்தாபனங்களுக்கு வழிகாட்டியாகுக!

பயிற்சி

ஆடு, எருமை, காளை, நாய், பூனை, குதிரை, யானை, குரங்கு, முயல் முதலிய மிருகங்களைப்பற்றியும்; சேவல், புறா, கிளி, மயில், மைனா, குருவி, வாத்து முதலிய பறவைகளைப் பற்றியும்; பனை, வாழை, ஆலமரம், வேம்பு, புளியமரம் முதலிய மரங்களைப்பற்றியும்; சொந்தஊர், சொந்தப்பள்ளிக்கூடம், ரயில்வேஸ்டேஷன் ஆகியவைகளைப்பற்றியும்; எட்டு வேற்றுமைகளிலும் சரள வாக்கியங்களைச் சுத்தமாகச் சொல்லும்படி செய்க. ஒவ்வொரு வேற்றுமையிலும் எத்தனை வாக்கியங்கள் சொல்ல முடியுமோ அத்தனையும் நன்கு சிந்தித்துச் சொன்ன பிறகுதான் அடுத்த வேற்றுமைக்குப் போகவேண்டும். கடைசியில் எட்டு வேற்றுமையிலும் எழுதச் செய்க.

கட்டுரைகள்

குறிப்பிட்ட பொருளைப் பற்றிச் சிந்தனை செய்து சில கேள்விகளை வரிசைப்படுத்தி எழுதிக்கொண்டு, அவைகளுக்கு விடை எழுதினால் அது கட்டுரை (Composition) ஆகிவிடும். அதைச் சிந்தனை செய்து, சில குறிப்புகளை வரிசைப்படுத்தி எழுதிக்கொண்டு, அவைகளை விவரித்து எழுதினால் வியாசம் (Essay) ஆகிவிடும். அவைகளை விவரித்துக்கூட்டங்களில் பேசினால் சொற்பொழிவு எனப்படும்.

பாடம் 42.

பசு

(1) *பசு எந்த இனத்தைச் சேர்ந்தது?* (2) *பசுவின் உடல் உறுப்புக்கள் எப்படி அமைந்துள்ளன?* (3) *பசுக்கள் எங்கெங்கே காணப்படும்?* (4) *பசுவுக்கு ஆகாரப் பொருள்கள் என்னென்ன?* (5) *பசுவின் சுபாவமென்ன?* (6) *பசுவினால் நமக்கு என்னென்ன உபயோகம் உண்டு?* (7) *பசுவைப்பற்றிய பழமொழி என்ன?*

கட்டுரை

பசு வீட்டில் வளர்க்கப்படும் பிராணிகளில் ஒன்று. மிருகங்களில் மாமிசம் தின்பவையும் உண்டு; தின்னாதவையும் உண்டு. மாமிசம் தின்னாத மிருகங்களின் இனத்தைச் சேர்ந்தது பசு.

பசுவுக்கு இரட்டைக் குளம்புகள் உண்டு. அதற்குத் தலையில் இரண்டு கொம்புகள் உண்டு. பூரண வளர்ச்சி பெற்ற பசுவுக்கு கீழ்த்தாடையில் எட்டுப் பற்கள் உண்டு. பசுவுக்கு நீண்ட வால் உண்டு. வாலின் நுனியில் மயிர்க் குஞ்சம் இருக்கும்.

பசும்புல் உள்ள நாடுகளில் பசுக்கள் அதிகம். இந்தியா, இங்கிலாந்து, சுவிட்ஜர்லாந்து, ஹாலந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் பசுக்கள் ஏராளமாய்க் காணப்படுகின்றன.

பசு புல், வைக்கோல், இளந்தளிர், தட்டை, இலே, தழை, கொடி முதலியவற்றைத் தின்னும். தவிடு, பிண்ணுக்கு, பருத்திவிதை முதலியன பசுவுக்குப் பிரியமான உணவாகும்.

பசு பயந்துவெறிக்கும் சுபாவமுடையது. அது அவசர அவசரமாகப் புல்லே மேயும். பின்பு அது தனியாக இருந்து அசைபோடும். பசு சாதுவான மிருகம். ஆனுல், அது தனக்குத் தீங்கு செய்பவர்களேக் கொம்பினுல் முட்ட முயலும்.

பசு நமக்கு பலவகையில் பிரயோசனமானது. பசுவிலிருந்து பால் கறக்கிறேம். பாலிலிருந்து தயிர், மோர், வெண்ணெய் எடுக்கிறேம். வெண்ணெய்யிலிருந்து நெய் உருக்குகிறேம் பசுவின் கொம்பு, எலும்பு, தோல் ஆகியவற்றிலிருந்து சீப்பு, பொத்தான், • செருப்பு, தோற்பெட்டி முதலிய சாமான்கள் செய்கிறுர்கள். பசுவின் சாணமும் மூத்திரமும் விவசாயத்திற்கு ஏற்ற சிறந்த உரமாகும். விஷப் பூச்சிகள் வராமலிருப்பதற்காக இந்துக்களில் பலர் பசுவின் சாணத்தால் வீட்டின் தரையை மெழுகுகிறுர்கள். பசுவின் கோமயத்தைத் தரையில் தெளிக்கிறுர்கள். இந்துக்கள் பசுவைத் தெய்வமாகக் கொண்டாடுகிறுர்கள்.

''பார்த்தால் பசுப்போல, பாய்ந்தால் புலிபோல'' என்ற பழமொழி வழங்குகிறது. கபடக்காரரைப் பார்த்து 'பசுத் தோல் போர்த்த புலி' என்பார்கள்.

பாடம் 43.

காகம்.

(1) காகம் என்பது என்ன? அதன் வேறு பெயர்கள் என்ன? (2) காகத்தின் நிறம் என்ன? உறுப்புக்கள் எப்படிப் பட்டவை? (3) காகம் தின்னும் உணவுகள் என்னென்ன? (4) காகத்தின் பழக்கவழக்கங்கள் என்னென்ன? (5) காகத்தினல் நமக்குப் பிரயோசனம் யாது? (6) காகத்தைப்பற்றிய பழமொழி உண்டா?

கட்டுரை

காகம் ஒரு பறவை. அதற்கு **காக்கா, காக்கை** என்ற பெயர்களும்உண்டு. "கா-கா" என்று கத்துவதனுல் அப்படிப் பெயர் வந்திருக்கலாம்.

காகத்தின் நிறம் கறுப்பு. கழுத்தில் மாத்திரம் சிறிது சாம்பல் நிறம் உண்டு. காகத்திற்கு மிருதுவான இறக்கைகள் இருக்கும். அதன் அலகு மிகவும் உறுதியானது. கால் விரல்களில் கூரிய வளைந்த நகங்கள் உண்டு.

காகம் அழுகிய பழம், புழு, பூச்சி, மாமிசம் முதலிய பொருள்களைத் தின்னும். சோறு, ரொட்டி முதலியவற்றையும் தின்னும். செத்த எலியைத் தின்ன காகத்திற்கு விருப்பம் மிகுதி.

காகம் மரக்கிளையில் கூடுகட்டி வாழும். பேராசை, தந்திரம், திருட்டுத்தனம் ஆகிய துர்க்குணங்கள் அதனிடம் உண்டு. அதிகாலையில் கண்விழித்தல், குளித்தல், தன் இனத்தாரை அழைத்து உண்ணல் ஆகிய நல்ல பழக்க வழக்கங்களைக் காணலாம்.

காகம் நமக்குச் சில வகையில் பிரயோசனமானது. அது தெருக்களில் கிடக்கும் அழுகிய பொருட்களையும் எச்சிற் பொருட்களையும் தின்று தெருவைச் சுத்தமாக்குகின்றது. அதி காலையில் "கா-கா" என்று கரைந்து நம்மைத் தூக்கத்தி லிருந்து எழுப்புகிறது.

"காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு" என்ற பழ மொழி நம் தமிழ் நாட்டில் வழங்குகிறது. "முக்காலும் காகம் மூழ்கிக்குளித்தாலும் கொக்காகுமோ கொங்கணவா? என்று கேட்பார்கள். "காகம் கரைந்துண்ணும்" என்றுர் திரு வள்ளுவர்.

பாடம் 44.

தென்னை.

(1) தென்னைமரம் எங்கெங்கே நன்ருய் வளரும்? (2) தென்னைமரத்தின் பாகங்களில் ஒவ்வொன்றும் எப்படி யிருக்கும்? (3) தென்னையால் நமக்கு என்னென்ன வகையில் பயன் உண்டு? (4) தென்னையினத்தைச் சேர்ந்த வேறு மரங் கள் எவை? (5) தென்னையைப்பற்றிய பழமொழி என்ன?

கட்டுரை

தென்னைமரம் உலகத்தில் கிழக்குக் கண்டங்களில் உஷ்ணப்பிரதேசத்தில் மணற்பாங்கான இடங்களில் செழித்து வளரும். பொதுவாக அது ஆற்றங்கரை, கடற்கரை போன்ற மணற்பாங்கான இடங்களில் நன்ருய் வளரும். மலையாள நாட்டில் தென்னை அதிகம். செழிப்பான சிறந்த தென்னைகள் அந்நாட்டில் ஏராளம். பஸிபிக் சமுத்திரக்கரையிலும், இந்து மகாசமுத்திரக்கரையிலும் தென்னைமரங்கள் ஏராளமாக உண் டாகின்றன.

தென்னைமரத்திற்கு மற்ற மரங்களைப்போல் கிளைகளும், இலைகளும் இல்லை. நன்றாய் வளர்ந்த மரம் சுமார் 60 அடி உயரமிருக்கும். மரத்தின் உச்சியில் நீண்ட தோகை மட்டைகள் அடர்ந்திருக்கும். மட்டைகளுக்கிடையே தென்னங்குலைகளைக் காணலாம். குடை விரித்ததுபோல தோகைகள் உச்சியிலிருக்கும். நன்றாய் வளர்ந்த மரத்தின் மட்டையின் நீளம் சுமார் பத்து அடி இருக்கும். இறக்கைகள் போன்று மட்டையிலிருந்து இருபுறமும் பச்சை அல்லது பழுப்புத் தோகைகள் வளர்ந்திருக்கும். தென்னங்குருத்து அழகாயிருக்கும். மரத்தின் உச்சியில் தென்னங்குலையில் சுமார் பத்து அல்லது பன்னிரண்டு இளநீர்க்காய்கள் கொத்துக் கொத்தாகக் காய்த்திருக்கும்.

தென்னைமரம் நமக்குப் பலவகையில் பயன் படும். வெயிற் காலத்தில் இளநீர்ப்பானம் நன்மை தரும். தேங்காயின் பருப்பு நமக்குச் சிறந்த ஆகாரமாகும். தேங்காயின் தண்ணீர் தித்திப்பாயிருக்கும். முற்றிய தேங்காய்ப் பருப்பைக் காயவைத்துச் செக்கில் ஆட்டி தேங்காயெண்ணெய் எடுப்பார்கள். சிரட்டைகள் தீ எரிக்கவும், அகப்பைகள் செய்யவும் பயன்படும். மட்டையின் நாரிலிருந்து கயறு திரிப்பார்கள். தென்னங்கிடுகுகளால் வீடு வேயலாம்; பூக்குடலை, விசிறி முதலியன பின்னலாம். தோகையின் நரம்புக் குச்சிகளால் பெருக்குமாறு (விளக்குமாறு) கட்டுவார்கள். தென்னங்கள்ளிலிருந்து வெல்லம் காய்ச்சலாம்.

பனை, கமுகு, ஈச்சை, பேரீச்சை ஆகிய மரங்கள் தென்னை இனத்தைச் சேர்ந்தவை. இவைகள் எல்லாவற்றிலும் தென்னையே மனிதருக்கு மிகவும் உபயோகமுள்ளது.

"தென்னைமரத்தில் தேள்கொட்ட, பனைமரத்தில் நெறிகட்டுமா?" என்பது பழமொழி. "தென்னையின் நிழல் தெருவடைத்துவிடுமா?" என்றும் கேட்பார்கள்.

பாடம் 45.

விருதுநகர்.

(1) *அமைந்துள்ள இடம்.* (2) *நகர் அமைப்பு.* (3) *ஜனங்களும் தொழில்களும்.* (4) *முக்கிய கட்டிடங்கள்.* (5) *ஸ்தாபனங்கள்.* (6) *நகர நிர்வாகம்.* (7) *இதர விசேஷங்கள்.*

விருதுநகர், இராமநாதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த சாத்தூர் தாலுகாவிலுள்ள ஒரு முக்கிய வியாபாரஸ்தலம். தென் இந்திய ரயில்வேப் பாதையிலுள்ள ஒரு முக்கிய சந்திப்பு (ஜங்ஷன்). சென்னையிலிருந்து கன்னியாகுமரிக்குச் செல்லும் பெரிய ரஸ்தாவின்மேல், மதுரைக்குத் தெற்கே சுமார் முப்பதாவது கல்லில் அது அமைந்திருக்கிறது. வடக்கில் சென்னையிலிருந்தும், தெற்கில் தூத்துக்குடியிலிருந்தும், மேற்கில் திருவனந்தபுரத்திலிருந்தும் வரும் ரயில் பாதைகள் இங்கு சந்திக்கின்றன. இங்கிருந்து நான்கு திசைகளிலும் ரஸ்தாக்கள் செல்கின்றன. இந்த ரஸ்தாக்கள் மூலம் வண்டிப் போக்குவரத்துக்கள் நடைபெறுகின்றன.

நகரின் நடுவே அழகிய பெரிய தெப்பக்குளமும், தெப்பக்குளத்தைச் சுற்றிக் கடைத் தெருக்களும் மிக்க அழகாய் அமைந்துள்ளன. தெற்கு வடக்காக ஒரு மைல் நீளமுள்ள கடைவீதியும், நகரின் முக்கிய கோவிலாகிய மாரியம்மன் கோவிலுக்கு மேல்புறமுள்ள பெரிய மைதானமும், மைதானத்தைச் சுற்றி அமைந்த கோவில்களும், க்ஷத்திரிய வித்யா சாலையும் நகருக்கு அழகைத் தருவனவாகும்.

விருதுநகரின் ஜனத்தொகை சுமார் ஐம்பதினாயிரம். பெரும்பான்மையோர் நாடார் பெருமக்கள். முக்கிய தொழில் வியாபாரம். சிறிது விவசாயம் நடைபெறுகிறது.

இங்கு பஞ்சாலைகளும், எண்ணெய் மில்களும் மாவுமில் களும், பருப்பு உடைக்கும் தொழிற்சாலைகளும் அநேகமிருக் கின்றன. இவைகளில் ஏராளமான ஜனங்கள் வேலைசெய் கின்றனர். விருதுநகர் சிறந்த வியாபார ஸ்தலமாதலால், இங்கிருந்து வெளியூர்களுக்கு ஏற்றுமதியாகும் சரக்குகளும் வெளியூர்களிலிருந்து இறக்குமதியாகும் சரக்குகளும் அதிகம். இத்துறையில் வேலைசெய்யும் கைவண்டித் தொழி லாளர்கள் இங்கு அநேகர் உண்டு. இங்கு ஒரு பெரிய பஞ்சுப்பேட்டை இருக்கிறது. பல ஊர்களிலிருந்தும் வியாபாரி கள் இங்கு வந்து பருத்தி வாங்குவார்கள்; விற்பார்கள். விருதுநகரில் மட்டுமின்றி இந்தியா முழுவதிலுமுள்ள பெரிய நகரங்களிலும் வியாபாரம் நடத்தும் பெரிய வியாபாரிகள் இந்நகரில் இருக்கிறார்கள்.

இந்நகரின் முக்கிய பொதுஸ்தாபனங்கள் க்ஷத்திரிய வித்தியாசாலை, தபால் ஆபீஸ், நகராண்மைக் கழகக் காரியா லயம், வருமானவரிக் காரியாலயம், செந்திக்குமாரநாடார் கல்லூரி, பாலகுருகுல வித்யாலயம் முதலியனவாகும். இவற் றைத் தவிர பல தனவந்தர்களின் அழகிய மாளிகைகளும், பூங்காவனங்களும் இருக்கின்றன. இந்த நகரில் ஒரு கல்லூரி யும், ஆண்களுக்குரிய உயர்நிலைப்பள்ளிகளும், பெண்கள் உயர்நிலைப்பள்ளிகள் இரண்டும், அநேக ஆரம்பப் பாடசாலை களும் இருக்கின்றன இவைகளுள் பாடசாலைக்குரிய எல்லா வசதிகளுடன் கூடியதும், மாணவர்களிடையே ஒழுக்கத்தை வளர்க்கக்கூடியதுமான பாலகுருகுல வித்யாலயம் குறிப் பிடத் தகுந்தது.

இங்கு பல்வேறு அரசியல் ஸ்தாபனங்களும், தொழிற் சங்கங்களும், இலக்கிய மன்றங்களும், நூல் நிலையங்களும், அறநெறிக்கழகங்களும் இருக்கின்றன. பல அச்சியந்திரசாலை களும், பத்திரிகைக் காரியாலயங்களும் இருக்கின்றன.

இந்நகர் ஒரு முனிசிபாலிடியாகும். 25 வார்டுகளைக் கொண்டது. 28 கௌன்சிலர்களைக் கொண்ட சபையுடன் நகராண்மைக் கழகத் தலைவர் (சேர்மன்) ஆணையாளரின் (கமிஷனரின்) ஆலோசனையுடன் நகர நிர்வாகத்தைக் கவனித்து வருகிறார்.

இவ்வூரில் ஆண்டுதோறும் பங்குனி மாதம் நடைபெறும் மாரியம்மன் திருவிழா மிகச் சிறப்பானது.

பாடம் 46

பாலகுருகுல வித்யாலயம்

(1) பெயரும் இடமும் (2) அமைப்பும் கட்டிட வகையும் (3) விசேஷ அம்சங்கள் (4) கல்வி (5) இலட்சியம் (குறிக்கோள்)

கட்டுரை

எங்கள் பள்ளிக்கூடத்திற்கு பாலகுருகுல வித்யாலயம் என்று பெயர். "குருகுலம்" எனச் சுருக்கமாகக் கூறுவதும் உண்டு. குருகுலம், விருதுநகர் என்னும் பெரிய நகரின் கீழ்த்திசையில் இராமமூர்த்தி ரோட்டின் ஓரமாக அமைந்துள்ளது. ரெயில்வே ஸ்டேஷனுக்குத் தென் கிழக்கே சுமார் 6 பர்லாங் தூரத்தில் இருக்கிறது.

சுமார் 16 ஏக்கர் பரப்புள்ள நிலத்தின் முன்புறம் வனப்பும் சிறப்பும் மிக்க கட்டிடங்கள் இருக்கின்றன. முன்பத்தியில் தென்புறம் மொழிப்பயிற்சி, வியாபாரப்பயிற்சி வகுப்புகளும், வடபுறம் காரியாலயமும் இருக்கின்றன. காரியாலயத்தைத் தொடர்ந்து கிழக்குப் பத்தியில் பார்வையாளர் இருக்கையறைகளும், ஆசிரியர் இருக்கையறையும்,

தலைமையாசிரியர் அறையும், உபகரணச்சாலையும் இருக்கின்றன. சற்றுகிழக்கே உ ய ர் த ர ஆரம்பப்பாடசாலையின் வகுப்பறைகள் அமைந்துள்ளன. நல்ல வேப்பமரக் காற்றும் நிழலும் படும்படியாகக் கட்டப்பட்டுள்ளன. ''காற்றோட்டமும் வெளிச்சமும், வேறுசிலவசதிகளும் இங்குபோல் வேறெந்தப் பள்ளிக்கூடத்திலும் பார்க்க முடியாது'' என்றே சொல்லலாம். வகுப்பறைகளுக்கு வடக்கே தென்னந்தோட்டமும், கிழக்கே பண்ணை நிலங்களும் உண்டு.

இங்கு கலைமகள் ஆ ல ய ம் அமைந்திருப்பது இப் பள்ளிக்கே தனிச்சிறப்பைத் தருவதாகும். தினமும் தவறு மல் காலைவேளைகளில் கலைமகள் பூஜை நடைபெறும். சிற்சில சமயம் சங்கீத வித்வானைக்கொண்டு பஜனையும் நடைபெறும். மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்லுமுன் கை, கால் சுத்தம் செய்து கலைமகளை வணங்கிவிட்டு வரிசையாகச் செல்லுவார்கள். காலையிலும் மாலையிலும் மாணவர்கள் நீராடுவதற்காக வசதியான ஸ்நான அறைகள் கட்டப்பட்டுள்ளன. மாணவர்கள் உற்சாகமாக நீந்திவிளையாடவும் நீந்தக் கற்றுக்கொள்ளவும் பண்ணைநிலத்தில் கி ழ க் கு க் கோடியில் விசாலமான குளம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. மாணவர்களும் மற்றையோரும் ஓய்வு நேரத்தைப் பயன்படுத்த வாசகசாலை, புத்தகாலயம், ரேடியோ முதலிய வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

பார்த்தவுடன் பல விஷயங்களை எளிதில் அ றி ந் து கொள்ளும் முறையில் இந்தியாவின் உருவத்தைத் தரையில் அழகாகக் கட்டி அதில் நதிகளின் தண்ணீர் ஓடிக்கொண்டிருப்பது போலவும், சமுத்திரங்களின் தண்ணீர் நி ற் ப து போலவும் காட்டப்பட்டிருப்பது எல்லோர் கவனத்தையும் கவரத்தக்கது. உலகப்படமும், மொழிவாரி மாகாணப்படமும் சுவரில் அழகாய் வரையப்பட்டிருக்கின்றன. பள்ளிக்கூடம் முழுவதும் எப்பொழுதும் சுத்தமாகவும், அழகாகவும் காட்சியளிக்கும்.

இப் பள்ளியில் எட்டு வகுப்புகள்வரை வகுப்புகள் உள்ளன. இங்கு சாதாரணக் கல்வியுடன் மொழிஅறிவுக் கல்வியும், தொழிற்கல்வியும், ஒழுக்கமும் சிறப்பாகக் கற்பிக் கப்படுகின்றன. சாஸ்திரீய முறையில் தேகப்பயிற்சி கற்பிக் கப்படுகிறது. தேகப்பயிற்சிசாலை தனியே உண்டு. பால குருகுல வித்யாலயம் 1939ஆம் வருடம் ஆரம்பிக்கப்பட்டது. பள்ளிக்கூடத்தைப் பற்றி எழுதப்பட்டுள்ள கல்வி அதிகாரி களின் குறிப்புகளும், பார்வையாளர்களின் புகழுரைகளும் இக்குருகுலத்தின் சிறப்பை மெய்ப்பிக்கும்.

பாலகுருகுலம் கீழேகண்ட குறிக்கோளை நிறைவேற்றும் முறையில் சிறந்த நிர்வாகியால் திறமையாக நடத்தப்பட்டு வருகிறது.

''ஓர் பள்ளியானது
குழந்தைகளின் நந்தவனமாகவும்,
பாலர்களின் வித்யாலயமாகவும்,
இளைஞர்களின் உயர்தர தமிழ், ஹிந்தி, ஆங்கிலம், மொழிப்பயிற்சி சாலையாகவும்,
வாலிபர்களின் தொழிற்பயிற்சி சாலையாகவும்,
வயதுவந்தவர்களின் வாசகசாலையாகவும், தேகப்பயிற்சி சாலையாகவும், இயற்கை வைத்திய சாலையாகவும், எல்லாவற்றையும் விட அது மக்களிடம் காந்தீயத்தை ஒளிரச் செய்யும் ஓர் தீபஸ்தம்பமாகவும் இருத்தல் வேண்டும்''.

எழுத்து, சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவைகளில் பயிற்சி.

இந்தப் புத்தகத்தில் கண்ட 46பாடங்களையும் தமிழ் வசனத்தின் அமைப்பையும் போக்கையும் கண்டுகொள்ளச் செய்து கொண்டு 20ஆம் பாடத்தில் கண்ட எழுத்துக்களை ஒவ்வொன்ருகச் சொல்லி, அந்த எழுத்து சொல்லுக்கு முதலில் வரும்படி மாணவர்களைச் சொந்தத்தில் சொற்களைச் சுத்தமாகச் சொல்லும்படியும் அவைகளை வாக்கியங்களில் அமைத்துச் சொல்லும்படியும் எழுதும்படியும் தினமும் செய்க. இதனுல் மாணவர்கள் கணக்கற்ற வாக்கியங்களைச் சொந்தத்தில் சொல்லுவதையும் பிழையில்லாமல் எழுதுவதையும் காணலாம்.

இந்தப் புத்தகத்திலுள்ள சொற்றொடர்களைச் சொன்னவுடன் அவைகளை எழுத்துக்கூட்டிச் சொல்லும்படியும் இரு சொற்களாகப் பிரித்துச் சொல்லும்படியும் செய்க.

31ஆம் பாடத்தில் கண்ட வேற்றுமையுருபுகள் சேர்ந்த சொற்களைச் சொன்னவுடன் அவைகளை எழுத்துக்கூட்டிச் சொல்லும்படி செய்க. ,

10வயதிற்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகள் எதையும் விரைவில் கற்று, விரைவில் மறந்துவிடுவார்கள். ஆகையால் இவர்களுக்கு மேலே கண்ட பயிற்சிகளை அடிக்கடி கொடுக்கவேண்டும்.

13வயதிற்கு மேற்பட்ட எழுதப்படிக்க தெரியாதவர்களை இப்புத்தகத்தை விரைவில் கற்கச் செய்து எல்லாப்பாடங்களையும் முடித்து, குறைந்தது ஒருமாதத்திற்காகவாவது தினமும் எல்லாப் பாடங்களையும் அவர்களாக இருந்து வாசிக்கும்படி செய்ய வேண்டும். சொற்களையும் சொற்றொடர்களையும் எழுத்துக்கூட்டி வாசிக்கும்படி செய்ய வேண்டும். ஞாபகசக்தி குறைவாக உள்ளவர்கள் இரண்டு மாதங்கள் வாசிக்கும்படி செய்ய வேண்டும். இப்படிச் செய்தால்தான் இவர்களால் தமிழைப் பிழையில்லாமல் வாசிக்கவும் எழுதவும் முடியும். இல்லாவிட்டால் இவர்களை இப்புத்தகத்தைக் கற்கச் செய்தது வீணே.

பத்திரிகை வாசிக்கப் பயிற்சி

ஏதாவது ஒரு தினசரிப் பத்திரிகையை எடுத்து, அதில் தலைப்பில் பெரிய எழுத்துக்களில் எழுதியிருப்பவைகளை வாசித்துக் காட்டி, அவைகளை வாசிக்கும்படி செய்ய வேண்டும். அதிலுள்ள சிறுசிறு செய்திகளை வாசித்துக்காட்டி, அவைகளை அவர்களாக வாசிக்க உருசியை உண்டாக்க வேண்டும், புதிதாக வந்த பத்திரிகை கிடைக்கா விட்டால் பழைய பத்திரிகைகளை வைத்துக் கொள்ளலாம் ஆனந்தவிகடன், கல்கி, கதிர், முதலிய வாரப் பத்திரிகைகளில் வரும் சிறுசிறு கதைகளை வாசிக்கச் செய்ய வேண்டும்.

செய்யுட்களைக் கற்கப் பயிற்சி

எங்கள் வெளியீடாகிய **சிறுவர் செய்யுட் கோவை**யிலுள்ள ஆத்திசூடி, கொன்றைவேந்தன, உலகநீதி, நறுந்தொகை, மூதுரை, ஔவையார் தனிப்பாடல்கள் ஆகியவைகளை ஒவ்வொன்றாக வாசித்துக்காட்டி அதன்படி வாசிக்கச் செய்க. அவைகளிலுள்ள சொற்றொடரை எழுத்துக்கூட்டிச் சொல்லும்படி செய்க. அருத்தமும் சொல்லுக.

பத்திரிகைகளும் புத்தகங்களும் வாசிக்க நேரமில்லாதவர்களுக்கும் வசதி இல்லாதவர்களுக்கும் மேலே சொன்ன செய்யுட்களைத் தினமும் வாசிப்பது முக்கியமாகும். இல்லாவிட்டால் இவர்கள் தமிழ் வசனத்தைக் கற்றதும் மறந்து விடும்.

சதானந்தா அச்சகம்—மகிழ்ச்சி இல்லம்—விருதுநகர்.

அநுபந்தம்.

தமிழ் எழுத்துக்களின் அமைப்பு.

தமிழ் எழுத்துக்களின் அமைப்பில் நாம் முக்கியமாகத் தெரிந்துகொள்ள வேண்டியது மூன்று விஷயங்களாகும்:- (1) தமிழ் எழுத்துக்கள் முதல் எழுத்துக்கள் என்றும், சார்பு எழுத்துக்கள் என்றும் இருவகையாக அமைக்கப்பட்டிருக்கின்றன. (2) குறில், நெடில் என்று இருவகையாகவும் அமைக்கப்பட்டிருக்கின்றன. (3) வல்லினம், மெல்லினம், இடையினம் என்று மூன்று வகையாகவும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

உயிரென்றும், மெய்யென்றும், உயிர்மெய்யென்றும் மனித சரீர அமைப்புப்படியே தமிழ் எழுத்துக்களையும், தமிழ் மொழியையும் அமைத்திருக்கிறார்கள்.

ஒரு மொழியை எளிதாகக் கற்பது, அந்த மொழிக்கான எழுத்துக்களை மதி நுட்பத்துடன் அமைப்பதையே முற்றிலும் பொறுத்ததாகும். வரி வடிவத்தில் தோன்றிய மொழிகளில் தமிழ் மொழி உலகத்தில் முதன்மையானதாக இருந்தும், அதன் எழுத்துக்களை மிக மிக மதி நுட்பத்துடன் அமைத்திருப்பது அற்புதத்திலும் அற்புதமாகும்.

எழுத்துக்கள் ஒரு மொழியை அதன் சத்தப்படி எழுதுவதற்கும் வாசிப்பதற்கும் ஏற்பட்டனவாகும். அப்படியே எழுத்துக்களால் எழுத வேண்டுமானால் அதற்கு எழுத்துக்கள் அதிகமாக இருக்க வேண்டும். அப்படி எழுத்துக்கள் அதிகமாக இருந்துவிட்டால் அம்மொழியின் சொற்களை எழுத வாசிக்கக் கற்றுக்கொடுக்க வேண்டியதில்லை. இந்த அடிப்படையைத் தெரிந்துகொள்ளாமல் அறியாமையுடன் ஆங்கிலம் முதலிய ஐரோப்பிய மொழிகளின் எழுத்துக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மேலே சொன்ன அடிப்படையை முதலில் நாம் தெரிந்துகொள்ள

வேண்டும். இல்லாவிட்டால் தமிழ் கற்கும் வழியைத் தெரிந்துகொள்ள முடியாது.

அதிகமான எழுத்துக்களைக் கற்பதில் நாட்கள் அதிகமாகக் கூடாதென்பதற்காகவும், கடினமாக இருக்கக்கூடாதென்பதற்காகவும் தமிழ் எழுத்துக்கள் முதல், சார்பு; குறில், நெடில்; வல்லினம், மெல்லினம், இடையினம் என்று விசேஷ மதி நுட்பத்துடன் அமைக்கப்பட்டிருக்கின்றன.

முதலெழுத்தாகிய உயிரெழுத்துக்கள் பன்னிரண்டையும் மனப் பாடமாகச் சொல்லத் தெரிந்துவிட்டால், ஒவ்வொரு மெய்யெழுத்தின் சத்தத்துடனும் பன்னிரண்டு உயிரெழுத்துக்களின் சத்தத்தையும் சேர்த்து, சார்பு எழுத்தாகிய 216 உயிர்மெய் யெழுத்துக்களையும் உடனே சொல்லிவிடலாம். ஏனென்றால், சார்பு எழுத்தாகிய 216 உயிர்மெய் யெழுத்துக்களுக்குத் தனிச் சத்தம் கிடையாது. ஒரு எழுத்தின் குறில் சத்தத்தைத் தெரிந்துவிட்டால் அதன் நெடில் சத்தத்தை உடனே சொல்லிவிடலாம். நெடில் சத்தத்தைச் சொல்ல கற்றுக்கொடுக்க வேண்டியதில்லை.

முதலெழுத்தாகிய மெய்யெழுத்தின் வல்லின எழுத்தைச் சொல்லத் தெரிந்துவிட்டால் அதன் மெல்லின எழுத்தை எளிதாகச் சொல்லி விடலாம். மெய் யெழுத்துக்களை எழுதத் தெரிந்துவிட்டால் உயிர்மெய் யெழுத்துக்கள் 216ம் எழுதத் தெரிந்துவிடும்.

216 உயிர்மெய் யெழுத்துக்களும் 18 மெய்யெழுத்தின் வடிவத்திலிருந்து உண்டாக்கப்பட்டிருப்பதால், எழுத்துக்கள் குறைவாக உடைய மொழிகளைப் போல, தமிழ் மொழியை விரைவாக அச்சுக் கோக்கவும் டைப் அடிக்கவும் முடிகிறது. மேலும் தமிழுக்கு எழுத்தொலியும், சொல்லொலியும் ஒன்றாக இருப்பதால் தமிழைச் சிறிது கற்றவுடன் அதை எவரும் அச்சுக் கோக்கவும், டைப்

அடிக்கவும் முடியும். ஆங்கிலத்திற்கு எழுத்தொலியும் சொல்லொலியும் வெவ்வேறாக இருப்பதால் ஆங்கிலத்தைப் பல ஆண்டுகள் நன்கு கற்று அதன் சொற்களின் எழுத்து வரிசைகளையும் உச்சரிப்பையும் நன்கு மனப்பாடம் செய்து வைத்திருப்பவர்களால்தான் ஆங்கில மொழியை அச்சுக் கோக்கவும் டைப் அடிக்கவும் முடியும்.

சார்பு எழுத்தாகிய 216 உயிர்மெய் யெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களின் ஒலியும், உயிரெழுத்துக்களின் ஒலியும் சேர்ந்த ஒலியாக இருப்பதால், முதலெழுத்து முப்பதைக் கொண்டே குறுக்கெழுத்து (Short hand), தந்தி அடித்தல் முதலியவைகளை அமைக்கலாம்.

தமிழ் எழுத்துக்களின் அமைப்பைத் தெரியாதவர்களும், தமிழைச் சிதைக்க வேண்டுமென்று நினைக்கிறவர்களும் தமிழ் எழுத்துக்களை மாற்றம் செய்யவேண்டுமென்றும், சீர்திருத்தம் செய்யவேண்டுமென்றும் பேசுவார்கள், எழுதுவார்கள். தமிழ் மொழியை அதன் அமைப்புப்படி கற்கும் முறை பரவிவிட்டால், தமிழ் எழுத்துச் சீர்திருத்தக்காரர்களின் அறியாமை நீங்குவதுடன் தமிழ்த்தாய் உலக மொழிகளின் அரியாசனங்களில் முதன்மையாக வீற்றிருப்பாள். இதற்குத் தமிழ்த் தொண்டர்கள் தமிழ் வசனத்தை அதன் அமைப்புப்படி கற்கும் முறையை முதலில் பரப்ப வேண்டும். தமிழ்ச் செய்யுளை அதன் அமைப்புப்படி கற்கும் முறையை இரண்டாவது பரப்ப வேண்டும்.

தமிழ் எழுத்துக்களின் வடிவ அமைப்பு:

ஒன்றுக்கொன்று சமதூரமுள்ள ஐந்து கோடுகளுக்குள் தமிழ் எழுத்துக்களின் வடிவ அமைப்பு முழுவதும் அடங்கும். அப்படி அமையும்போது நடுக்கோடு எழுத்துக்களுக்கு நடுவில் இருக்கும். இதை முதல் பாடத்தைப் பார்த்து எவரும் எளிதில் தெரிந்து கொள்ளலாம்.

ஆனால், எழுத்துக்களை எழுதக் கற்பதற்கு ஐந்து கோடுகளும் தேவையில்லை. ஆரம்பத்தில் கூட மூன்று கோடுகள் போதும். ஏனென்றால், மூன்று கோடுகளுக்குள் சில எழுத்துக்களின் வடிவம் முழுவதும் அமைந்துவிடுவதுடன், மற்ற எல்லா எழுத்துக்களின் பிரதான வடிவங்களும் மூன்று கோடுகளுக்குள் அமைந்துவிடுகின்றன.

சிலேட்டில் மூன்று கோடுகள் போட்டு எழுதக் கற்றுக் கொடுத்தால் தமிழ் எழுத்துக்களை எவரும் எளிதாகவும் அழகாகவும் எழுத முடியும். மூன்று கோடுகளில் எழுதிப் பழகிய பின் சிலேட்டில் ஒரு கோடு போட்டு அதில் எழுதப் பழக்க வேண்டும். இப்படி ஒரு கோட்டில் எழுதும்போது எழுத்துக்கள் அவைகளின் உருவ அமைப்புப்படி வெகு அழகாக இருக்கும்.

மற்ற மொழிகளின் எழுத்துக்களைக் கோடுபோட்டு எழுதினால் வரி கோணாமல் எழுதுவதற்கு மட்டும் கோடு உபயோகப் படுமேயன்றி எழுத்துக்களின் அமைப்புப்படி அழகாக எழுத உபயோகப்படாது.

தமிழ் எழுத்துக்களின் வடிவ அமைப்பைத் தெரிந்து கொள்ளாதவர்களே உயிரெழுத்துக்களை எழுதக் கற்றுக் கொடுப்பது கடினமென்று சொல்லி, முதலில் ட, ப, ம முதலிய வரிகளின் எழுத்துக்களை எழுதக் கற்றுக்கொடுக்கச் சொல்லுவார்கள். அதற்கிணங்க புத்தகம் எழுதி வெளியிட்டு விற்று வருவார்கள். முதலில் உயிரெழுத்துக்களைக் கற்காமல் சார்பு எழுத்துக்களாகிய உயிர்மெய் யெழுத்துக்களுக்குப் போனால், தமிழ் எழுத்துக்களைக் கற்க முடியாது. தமிழைப் பிழையின்றி எழுதவும் முடியாது.

ஆனால், முதல் வகுப்பு தமிழ் வாசகப் புத்தகங்களெல்லாம் உயிரெழுத்துக்களைக் கற்றுக் கொடுக்குமுன், உயிர்மெய் யெழுத்துக்கள் முதலில் வரக் கூடிய சொற்கள் கொண்டதாகவே இருக்கின்றன.

தமிழ் எழுத்துக்களைக் கற்றுக்கொடுக்கும் விதம்.

மேலே கூறியபடி தமிழ் எழுத்துக்களின் அமைப்பைத் தெரிந்துகொண்டவர்களுக்கு அவைகளை விரைவில் எளிதாகக் கற்றுக்கொடுக்க முடியும்.

தமிழ் எழுத்துக்களை இரண்டு படிகளாகக் கற்றுக் கொடுக்க வேண்டும். முதலில் எழுத்துக்களைச் சுத்தமாகச் சொல்லவும், மனப்பாடமாக ஒப்புவிக்கவும் கற்றுக்கொடுக்க வேண்டும். இரண்டாவது எழுத்துக்களை எழுதக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

வரிக்கு 13 எழுத்துக்கள் வீதம் 19 வரிகளில் 247 எழுத்துக்களை அமைத்துக்கொள்ள வேண்டும். குறில், நெடில் எழுத்துக்களை ஜோடி ஜோடியாகவும், மற்ற எழுத்துக்களைத் தனித் தனியாகவும் கற்றுக் கொடுக்க வேண்டும். இதிலும் முதல் பாடத்தில் கண்டபடி ம - வரி முடியவுள்ள 11 வரியின் 143 எழுத்துக்களை முதலில் கற்றுக் கொடுத்துக்கொண்டு அந்த 143 எழுத்துக்களுக் குள் வரும் சொற்கள் கொண்ட 2, 3, 4, 5 ஆம் பாடங் களைக் கற்றுக்கொடுக்க வேண்டும். 5ஆம் பாடம் முடிய நன்கு கற்றுக்கொடுத்த பிறகு ம - வரிக்குப் பிறகு 8 வரி களின் 104 எழுத்துக்களைக் கற்றுக் கொடுக்க வேண்டும். ம - வரிக்குப் பிறகு வரும் எழுத்துக்கள் ஒன்றிற்கொன்று நெருங்கிய ஒலியுடனிருப்பதால் ஆரமபத்தில் குழப்பமாகு மாதலால், இவைகளை முதலில் கற்றுக்கொடுக்கக் கூடாது.

முதலில் ம - வரி முடியக் கற்றுக் கொடுத்துக்கொண்டு அவைகளுக்குள் சொற்களைக் கற்றுக் கொடுப்பதால், தமிழ் வசனத்தை விரைவில் எளிதாகக் கற்றுக் கொடுக்க முடி கிறது. நாங்கள் கூறும் முறை புதுமையாகும். தமிழ் மொழி அமைப்புப்படி இப்படித்தான் கற்றுக் கொடுக்க வேண்டும்.

1, 2, 3, 4, 5-ஆம் பாடங்களை முடித்துக் கொண்டு 6-ஆம் பாடம் ம-வரிக்குப் பின்வரும் மற்ற 8 வரிகளையும் கற்றுக்கொடுக்க வேண்டும். ஒன்றுக்கொன்று நெருங்கிய ஒலியை உடைய இந்த வரிகளை 7-ஆம் பாடத்தில் கண்ட படங்களின் உதவியுடன் கற்றுக் கொடுக்க வேண்டும். அதன்பின் 8-ஆம் பாடத்தில் கண்டபடி ண-வரி எழுத்துக்கள் ன-வரி எழுத்துக்கள்; ர-வரி, ற-வரி எழுத்துக்கள்; ல-வரி, ள-வரி எழுத்துக்கள் ஆகியவைகளை ஜோடி ஜோடியாகவும் சொல்லும்படியும்; ழ-வரி எழுத்துக்களை அதிகமாக அழுத்தித் தனியாகச் சொல்லவும் செய்ய வேண்டும்.

எழுத்துக்களைச் சுத்தமாக உச்சரிக்கக் கற்றுக் கொடுத்தல்.

கரும் பலகையில் கோட்டிற்குக் கோடு ஒரே சமதூரமிருக்கும்படியாக சாக்பீசால் 3 கோடுகள் போட்டுக் கொண்டு, அதில் முதல் பாடத்தில் கண்டபடி அ முதல் ஃ வரையிலுமுள்ள 13 எழுத்துக்களையும் நன்கு தெரியும்படி அழுத்தமாக சாக்பீசால் எழுதுக. அ-வுக்குப் பின் , இந்த அடையாளமாகிய கால்புள்ளியும், ஆ-வுக்குப் பின் ; இந்த அடையாளமாகிய அரைப்புள்ளியும், இதுபோலவே மற்ற குறில் நெடில் எழுத்துக்களுக்குப் பிறகு முறையே கால் புள்ளியும், அரைப் புள்ளியும்; ஐக்குப் பின்னும், ஔவுக்குப் பின்னும். இந்த அடையாளமாகிய முழுப் புள்ளியும் போடுக.

அந்தந்த வரியிலுள்ள எழுத்துக்கள் 13ம் ஒரே வரியில் மூன்று கோடுகளில் எழுதப்பட வேண்டும்.

அ, ஆ; இ, ஈ; உ, ஊ; எ, ஏ; ஐ ஒ, ஓ; ஔ. ஃ

மேலே கூறியவாறு மூன்று கோடுகள் போட்டுக் கரும் பலகையில் எழுதி முடிந்தவுடன், மாணவர்கள் எல்லோரையும், கரும் பலகையில் எழுதியிருக்கும் எழுத்துக்களைக்

கவனிக்கும்படி செய்து கொண்டு, அ, ஆ; இ, ஈ; உ, ஊ; எ, ஏ; என்று குறில் நெடில் எழுத்துக்களை ஜோடி ஜோடியாகவும், ஐ என்று தனித்தும் ஆசிரியர் நீளமான குச்சியால் எழுத்துக்களைச் சுட்டிக் காட்டிக் கொண்டே சொல்லச் சொல்ல, அதன்படி மாணவர்கள் எல்லோரும் சேர்ந்து சொல்ல வேண்டும். ஆசிரியர் சொல்லச் சொல்ல ஒவ்வொரு மாணவனும் தனித் தனியாகவும் சொல்ல வேண்டும். கடைசியில் ஆசிரியர் சொல்லிக் காட்டாமலே ஒவ்வொரு மாணவனுக்கும் மனப் பாடமாகச் சொல்லத் தெரிய வேண்டும். அதன் பிறகு ஒ. ஓ; என்று ஜோடியாகவும், ஔ என்று தனித்தும், ஃ என்று தனித்தும் ஆசிரியர் குச்சியால் சுட்டிக் காட்டிக்கொண்டே சொல்லச் சொல்ல மாணவர்கள் எல்லோரும் சேர்ந்தும், தனித் தனியாகவும் சொல்ல வேண்டும். மனப் பாடமாகவும் சொல்ல வேண்டும்.

முதல் வரி 13 எழுத்துக்களையும் சுட்டிக் காட்டிக் கொண்டும், சுட்டிக் காட்டாமலும் மனப் பாடமாக ஒரே தடவையில் நன்கு சொல்லத் தெரிந்த பிறகு, இரண்டாவது வரி க முதல் க் வரையிலுமுள்ள 13 எழுத்துக்களையும் முதல் பாடத்தில் கண்டபடி கரும் பலகையில் மூன்று கோட்டில் சாக்பீசால் ஒரே வரியில் எழுதி, கால் புள்ளி, அரைப் புள்ளி, முழுப் புள்ளி ஆகியவைகளைப் போட்டுக் கொண்டு க, கா; கி, கீ; கு, கூ; கெ, கே; என்று ஜோடி ஜோடியாகவும், கை என்று தனியாகவும், பிறகு கொ, கோ; என்று ஜோடியாகவும், கௌ என்று தனியாகவும், கடைசியில் க் என்று தனியாகவும் சொல்லும்படி கற்பிக்க வேண்டும். க முதல் க் வரை மனப்பாடமாகச் சொல்லத் தெரிந்த பிறகு, முதல் பாடத்தில் ம - வரி முடியவுள்ள மற்ற 9 வரிகளையும் ஒவ்வொரு வரியாக, போர்டில் மூன்று கோட்டில் எழுதிப் போட்டுக்கொண்டு குறில் நெடில் எழுத்துக்களை ஜோடி ஜோடியாகவும், மற்ற எழுத்துக்களைத் தனியாகவும் சொல்லும்படி கற்பிக்க வேண்டும். எல்லா வரிகளும் மனப்பாடமாகச் சொல்லத்

தெரிய வேண்டும். மேலிருந்து கீழாக க முதல் ம முடிய வுள்ள 10 எழுத்துக்களையும் ஜோடி ஜோடியாக க, ங; ச, ஞ; ட, ண; த, ந; ப, ம; என்றும் மனப்பாடமாகச் சொல்லத் தெரிய வேண்டும். இது ஒவ்வொரு வரியையும் ஒருபோதும் மறந்து போகாமலும், விட்டுப் போகாமலும் மனப் பாடமாகச் சொல்லுவதற்கும் எழுதுவதற்கும் உதவி யாகும்.

க - வரியிலுள்ள எழுத்துக்களை உச்சரிக்கும்போது நாக்கின் கடைசிப் பாகம் மேல் வாயின் கடைசிப் பாகத்தைத் தொடுகிறது. ங - வரியிலுள்ள எழுத்துக்களை உச்சரிக்கும்போதும் மேற்கண்டபடியே தொடவேண்டும்.

ச - வரியிலுள்ள எழுத்துக்களை உச்சரிக்கும்போது நாக்கின் நடுப்பாகம் மேல் வாயின் நடுப் பாகத்தைத் தொடு கிறது. ஞ - வரியிலுள்ள எழுத்துக்களை உச்சரிக்கும் போதும் மேற்கண்டபடியே தொடவேண்டும்.

எழுத்துக்களை எழுதக் கற்றுக்கொடுத்தல்.

ஒவ்வொரு வரியிலுள்ள 13 எழுத்துக்களையும் நன்கு மனப் பாடமாகச் சொல்லத் தெரிந்த பிறகு, அந்த வரியி லுள்ள எழுத்துக்களை எழுதக் கற்றுக் கொடுக்க வேண்டும். முதலாவது அ, ஆ; ஆகிய இரு எழுத்துக்களையும் கரும் பலகையில் மூன்று கோட்டில் எழுதிப் போட்டு, அதன் மேல் சாக்பீசால் எழுதப் பழக்க வேண்டும். சாக்பீசால் எழுத்தின்மேல் எழுதத் தெரிந்தவர்களை கரும் பலகையில் **அ, ஆ**; ஆகிய இரு எழுத்துக்களையும் எழுதி எழுத்துக் களின் மேல் சிலேட்டுக் குச்சியால் எழுதப் பழக்க வேண்டும். இதன் மூலமாக பிள்ளைகளை சிலேட்டுக் குச்சியைச் சரியாகப் பிடிப்பதற்கும், அதனுல் எழுதுவ தற்றும் நன்கு பழக்க வேண்டும். எழுத்துக்களை எழுதக் கற்றுக் கொடுப்பதும் தவிர, சிலேட்டுக் குச்சியைப் பிடிக்கும் விதத்தையும் கற்றுக்கொடுக்க வேண்டும்.

கரும் பலகையின் மேல் சிலேட்டுக் குச்சியால் எழுதத் தெரிந்தவர்களுக்கு, சிலேட்டில் மூன்று கோடுகள் போட்டு சிலேட்டுக் குச்சியால் அ, ஆ; ஆகிய இரு எழுத்துக்களை மட்டும், ஆசிரியர் எழுதிக் கொடுத்து, அதன்மேல் சிலேட்டுக் குச்சியால் எழுதும்படி செய்யவேண்டும். இது போல் முதல் வரியிலுள்ள மற்ற எழுத்துக்களையும் எழுதக் கற்றுக் கொடுக்க வேண்டும். இதனால் பிள்ளைகள் சிலேட்டுக் குச்சியை நன்கு பிடிப்பதற்கும் எளிதில் எழுது வதற்கும் கற்றுவிடுவார்கள். சிலேட்டுக் குச்சியை சரியான படி நன்கு பிடிக்கத் தெரிந்த பிறகே எளிதாக நன்கு எழுத முடியுமென்பதைத் தெரிந்து கொள்ளவும்.

முதல் வரியிலுள்ள 13 எழுத்துக்களையும் சிலேட்டில் எழுதியின்மேல், சிலேட்டுக் குச்சியினால் நன்கு எழுதத் தெரிந்துவிட்டவர்களுக்கு, முதல் வரியை சிலேட்டில் மூன்று கோட்டில் ஆசிரியர் எழுதிக்கொடுத்து, அதன்கீழ் மூன்றுகோடுகள் போட்டு, அதில் மேலே எழுதிக்கொடுத் திருக்கின்றபடி, பார்த்து எழுதும்படி செய்யவேண்டும். இந்த மாதிரி முதல் வரியைப் பார்த்தெழுதத் தெரிந்த பிறகு, மூன்று கோட்டில் இரண்டாவது வரி க முதல் ன் வரையிலுமுள்ள 18 எழுத்துக்களை முதல் வரியைப் போலவே எழுதக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

முதல் இரண்டு வரிகளையும் சிலேட்டில் சிலேட்டுக் குச்சியால் மூன்று கோடுகள் போட்டு அதில் நன்கு எழுதத் தெரிந்த பிறகு சிலேட்டின் ஒரு பக்கத்தில் கோட்டிற்குக் கோடு ஒன்றுபோல் $\frac{3}{8}$ அங்குல சமதூரமிருக்கும்படியாக மிகவும் கூர்மையான உருக்குக் கம்பியால் சன்னமான மூன்று கோடுகள் போடுக. அப்படிப் போட்ட பிறகு கீழ்க் கோட்டிலிருந்து $\frac{3}{8}$ அங்குல தூரத்தில் மூன்று கோடுகள் போடுக. இப்படி மூன்று கோடுகள் போடுவ தற்கு $\frac{1}{4}$ அங்குல கனத்தில் 4 அங்குல நீளத்தில் ஒரு உருக்குக் கம்பியை எடுத்து அதன் முனையை தீயில் வைத்துத் தட்டி அகலமாக்கிக் கொண்டு, அதில் ஒன்றிற்

கொன்று ½ அங்குல தூரமிருக்கும்படியாக மூன்று கூர்மையான முனைகள் இருக்கும்படியாகச் செய்து வாங்கி வைத்துக் கொள்ளலாம். (ஒரே தடவையில் இப்படி மூன்று கோடுகள் போடும் கம்பி எங்களிடம் கிடைக்கும். விலை 4 அணு)

கம்பியால் போடப்பட்ட மூன்று கோடுகளில் ஒவ்வொரு வரியாக எழுதக் கற்றுக்கொடுக்க வேண்டும். முதல் பாடத்திலுள்ள 11 வரிகளையும் அவைகளின்படி மூன்று கோடுகளில் நன்கு எழுதத் தெரிந்த பிறகு, சிலேட்டில் மறு பக்கத்தில் கூர்மையான கம்பியால் சன்னமான ஒற்றைக் கோடுகள் போட்டுக் கொடுத்து, அதில் 11 வரிகளையும் எழுதக் கற்றுக் கொடுக்க வேண்டும். இப்படி ஒரு கோட்டில் எழுதும்போது, மூன்று கோட்டில் எழுதினபோது எந்தெந்த எழுத்துக்களின் கீழ் வடிவம் கீழே இருந்ததோ, அது மட்டும் கோட்டிற்குக் கீழ் இருக்கும்படி, முதல் பாடத்திலுள்ளபடி எழுத்துக்களை எழுத வேண்டும். முதல் பாடத்திலுள்ள எழுத்துக்களின் வடிவப்படியே பார்க்காமலும் எழுதப் பழக்க வேண்டும். இப்படி எழுதப் பழகுவதால் எழுத்துக்களைப் பிழையின்றி எழுதக் கற்றுக் கொள்வதுடன் அழகாகவும், விரைவாகவும் எழுத முடியும். பின்னால் சொற்களையோ, வாக்கியங்களையோ அழகாக எழுதப் பயிற்சி கொடுக்க வேண்டிய அவசியமில்லை. ஏராளமான சொற்களையும், சொற்றொடர்களையும், வாக்கியங்களையும் எழுத வேண்டியதிருக்கும்போது அவைகளை அழகாக எழுதப் பயிற்சி கொடுப்பது பிரயோஜனப்படாது. அதனால் எழுத்துக்களைக் கற்கும்போதே சிலேட்டில் அவைகளை அழகாக எழுதக் கற்றுவிட வேண்டும்.

முக்கிய குறிப்பு:- எழுத்துக்களில் கொடுக்க வேண்டிய அப்பியாசங்களுக்கு முதல் பாடத்தின் கடைசியில் பார்க்க.

தமிழ் எழுத்துக்களை அவைகளின் அமைப்புப்படி கற்றுக் கொடுப்பதற்கு: 1. குறில் நெடில் எழுத்துக்களை

ஜோடி ஜோடியாகவும், மற்ற எழுத்துக்களைத் தனியாகவும் கற்றுக் கொடுக்க வேண்டும். இது மிகமிக முக்கியமாகும். இதனால் எழுத்துக்களை எளிதாக உடனே கற்க முடிகிறது. கற்றதும் ஒரு போதும் மறக்காது. குறில் நெடில் பிழைகளே ஏற்படா.

2. தமிழ் எழுத்துக்களின் வடிவ அமைப்பிற்கு எழுத்துக்களை இதில் கண்டபடிதான் எழுதக் கற்றுக் கொடுக்க வேண்டும். மூன்று கோடுகளில் எழுதக் கற்றவுடன் அந்த மூன்று கோடுகளில் கீழ்க்கோட்டை ஆதாரமாக வைத்து மேலே இரண்டு கோடுகளிருப்பதாகப் பாவித்துக்கொண்டு ஒரு கோட்டில் எழுத வேண்டும். சிலேட்டிலேயே எழுத்துக்களை முதல் பாடத்தில் கண்டபடி அழகாக எழுதக் கற்றுக் கொடுத்துவிட வேண்டும். எழுத்துக்களை முதலில் கோணலாக எழுதிப் பழகிவிட்டு பின்னால் அழகாக எழுத முடியாது.

3. எழுத்துக்களை .ஆனா, ஆவன்னா என்று முன் காலத்தைப் போல சாரியை சேர்த்துக் கற்றுக் கொடுக்கக் கூடாது. சாரியை சேர்த்துச் சொல்லுவதால் எழுத்துக்களைக் கற்கின்றவர்களுக்குப் பிரியமும் உற்சாகமும் ஏற்படுவது உண்மையே. ஆனால், சொற்களில் எழுத்துக்கள் சாரியைச் சத்தமின்றி வருவதால் சாரியை கூடாது.

2, 3, 4, 5-ஆம் பாடங்களிலுள்ள சொற்களைக் கற்றுக் கொடுத்த பிறகு 6 ஆம் பாடத்திலுள்ள **ய**-வரி முதல் **ன**-வரி முடிய 8 வரிகளிலுள்ள எழுத்துக்களை ஒவ்வொரு வரியாகக் கற்றுக்கொடுக்க வேண்டும். இந்த வரிகளிலுள்ள எழுத்துக்கள் ஒன்றிற்கு ஒன்று நெருங்கிய ஒலியுடையதாக இருந்தும், முன்பே 11 வரி எழுத்துக்களையும் அவைகளாலான சொற்களையும் கற்றிருக்கும் காரணத்தாலும், 7-ஆம் பாடத்திலுள்ள படங்கள் உதவியோடு கற்பதாலும், 8-ஆம் பாடத்தில் எழுத்துக்களை ஜோடி ஜோடி

யாக்வும் அழுத்தியும் அழுத்தாமலும் அதிகமாக அழுத்தியும் உச்சரித்துச் சொல்லி கற்பதைக் கொண்டும் விரைவில் கற்க முடியும்.

ய, ர; ல, வ; ழ, ள; ற, ண; ஆகிய எட்டு எழுத்துக்களை ஜோடி ஜோடியாக மனப் பாடமாகச் சொல்லத் தெரிய வேண்டும்.

மெய் யெழுத்துக்களுடன் ஆ, ஓ, ஓ ஆகிய உயிர் எழுத்துச் சேர்ந்து உண்டாகும் உயிர்மெய் யெழுத்துக்களில் மற்ற எழுத்துக்களைப்போல துணை எழுத்து இல்லாமல் வருகிற ணா, ணொ, ணோ; றா, றொ, றோ; னா, னொ, னோ; என்ற உயிர் மெய் யெழுத்துக்களையும், ஐ ஏறிய உயிர் மெய் யெழுத்துக்களுள் மற்ற எழுத்துக்களைப் போல இடதுபுறம் துணையெழுத்து வடிவமாகிய ை அடையாளமின்றி வரும் ணை, லை, ளை, னை ஆகியநான்கு உயிர் மெய் யெழுத்துக்களின் வடிவங்களையும் மாணவர்கள் மனதில் நன்கு பதியும்படி விளக்க வேண்டும். இவைகளில் அடிக்கடி டிக்டேஷன் போட வேண்டும்.

இ, ஈ; எ, ஏ; என்ற உயிரெழுத்துக்களும் முறையே யி, யீ, யெ, யே என்ற உயிர் மெய் யெழுத்துக்களும் உச்சரிப்புச் சத்தத்தால் ஒரே மாதிரியாகவும், எழுத்து வடிவத்தில் வேறாகவும் இருக்கின்றன. இவைகளில் உயிரெழுத்துக்கள்தான் சொற்களுக்கு முதலில் வரும் யி, யீ, யெ, யே ஆகிய உயிர்மெய் யெழுத்துக்கள் சொற்களில் முதலெழுத்தாக வரக் கூடா. ந - வரி எழுத்துக்களும் ன - வரி எழுத்துக்களும் உச்சரிப்பில் அநேகமாக ஒன்றாகவும் வடிவத்தில் முற்றிலும் வேறாகவும் இருக்கின்றன. ந - வரி எழுத்துக்கள் சொற்களுக்கு முதலில் வரும். ன - வரி எழுத்துக்களில் எதுவும் சொற்களுக்கு முதலில் வராது. தவிரவும் சொல்லின் கடைசியில் ன் வரும். ந் வரக் கூடாது.

சொற்களில் ன்-னுக்குப் பின் ன-வரி எழுத்துக்கள் வரும். ந-வரி எழுத்துக்கள் வரக் கூடா. சொற்களில் த-வரி எழுத்துக்களுக்கு முன் ந் வரும், ன் வரக்கூடாது. ந-வரி எழுத்துக்களும் ன-வரி எழுத்துக்களும் உச்சரிப்பில் அநேகமாக ஒன்றுபோ லிருப்பதால் ந-வரி எழுத்துக்களை த-வரிக்கு அடுத்த வரி எழுத்துக்கள் என்றும், ன-வரி எழுத்துக்களை ற-வரிக்கு அடுத்த வரி எழுத்துக்கள் என்றும் சொல்ல வேண்டும்.

வடமொழி எழுத்துக்கள்.

17-ஆம் பாடத்திலுள்ள 65 எழுத்துக்களையும் சொல்லவும் எழுதவும் கற்றுக்கொடுக்கவும். தமிழ் எழுத்துக்களையும் சொற்களையும் கற்ற பிறகு இவைகளைக் கற்பதாலும் இந்த எழுத்துக்களிலும் தமிழ் உயிரெழுத்துக்களே சேர்ந்து வருவதாலும் இவைகளைக் கற்பது எளிது.

தமிழில் வழங்கும் அந்நிய மொழிச் சொற்களின் உச்சரிப்புச் சத்தம் மாறுபடாமலும் அவைகளைத் தமிழ் எழுத்துக்களாலேயே எழுத வேண்டுமென்பது தமிழ் இலக்கண விதியாகும். கணக்கற்ற சொற்களையுடைய தமிழில் அநியாயமாக வடமொழிச் சொற்களைப் புகுத்தி, அவைகளை எழுத இந்த 65 எழுத்துக்களை ஏற்படுத்தியது தவறாகும். தமிழில் இந்த எழுத்துக்கள் கொண்ட புத்தகங்களை அரசாங்கம் அங்கிகாரம் செய்யக்கூடாதென்று தமிழ்த்தொண்டர்கள் அரசாங்கத்தைவற்புறுத்த வேண்டும்.

சொற்களின் அமைப்பு.

எழுத்துக்கள், சொற்களின் சத்தப்படி எழுதுவதற்கும் வாசிப்பதற்கும் ஏற்பட்டனவாகுமென்பதைத் தெரிந்திருக்கிறோம். இதைத் தெரிந்து உண்டாக்கப்பட்ட மொழிகளின் சொற்களுக்கு, தனியாக சொற்களின் அமைப்பு என்று ஒன்று இராது. எழுத்துக்களின் அமைப்புப்படியே

சொற்களும் அமையும். தமிழ் எழுத்துக்களெல்லாம் அநேகமாக குறில் நெடில் எழுத்துக்களாகவே இருக்கின்றன. அதனால் குறில் நெடில் எழுத்துக்களில் சொற்களுக்கு முதலில் வரக்கூடிய குறில் நெடில் எழுத்துக்கள் கொண்ட சொற்களை ஜோடி ஜோடியாகச் சொல்லவும், எழுத்துக் கூட்டி வாசிக்கவும் எழுதவும் கற்றுக்கொடுக்க வேண்டும். இப்படிக் கற்றுக் கொடுத்தால் குறில் நெடில் பிழைகளே ஏற்படா. வசன நடையில் புத்தகங்கள் வெளி வருமுன் இதற்காகவே அரிச்சுவடி 247 எழுத்துக்கள் கற்று முடிந்தவுடன், குறில் நெடில் எழுத்துக்கள் முதலில் வரக்கூடிய சொற்கள் முதலில் வரும் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் ஆகிய இரண்டு ஏடுகளையும் கற்று வந்தார்கள்.

அரிச்சுவடி 247 எழுத்துக்கள் கற்றவுடன் செய்யுளைக் கற்பதாக இருந்தால் முதலில் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் ஆகியவைகளைக் கற்பது சரியே. வசனத்தைக் கற்பதாக இருந்தால், முதலில் 143 எழுத்துக்களைக் கற்றவுடன் சொற்களுக்கு முதலில் வரக் கூடிய குறில் நெடில் எழுத்துக்கள் கொண்ட சொற்களை ஜோடி ஜோடியாகக் கற்றுக்கொடுக்க வேண்டும். படங்களும், தெரிந்த சொற்களும் தமிழ்ச் சொற்களை எழுத வாசிக்கக் கற்றுக்கொடுக்க உதவி செய்யா, பாதகமே செய்யும்.

இரண்டெழுத்து மூன்றெழுத்துச் சொற்களை எழுத வாசிக்கத் தெரியுமுன், ஐந்தெழுத்து ஆறெழுத்துச் சொற்களையும் இடையின எழுத்துக்கள் கொண்ட சொற்களையும் கற்றுக்கொடுப்பது எப்படி சரியாக இருக்க முடியும்?

பொது அறிவுப் பாடங்களைக் கற்றுக் கொடுப்பதற்குத்தான் பாடங்கள் உபயோகப்படும். இதற்கு படங்களையும், நேரில் பார்க்கும் மிருகங்கள், பறவைகள், மரஞ் செடிகள் முதலியவைகளையும் கட்டாயம் உபயோகப் படுத்திக்கொள்ள வேண்டும்.

கற்கின்றவர்களுக்குத் தெரிந்த சொற்கள் எவை? தெரியாத சொற்கள் எவை? என்று அறிந்து கற்றுக் கொடுப்பது முடியாத காரியமென்பதுடன் அவசியமில்லாததுமாகும். இந்நிலைமையில் கற்கின்றவர்களுக்கு இன்னின்ன சொற்கள் தெரியுமென்றோ, தெரியாவென்றோ முடிவுகட்டுவது தீதாகும். இதற்காக, கற்கின்றவர்களையே சொந்தத்தில் கணக்கற்ற சொற்களைச் சொல்லும்படியும் எழுதும்படியும், சொற்களில் பாடங்கள் எல்லாம் முடிந்த பிறகு, கடைசியில் அப்பியாசங்கள் கொடுத்திருக்கிறோம்.

சொற்களை கொச்சை இல்லாமல் சுத்தமாகச் சொல்லும்படியும், சுத்தமாக எழுத்துக் கூட்டும்படியும் மிகவும் கவனமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். பேச்சுப் பழக்கத்தைக் கொண்டு அநேகமாக எல்லோரும் ஆரம்பத்தில் சொந்தத்தில் சொற்களைச் சொல்லும் போதும், எழுதும் போதும் கொச்சையாகத்தான் சொல்லுவார்கள். சொற்களை கொச்சையாகச் சொன்னால் பிழையாகத்தான் எழுதுவார்கள். இதற்காகவே நம் முன்னோர்கள். "செந்தமிழும் நாப் பழக்கம்" என்று கூறியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் ஆங்கில மொழி அரசாங்க மொழியாக இருப்பதால், இதை மறந்துவிட்டு தமிழ் மொழியைக் குறை சொல்லுவோரும் உண்டு.

சொற்களில் பாடங்கள் முடிந்த பிறகு, கற்கின்றவர்களை சொந்தத்தில் கணக்கற்ற சொற்களைச் சொல்லும்படியும் எழுதும்படியும் பயிற்சி கொடுத்திருப்பது இப்புத்தகத்தின் புதுமையில் ஒன்றாகும்.

சொற்களைக் கற்றுக் கொடுக்கும் விதம்.

1-ஆம் பாடத்திலுள்ள எழுத்துக்களைக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கும் போதே 2-ஆம் பாடத்திலுள்ள சொற்களைக் கொஞ்சங்கொஞ்சமாக கரும்பலகையில் 1-ஆம் பாடத்திலுள்ள தமிழ் எழுத்து வடிவ அமைப்புப்படி

ஜோடி ஜோடியாக எழுதிப் போட்டு குறில்-நெடில் சொற்களை, அடி - ஆடி என்று ஆசிரியர் ஜோடி ஜோடியாக சொல்லச் சொல்ல, மாணவர்களும் சேர்ந்து சொல்ல வேண்டும். சொற்களின் குறில் நெடில் சத்தத்தின் வித்தியாசத்தைத் தெரிந்துகொள்ளும்படி செய்யவேண்டும். நெடில் சத்தத்தை ஆரம்பத்தில் அதிகமாக நீட்டிச் சொல்லிக் காட்ட வேண்டும். பின்பு குறில் சொல்லைச் சொன்ன வுடன் அதன் நெடில் சொல்லையும், நெடிலைச் சொன்ன வுடன் குறிலையும் அவர்களாகச் சொல்லும்படி செய்ய வேண்டும். உதாரணம்:- அடி என்று சொல்லி விட்டால் ஆடி என்று சொல்ல வேண்டும். ஆடி என்று சொன்னல் அடி என்று சொல்ல வேண்டும். மேலே கூறியபடி 2-ஆம் பாடத்திலுள்ள சொற்கள் முழுவதையும் சொல்லும்படி செய்ய வேண்டும். அவைகளை அ, டி = அடி என்றும், ஆ, டி = ஆடி என்றும் எழுத்துக் கூட்டிச் சொல்லும்படி செய்ய வேண்டும். சொற்களை எழுத்துக் கூட்டிச் சொல்லத் தெரிந்த பிறகு, போர்டிலுள்ள சொற்களைப் பார்த்துக் கொண்டு சிலேட்டில் ஒரு கோட்டில் எழுதும்படி செய்ய வேண்டும். 1-ஆம் பாடம் 143 எழுத்துக்களில் பிழை இல்லாமல் டிக்டேஷன் எழுதத் தெரிந்த பிறகு, 2-ஆம் பாடத்திலுள்ள சொற்களில் டிக்டேஷன் போடவேண்டும்.

1, 2-ஆம் பாடங்களைக் கற்ற பிறகு, கற்கின்றவர்களை புத்தகத்தை எடுக்கச் செய்து, மூன்றும் பாடத்தைக் கவனிக்கும்படி செய்துகொண்டு, அதிலுள்ள சொற்களை ஆசிரியர் ஜோடி ஜோடியாக வாசித்துக் காட்ட வேண்டும். பின்பு ஆசிரியர் சொற்களை எழுத்துக்கூட்டி வாசித்துக் காட்ட வேண்டும். ஆசிரியர் ஒவ்வொரு சொல்லாக எழுத்துக் கூட்டி வாசித்துக் காட்டக் காட்ட, மற்றவர் களும் அதன்படி எழுத்துக் கூட்டி வாசிக்க வேண்டும். எல்லாச் சொற்களையும் எழுத்துக்கூட்டி வாசிக்கத் தெரிந்த பிறகு, பாடத்தைப் பார்த்துக் கொண்டு சொற்களை எழுத்துக் கூட்டிச் சொல்லிக்கொண்டே சிலேட்டில் ஒரு கோட்டில் பிழையே இல்லாமல் எழுதச் செய்யவேண்டும்.

மாணவர்கள் எழுதுவதும் 1-ஆம் பாடத்திலுள்ள தமிழ் எழுத்துக்களின் அமைப்புப்படியே அழகாக எழுத வேண்டும். மூன்று கோடுகளுக்குக் கீழேயுள்ள எழுத்துக் களின் கீழ் வடிவம் மட்டும் ஒரு கோட்டிற்குக் கீழே இருக்கவேண்டும்.

3-ஆம் பாடத்தைப் பார்த்துப் பிழையில்லாமல் எழுதத் தெரிந்த பிறகு, அதிலிருந்து சில சொற்களை ஆசிரியர் சொல்லிக் கொண்டே போர்டில் எழுதிக் காட்ட வேண்டும். அதை மாணவர்களை எழுத்துக் கூட்டி வாசிக்கும்படி செய்ய வேண்டும். பின்பு டிக்டேஷன் போட வேண்டும். சொற்களில் டிக்டேஷன் போடும் போது மாணவர்களுக்கு ஒரு பிழைகூட ஏற்படாதிருக்க ஆசிரியர் அடிக்கடி எழுத்துக்களில் டிக்டேஷன் போட வேண்டும். புத்தகத்திலுள்ள சொற்களைப் பார்த்து எழுத்துக் கூட்டிச் சொல்லிக்கொண்டே பிழையில்லாமல் எழுதும்படி செய்ய வேண்டும்.

மூன்றும் பாடத்தைக் கற்றுக் கொடுத்தது போல சொற்களின் மற்றப் பாடங்களையும் கற்றுக்கொடுக்க வேண்டும். புத்தகத்தைப் பார்த்து பாடங்களை எழுதவும் வாசிக்கவும் முடியாதவர்களுக்கு பாடங்களை நோட்டில் பெரிய எழுத்தில் எழுதிக் கொடுக்க வேண்டும். இதற்காக பெரிய எழுத்துக்கள் கொண்ட புத்தகம் அவசியமில்லை.

சொற்றொடர்.

இரண்டு சொற்கள் சேர்ந்தது சொற்றொடர் எனப் படும். இப்படி இரண்டு சொற்கள் சேரும்போது இரண்டு சொற்களின் சத்தமும் அப்படியே கேட்டால் அதை இயல்புச் சொற்றொடர் எனப்படும். இரண்டு சொற்கள் சேரும்போது ஒரு எழுத்தின் சத்தம் அதிகமாகக் கேட்டால், அதை தோன்றல் சொற்றொடர் என்றும், ஒரு எழுத்து கெட்டுப்போனல் கெடுதல் சொற்றொடரென்றும்,

வேறொன்றாக மாறிக் கேட்டால் திரிதல் சொற்றொட ரென்றும், இரண்டு சொற்கள் சேரும்போது ஒன்றிற்கு மேற்பட்ட எழுத்துக்கள் மாறுதலாகக் கேட்டால் பலவிகாரச் சொற்றொட ரென்றும் சொல்லப்படும்.

மலை + நாடு = மலைநாடு என்பது இயல்புச்சொற்றொடர்.
வாழை + பழம் = வாழைப்பழம் என்பது
தோன்றல் சொற்றொடர்.
மரம் + வேர் = மரவேர் என்பது கெடுதல் சொற்றொடர்.
கல் + சட்டி = கற்சட்டி என்பது திரிதல் சொற்றொடர்.
சொல் + தொடர் = சொற்றொடர் என்பது
பலவிகாரச் சொற்றொடர்.

இரண்டு சொற்களையும் சேர்த்து மேலேகண்டபடி சொல்லாவிட்டாலும் எழுதாவிட்டாலும் பிழையாகும்.

சொற்றொடர் கற்றுக்கொடுக்கும் விதம்.

21-ஆம் பாடம் இயல்புச் சொற்றொடரை இரண்டு சொற்களைச் சேர்த்து எழுத்துக் கூட்டி வாசித்துக் காட்டுக. பின்பு மாணவர்களை எழுத்துக் கூட்டி வாசிக்கச் செய்க. எழுத்துக் கூட்டிச் சொல்லிக் கொண்டே பாடத்தைப் பார்த்துப் பிழையில்லாமல் எழுதும்படி செய்க. கடைசியில் டிக்டேஷன் போடுக.

22-ஆம் பாடம் தோன்றல் சொற்றொடரை இரண்டு சொற்களைச் சேர்த்து வாசித்துக் காட்டுக. இரண்டு சொற்களுக்கு நடுவில் தோன்றும் **க், ச், த், ப்; ங், ஞ், ந், ம்** ஆகிய மெய்யெழுத்துக்களை நன்கு அழுத்திச் சொல்லி வாசித்துக் காட்டுக. போர்டில் எழுதி நடுவில் தோன்றும் மெய்யெழுத்தை சாக்பீசால் கோடு போட்டுக் காட்டுக. சொற்றொடர்களை இந்த மெய்யெழுத்துக்களை நடுவில் இல்லாமல் வாசித்தும், எழுதியும் காட்டி சொற்கள்

ஒன்று சேராமல் இருப்பதையும் மெய்யெழுத்தின் சத்தம் இல்லாம லிருப்பதையும் விளக்குக. மாணவர்களை சொற்றொடரை எழுத்துக் கூட்டி வாசிக்கும்படி செய்க. பார்த்து எழுதும்படி செய்க. டிக்டேஷன் போடுக. **முத்துசாமி, அண்ணாதுரை, தினசெய்தி** என்று எழுதுவது வேண்டுமென்று **பிழையாக** எழுதுவதாகும். தமிழை வேண்டுமென்று பிழையாக எழுதிச் சிதைக்கின்றவர்களை அறிவுறுத்தல் வேண்டும். போய் கோண்டு; போய் சேர்ந்து என்பது போன்ற பிழைகள் கவனக் குறைவால் ஏற்படுவ தாகும். சொற்களுக்கு நடுவில் தோன்றும் **க், ச், த், ப்; ங், ஞ், ந், ம்** ஆகிய மெய் யெழுத்துக்களை மனப் பாடம் செய்யும்படி செய்க.

23-ஆம் பாடம் கெடுதல் சொற்றொடரை விளக்கி எழுத்துக் கூட்டிக்கொண்டே பார்த்து எழுதும்படி செய்க. டிக்டேஷன் போடுக.

24-ஆம் பாடம் திரிதல் சொற்றொடரை 2, 3 தடவை கள் வாசித்துக் காட்டி **ல் - ற்** ஆகவும், **ள் - ட்** ஆகவும், **ம்** என்பது **ங், ஞ், ந்** என்பவற்றில் ஏதாவது ஒன்றாகவும் மாறி, அதாவது திரிந்து வருவதையும் போர்டில் எழுதிப் போட்டு விளக்குக. எழுத்துக் கூட்டி வாசிக்கும்படியும், பார்த்தெழுதும்படியும் செய்க. கடைசியில் டிக்டேஷன் போடுக. **கல் + கண்டு** என்பதை **கல்கண்டு** என்று சத்தம் விட்டுக் கேட்கும்படி எழுதவும் வாசிக்கவும் கூடாது; பிழையாகும்.

செய்யுட் சொற்றொடர்களுக்கு ஏற்பட்ட இலக்கண விதிகளை சாதாரண வசனச் சொற்றொடர்களில் புகுத்தக் கூடாது. இதனால் தமிழ் வசனத்தைக் கற்பது கடினமாகி விடும். வசனத்தில் சொற்றொடர்களை இரண்டு சொற்கள் சேருவதால் ஏற்படும் சத்தத்தை நன்கு கவனித்து, சத்தப் படியே எழுத விட்டுவிட வேண்டும். **ல் - ற்** ஆகவும், **ள் - ட்** ஆகவும், **ம் - ங், ஞ், ந்** ஆகியவற்றில் ஏதாவது

ஒன்ருகவும் மாறி, அதாவது திரிந்து வருவதை மனப் பாடம் செய்யும்படி செய்க.

25-ஆம் பாடம் பலவிகாரச் சொற்ருடரை வாசித்துக் காட்டியும், போர்டில் எழுதிப் போட்டும் விளக்குக. எழுத்துக் கூட்டி வாசிக்கும்படியும் பார்த் தெழுதும்படியும் செய்க. கடைசியில் டிக்டேஷன் போடுக.

மெய்யெழுத்தின்மேல் உயிரெழுத்துச் சேரும் சொற்ருடர்களேயும், உயிர் மெய்யெழுத்திலுள்ள உ போய் வேறு உயிரெழுத்துச் சேர்ந்து வரும் சொற்ருடர்களேயும் 28-ஆம் பாடத்தில் கண்ட சொற்ருடர்களில் அநேகத்தை யும் பிரிப்பதற்கும் அருத்தம் தெரிந்து கொள்வதற்கும் ஏது வாக 26-ஆம் பாடம் மனப் பாடமாகத் தெரிந்திருக்க வேண்டும்.

பயிற்சிகள் பாடங்களில் கொடுக்கப்பட் டிருக்கின்றன.

வாக்கியங்களின் அமைப்பு.

ஒரு சொல்லோ ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களோ வந்து அதில் வினைமுற்று இருக்குமாளுல் அது வாக்கியம் எனப்படும். ஒரு சொல் மட்டும் வந்து அது வாக்கியமாக இருக்க வேண்டுமாளுல், அந்த ஒரு சொல், வினை முற்ருக இருக்க வேண்டும். அதில் இன்னெரு சொல், அதாவது பெயர்ச் சொல், வாக்கியத்தி லில்லாமலே எழுவாய்ப் பொருளை கொடுத்துக்கொண்டிருக்கும். இதைத் தோன்ருச் சொல் அல்லது தோன்ரு யெழுவாய் என்று சொல்வார்கள்.

படித்தேன் என்று சொன்ளுல், இதில் **நான்** என்ற பெயர்ச்சொல் தோன்ரு யெழுவாயாக, அதாவது தெரியாத எழுவாயாக இருக்கின்றது. **படித்தேன்** என்ற **வினை முற்று, பயனிலை** என்று சொல்லப்படும். **நான் புத்தகத்தைப் படித்தேன்** என்ற வாக்கியத்தில், **நான்** என்பது **எழுவாய். படித்தேன்** என்பது **பயனிலை. புத்தகத்தை** என்பது **செயப்படுபொருள்.**

பெயர்ச் சொல், வினைச் சொல், எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் முதலிய பெயர்களெல்லாம் இலக்கணப் பெயர்கள். தமிழ் இலக்கணம் கற்பதற்கு அதில் வரும் பெயர்களின் அருத்தத்தை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். தமிழ் இலக்கணத்தில் வரும் அரும் பதங்களுக்கு பொருள் தெரிந்துவிட்டால் போதும்; அதற்குள் தமிழ் இலக்கணம் கற்பதும் அடங்கிவிடும். இலக்கண அரும்பதங்களுக்கு அருத்தம் தெரிந்து கொள்ளாமல் இலக்கணம் கற்பது தவறாகும். நாம் பேசும் பேச்சிலுள்ள சொற்களுக்கெல்லாம் இலக்கணப் பெயர்கள் உண்டு.

எழுவாய்ப் பெயர்ச் சொல்லும், வினைமுற்றுச் சொல்லும் கொண்டதே வாக்கியம். வாக்கியங்களில் வரும் பெயர்ச் சொல், சில விதங்களாக மட்டும் மாறி வரும். வினைச் சொல் பல விதங்களாக மாறி வரும்.

தமிழ் வசனத்தை அதன் அமைப்புப்படி கற்பதற்கு தமிழ் எழுத்துக்களை முதலில் நன்கு கற்க வேண்டுமென்று பார்த்தோம். இரண்டாவது அதன் சொற்களை 2-ஆம் பாடம் முதல் 19-ஆம் பாடம் முடிய அமைத்துத் தெரிந்து கொண்டோம். மூன்றாவது அதன் சொற்களில் இரண்டு சேரும்போது தோன்றும் மெய் யெழுத்துக்களையும், கெடும் மெய்யெழுத்துக்களையும், திரியும் அதாவது மாறும் மெய் யெழுத்துக்களையும் பலவிகாரச் சொற்றொடரையும் 21 முதல் 25 முடியவுள்ள பாடங்கள் மூலமாகத் தெரிந்து கொண்டோம்.

முதலில் எழுத்துக்களைக் கற்றுக்கொண்டதால் எந்தச் சொற்களையும் பிழையின்றி உடனே எழுத வாசிக்க முடிகிறது. எந்தச் சொற்களையும் எழுத வாசிக்க முடிவதால் இரண்டு சொற்களைச் சேர்த்து எந்தச் சொற்றொடர்களையும் பிழையின்றி உடனே எழுத வாசிக்க முடிகிறது. எந்தச் சொற்களையும் சொற்றொடர்களையும் எழுத வாசிக்க முடிவதால் வாக்கியங்களை, அதாவது வசனத்தையே பிழையின்றி

எழுத வாசிக்க முடிகின்றது. வாக்கியங்களை உடனே எழுத வாசிக்கப் போகுமுன், பெயர்ச் சொற்கள் மாறுவதையும், வினைச் சொற்கள் மாறுவதையும் உதாரணச் சொற்கள் மூலமாகத் தெரிந்துகொண்டால், சொந்தத்தில் ஏராளமான வாக்கியங்களை எளிதாகச் சொல்லவும் எழுதவும் முடியும். இதற்காக இப்புத்தகத்தில் 34 பெயர்ச் சொற்கள் 8 வேற்றுமையுருபுகள் ஏற்று மாறுவதை வாய்ப் பாடு மாதிரி 31-ஆம் பாடத்தில் கொடுத்திருக்கிறோம். இதை மனப் பாடமாகச் சொல்லத் தெரிந்து விட்டால் எந்தப் பெயர்ச் சொல்லையும், எட்டு வேற்றுமை யுருபுக ளுடன் சேர்த்துச் சொல்லவும் எழுதவும் தெரிந்துவிடும். தமிழ் இலக்கணத்தின் இரகசியம் எங்களுக்குத் தெரிந்த தால், இதை விளக்கி நாங்கள் 31-ஆம் பாடத்தைப் போட் டிருக்கிறோம். பெயர்ச் சொற்களின் ஆண்பால், பெண் பால், ஒருமை, பன்மை ஆகியவைகளும் கொடுக்கப்பட் டிருக்கின்றன. வினைச் சொற்கள் இறந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் ஆகிய மூன்று காலங்களிலும் ஒவ்வொரு வினைப் பகுதியும் 27 விதங்களாக மாறி வருவதையும் விளக்கி யுள்ளோம். பயிற்சியில் கொடுத்திருக்கின்ற 31 வினைச் சொற்களை 27 விதங்களாகச் சொல்லத் தெரிந்துவிட்டால், எந்த வினைச் சொல்லையும் 27 வினை முற்றுகளில் சொல்லத் தெரிந்துவிடும்.

எழுத்தொலியும், சொல்லொலியும் ஒன்றாக இருக்கும் தமிழ் வசனத்தை எழுத்து, சொல், சொற்றொடர், வாக்கியம் என்று நான்கு பிரிவுகளாகப் பிரித்து, இது போன்ற புத்தகத்தின் மூலமாக எளிதாகக் கற்றுக்கொடுக்க வேண்டும். இப்படிச் செய்வதை விட்டு விட்டு எழுத் தொலியும், சொல் லொலியும் வெவ்வேறாக இருக்கும் ஆங்கில வாசகப் புத்தகங்களைத் தழுவி, குழப்பி எழுதப் பட்ட தமிழ் வாசகப் புத்தகங்கள் சர்க்கார் அங்கீகாரம் பெற்று பள்ளிகளில் புகுத்தப்பட்டு, தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் பெரும் பாதகம் செய்து வருகின்றன.

கொஞ்சங் கொஞ்சமாகப் புதுச் சொற்களைச் சேர்த்து (Graded) ஆங்கில வாசகப் புத்தகங்க ளிருப்பதுபோல தமிழ் வாசகப் புத்தகங்கள் தேவையில்லை. ஆரம்பப் பாடசாலைகளின் சட்டப்படி 5½ வயது முடிந்த பிள்ளைகளைத் தான் முதல் வகுப்பில் சேர்க்க வேண்டும். ஆனால், 5½ வயதிற்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகளும் முதல் வகுப்பில் சேர்க்கப்படுகிறார்கள். இவர்களுக்கு எழுத வாசிக்கக் கற்றுக் கொடுப்பது கெடுதலாகும். 5½ வயதிற்குக் கீழ்ப் பட்ட பிள்ளைகளை இப் புத்தகப்படி எழுத்து, சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவைகளை ஆசிரியர் சொல்லச் சொல்ல பிள்ளைகளைச் **சுத்தமாகச் சொல்லும்படி மட்டும் செய்தால் போதும்.**

ஆசிரியர்களும், மாணவர்களும் இப் புத்தகத்தைச் சில தடவைகள் வாசிப்பதன் மூலம் தமிழ் வசனத்தின் அமைப்பை நன்கு தெரிந்து கொள்வதுடன், தங்கள் பிழைகளைப் போக்கிக் கொள்ளலாம். 13 வயதிற்கு மேற் பட்ட எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு இப் புத்தகப் படி எழுத்துக்களைக் கற்றுக் கொடுத்து, சொல், சொற் றொடர், வாக்கியம் ஆகியவைகளின் பாடங்களையும் வாசிக்கும்படி செய்துவிட்டால், எந்தத் தமிழ் வசனப் புத்தகங்களையும் பிழையில்லாமல் வாசித்து விடுவார்கள். சில புத்தகங்களை வாசித்துப் பழகிய பிறகு, அவைகளைப் பிழையில்லாமல் எழுதிவிடுவார்கள்.

TAMIL NADU ARCHIVES LIBRARY MADRAS
No. 11497

பால குருகுல வித்யாலயக் கல்வித் திட்டத்தை விளக்கக் கூடிய பாட்டு.

(நமது ஜென்ம பூமி — என்ற மெட்டு.)

நமது பால குருகுலம்
நமது பால குருகுலம்
நமது பால குருகுலம்

1. சின்னஞ் சிறுவர் உள்ளங்கொண்டு
சேர்க்கும் நல்ல முறையதாய்
சிறந்த பண்பை காட்டுவிக்கும் (நமது)

2. கணித முறையும் கடைக்கணக்கும்
கன்னித் தமிழும் போற்றுதல்
காட்டி நம்மை யூட்டுவிக்கும் (நமது)

3. ஹிந்தி என்னும் பாஷைகற்று
இனிமை யாகப் பேசியே
இந்தியாவை அறிய வைக்கும் (நமது)

4. இந்தியாவின் நற்றொழில்கள்
எல்லாம் அறிந்து செய்யவே
எளிய முறையைக் காட்டுவிக்கும் (நமது)

5. நாட்டிலுள்ள பல துறைகள்
நாமே கண்டு நற்றொழில்
நடத்தும் வழியை நன்குணர்த்தும் (நமது)

6. ஏற்ற தேசத் தவர்களோடு
இணைந்து தொழில்கள் இயற்றவே
எளிய மார்க்கம் சாற்றுவிக்கும் (நமது)

7. பறவை யைப்போல் பறந்துசென்று
பாரில் வேறு நாட்டவர்
பாசங் கொள்ள வழியுரைக்கும் (நமது)

குருகுலத்தின் மலிவான சிறந்த வெளியீடுகள்.

(மூன்று புத்தகங்களுக்குக் குறையாமல் ஆர்டர் செய்தால்
அவைகளை அனுப்பும் தபால்ச் செலவு இலவசம்.)

தமிழ் வசனத்தை எளிதில் கற்கும் வழி ரூ 0—8—0
(இரண்டாம் பதிப்பு.)

சிறுவர் செய்யுட்கோவை (இரண்டாம் பதிப்பு)
(ஆத்திசூடி, கொன்றைவேந்தன், உலகநீதி, நறுந்தொகை,
மூதுரை, ஔவையார் தனிப்பாடல்கள் முதலியன
கொண்டது.) ரூ 0—1—6

தமிழ் 247 எழுத்துக்கள் கொண்ட அட்டை
(நான்காம் பதிப்பு) உச்சரிப்புப் பேதங்களை விளக்கும்
படங்களுடன் ரூ 0—1—0

பாலகுருகுல எண்சுவடி வாய்ப்பாடு. ரூ 0—3—0
(இரண்டாம் பதிப்பு அச்சில்)

கிடைக்குமிடங்கள்:—

1 நிர்வாகி, பாலகுருகுல வித்யாலயம்,
விருதுநகர்.

2 கி. பெ. சி. வ. பிரகாச நாடார், வியாபாரம்,
மஞ்சள்பேட்டை, **விருதுநகர்.**

3 கி. பெ. சி. வ. பிரகாச நாடார், வியாபாரம்,
மேலரத வீதி, சங்கரோஜிதப் பண்டிதர் தெரு,
திருநெல்வேலி டவுண்.

4 கி. பெ. சி. வ. பிரகாச நாடார், வியாபாரம்,
தெற்கு ராஜவீதி, **தூத்துக்குடி.**

சதானந்தா அச்சகம்—மகிழ்ச்சி இல்லம்—விருதுநகர்.